மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு நகரில் சில சர்வே எண்கள் 'அ' பதிவேட்டில் இலவச கைப்பற்று என்று உள்ளது. 151, 416, 429, 450, 433, 455, 517, 545 ஆகிய இந்த சர்வே எண்களில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக 1,500 பேர் வீடுகட்டி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்கெனவே மனுக்கள் அளிக்கப்பட்டு, வருவாய்த் துறை பரிசீலித்து தற்போது நில நிர்வாக ஆணையரிடம், CLA–விடம் உள்ளது. எனவே, அவர்களின் நலன் கருதி 1,500 நபர்களுக்கு விரைவில் பட்டா வழங்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றிகூறி, அமர்கிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

குடியாத்தம் நகரத்தில் நினைவுத்தூண் அமைத்துத் தர வேண்டும். குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை அமல்படுத்தித் தர வேண்டும். குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட 51 ஊராட்சிகளில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். பத்தலபள்ளி அணையைக் கட்டி முடித்து பேரணாம்பட்டு மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு உதவ வேண்டும்.

குடியாத்தம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலைகளை அகலப்படுத்தி இருவழிச் சாலைகளாக அமைத்து சாலையின் நடுவே தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும். குடியாத்தம் முதல் பேரணாம்பட்டு இடையில் தொழிற்பேட்டை அமைத்து வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும்.

குண்டலபள்ளி ஊராட்சிக்குட்பட்ட ராங்கம்பேட்டையில் வனத் துறை பகுதியில் சுமார் 3 கிலோமீட்டர் அளவிற்கு வனத் துறை அனுமதி பெற்று சாலை அமைத்துத் தர வேண்டும். குடியாத்தம் கங்காதரசுவாமி நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். மோர்தானா, சேம்பள்ளி, கொட்டாரமடுகு, குண்டலபள்ளி, அரவட்லா, எருக்கம்பட்டு, பத்தலபள்ளி ஆகிய பகுதிகளுக்கு, டவர் அமைத்து, தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தித் தர வேண்டும்.

பேரணாம்பட்டு பேருந்து நிலையத்தில் நிழற்கூடங்களை உருவாக்கித் தர வேண்டும். பேரணாம்பட்டை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் நிறுவனர், சத்துணவு தந்த சரித்திர நாயகர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறப்பளீஸ்வரர் என்கின்ற திருக்கோயிலின் கோபுர சிகரமாய்

திகழ்ந்த தனிப்பெரும் தெய்வம் எங்கள் அம்மா; உலகம் வணங்கும் மகராசி; உரிமை மீட்கும் கைராசி; உழைப்பினைக் காத்த மகராசி; உண்மையைப் போற்றும் செயலரசி; உழைப்பவரை உயர்த்தும் அருளரசி; பரிவால் சிறந்த பண்பரசி; தமிழகத்தை அன்பால் வென்ற தமிழரசி; மக்கள் இதய கோயிலில் வீற்றிருக்கின்ற எங்கள் வீட்டு குலசாமி அம்மா, நீங்கள் வங்கக் கடலோரம் உறங்கும் பாதத்தைத் தொட்டு வணங்குகிறேன். இந்திய அரசியலுக்கு ஓர் இலக்கணம் சொல்ல வேண்டுமென்றால், எல்லோரும் உச்சரிக்கும் பெயர் 'அம்மா, அம்மா, அம்மா'-தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுமைத் திறனாலும், நேர்கொண்ட பார்வையாலும், ஞான செருக்காலும், கள்ளமில்லா உள்ளத்தாலும், பணிவு கொண்ட செயலாலும், தனது வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் அம்மாவின் ஒட்டுமொத்த ஆசியோடும், தொண்டர்களின் நம்பிக்கையோடும் இன்று கழகத்தை மிகுந்த நேர்த்தியோடு வழிநடத்தக்கூடிய, எதிரிகளின் சிம்ம சொப்பனம், எங்கள் நம்பிக்கை நாயகர், கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்களது பாசத்திற்கும், நேசத்திற்கும், அன்பிற்கும், பண்பிற்கும் உரிய மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வணக்கங்களைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வழிநடத்திவரும் சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா, முன்னாள் அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகழ் வாய்ந்த சட்டசபையை சீரோடும், சிறப்போடும் வழிநடத்தும் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், இந்தப் பாரம்பரியமிக்க பேரவையில் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு, மக்கள் பணியாற்ற வந்துள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் அன்பு கலந்த வணக்கங்களைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988 முதல் கழகப் பணியாற்றிவரும் என்னை ஒன்றியக் குழு உறுப்பினராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும்,

2023 ஏப்ரல் 19] [திரு. சேவூர் S. இராமச்சந்திரன்]

2014-ல் சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2021-ல் ஆரணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றிபெறச் செய்த எங்கள் அன்பு அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். ஆரணி சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகளுக்கும், வாக்காளர்களுக்கும், தொண்டர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த ஒருசில முக்கியக் கோரிக்கைகளை இங்கே பேசிவிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுக்கிறேன். அவற்றை நான் பேசியதாகப் பதிவிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கித் தருமாறு கோருகிறேன்.

ஆரணி-ஆற்காடு இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றித் தரக் கோருகிறேன். ஆரணி முல்லன்றபுரம் சாலையில் இடையில் உள்ள வெட்டியான் தொழுவம் ஏரிக்கரை ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தரக் கோருகிறேன். ஆதனூர், தச்சூர், மேல்நகர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தரக் கோருகிறேன். ஆரியபாடி, வண்ணங்குளம் மற்றும் பனையூர் ஊராட்சிகளில் உள்ள ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தரக் கோருகிறேன். ஆரணி ஊராட்சி ஒன்றியம், ஆரியப்பாடி ஊராட்சி, துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், ஒன்னுபுரம் ஊராட்சியிலிருந்து புதுப்பாளையம் ஊராட்சி வரை நாகநதி ஆற்றின் குறுக்கே ஒரு தரைப் பாலம் அல்லது மேம்பாலம் அமைத்துத் தரக் கோருகிறேன். ஆரணி நகரில் உள்ள அரசு மருத்துவமனையைத்

தரமுயர்த்தித் தருமாறும், ஆரணி நகருக்குப் புறவழிச் சாலை அமைத்துத் தருமாறும், ஆரணி கிராமிய காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து கூடுதலாக ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்துத் தருமாறும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் கடந்த பத்தாண்டுகளாக இந்தத் துறை இருந்ததாகத் தெரியவில்லை; இந்தத் துறை செயல்பட்டதா என்ற குற்றச்சாட்டை வைத்துள்ளார்கள். எனவே, துறை சார்ந்த அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்சிக்கு எளியவனாய், கடுஞ்சொற்கள் பேசாதவனாய். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு சொல்கிறீர்களா! நன்றி.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: சாமானியனாக இருந்த நான், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் காலத்தில் இந்து சமய அறநிலையத் துறை இறைவனின் பணி என்பதால், எந்தவித விளம்பரமும் இன்றி அமைச்சராகச் செயல்பட்ட துறையில், தற்போது இருப்பவர்கள் தம்மை முன்னிலைப்படுத்திக்கொள்வதைக் காட்டிலும், ஆண்டவனை முன்னிலைப்படுத்திச் செயல்பட வேண்டுமென்று இச்சபையில் கோரிக்கை விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குக் கடந்த முறை கும்பாபிஷேகம் நடைபெற்றபோது, ஆன்மிக விதிகளுக்கும், மரபுகளுக்கும் மாறாக விழா நடைபெற்றதாக ஆன்மிகவாதிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நிறைய பேர் கருவறைக்குள் சென்றது, கோயில் புனிதம் பாதிக்கப்பட்டதாகவும் மக்கள் மனநிலை உள்ளது. இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு அறநிலையத் துறைக்கு உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2023 ஏப்ரல் 19] [திரு. சேவூர் S. இராமச்சந்திரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில், சுற்றுலாப் பயணிகளின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லதோர் அறிவுரையை வழங்கினார். திருக்கோயில்களை முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாகத் தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்கிறார்கள். தெய்வத்தை முன்னிலைப்படுத்தி, தெய்வத்திற்கான அனைத்து ஆராதனைகளையும் அனைத்து பூஜைகளையும் செய்கின்றபோது, அதற்குக் காரணமாக இருக்கின்ற ஆட்சி எந்த ஆட்சி, அந்த ஆட்சியின் மாண்புமிகு முதல்வராக இருப்பவர் யாரோ, அவரை முன்னிலைப்படுத்துவது என்பது தடுக்க முடியாத ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்தில், தெய்வத்திற்கு செய்ய வேண்டிய திருப்பணியையும் நீங்கள் முன்னிலைப்படுத்தவில்லை; உங்களையும் நீங்கள் முன்னிலைப்படுத்திக்கொள்ளவில்லை. அந்த இந்து சமய அறநிலையத் துறை ** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களது ஆட்சிக் காலத்தில், (குறுக்கீடுகள்) அவர் சொன்னாரல்லவா! அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன். அவர்தான் சொன்னார். (குறுக்கீடுகள்) அவர்தானே சொன்னார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும். ஒருவர் எழுந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்லி முடிக்கட்டும். ஒருவர் எழுந்து பதில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதற்காக ஏன் மொத்தமாக எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் கருத்து சொல்வதாக இருந்தால் நான் வாய்ப்பளிக்கிறேன். (குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: அதேபோன்று, பத்தாண்டுகள் அளப்பரிய சாதனைகளைச் செய்ததாகச் சொன்னார். அவர்கள் பத்தாண்டுகளில் ஒட்டுமொத்தமாக அறிவித்த திருப்பணி அறிவிப்புகள் 65. அதில் தேர் கொட்டகை மட்டும் 9. அந்த 9 தேர் கொட்டகைகளும் எந்த மாவட்டத்திற்குத் தெரியுமா? திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மட்டும் 9 தேர் கொட்டகைகளை அறிவித்துக்கொண்டார். (குறுக்கீடுகள்) அந்தத் தேர் கொட்டகைகளும் அறிவிக்கப்பட்ட பிறகு, அந்தப் பணிகளை அவர்களது ஆட்சிக் காலத்திலேயே எடுத்து நிறைவேற்ற முடியாததால், யார் கொண்டுவந்தாலும் தேர் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தற்போது அந்தத் தேர் கொட்டகைகள் பணிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர் ஏதாவது விவரம் தேவை என்று பேசினால், அந்த 65 அறிவிப்புகளும் என்னென்ன நிலைகளில் இருக்கின்றன என்பதை விலாவாரியாக எடுத்துக்கூற நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவரே அதைச் சொல்லலாமே! (குறுக்கீடு) ** என்கிற வார்த்தைகளை நீக்கிவிடலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கதிரவன் அவர்கள் பேசும்போது, கருவறைகளெல்லாம் பத்து வருடங்களாக இருட்டடிப்பு செய்யப்பட்டன என்று பேசியதற்குத்தான் அவர் பதில் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சரியாகச் சொல்கிறாரா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) எனவே, அது இரண்டையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) திரு. சேவூர் S. இராமச்சந்திரன், அதற்கு எதிர் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சேவூர் S. இராமச்சந்திரன், அதற்கு எதிர் கருத்தைச் சொல்லுங்கள். அவர்கள் சொன்னதற்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய உறுப்பினர் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக எந்தப் பணியும் நடைபெறவில்லை; இந்தத் துறை இருந்ததாகவே தெரியவில்லை என்று கூறிய காரணத்தினால், நாங்கள் விளம்பரப்படுத்தாமல், தமிழகத்திலுள்ள அத்தனை திருக்கோயில்களும் புனரமைக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) கும்பாபிஷேகம் செய்யப்பட்டதைத்தான் கூறினேனே தவிர, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் கருவறைக்குள் பக்தர்கள் செல்கிறார்கள் என்று கூறினேனே தவிர, ** என்று சொல்லவில்லை. அதைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள் என்று பணிவுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கன்னியாகுமரி சுற்றுலாத் தலத்திற்குப் பயணிகள் வசதிக்காக மேலும் இரண்டு அதிநவீன படகுகள் 2020 ஆம் ஆண்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தலா ரூ.4 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டன. இந்த இரண்டு படகுகளையும் மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓர் அரசினுடைய கடமை திருக்குளங்களைச் சுத்தப்படுத்துவது, திருத்தேர்களைச் செப்பனிடுவது, வருமானம் குறைவாக உள்ள கோயில்களுக்கு வருமானம் அதிகம் ஈட்டக்கூடிய கோயில்களிலிருந்து பணத்தைக் கொடுத்து புனரமைப்பது, சமயநெறியை உருவாக்குவது, கோயில்களின் வெளிப்புறங்களைச் சுத்தப்படுத்துவது போன்ற பணிகளைச் செய்வதுதான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையில் கடந்த சில காலங்களாக அன்றாட அவசிய, அத்தியாவசியப் பணிகளைச் செய்வதைக்கூட அதிகமாக விளம்பரம் செய்துகொள்கிறார்கள் என்று மக்கள் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் பெற்றுக்கொள்ளுங்கள்; விளம்பரத்திற்குப் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரத்தாலே உயர்ந்தவன் வாழ்க்கை நிரந்தரம் ஆகாது என்பதை ஆணித்தரமாகத் தெரிந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இரண்டு ஆண்டுகள் நெருங்குகின்ற இந்தக் காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையில் மட்டும் 42 நிகழ்ச்சிகளில் பங்கேற்று இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 42 நிகழ்ச்சிகளுக்காக ஒரேயொரு சல்லிக் காசுகூட இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் விளம்பரத்திற்காகச் செலவு செய்யப்படவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று. எப்போதுமே மக்கள் பாராட்டுகின்ற, மக்களுக்குப் பயனளிக்கின்ற நிகழ்ச்சிகளாக இருந்தால், அவற்றை ஊடகங்கள் பெரிதாகக் காண்பிக்கத்தான் செய்யும். அந்த வகையில் நாங்கள் செய்த நிகழ்ச்சிகள் மக்கள் ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சிகளாகவும், ஊடகங்கள் ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சிகளாகவும் இருந்ததால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அதில் பெரிய அளவிற்கு விளம்பரம் வந்தது. உங்கள் ஆட்சிக் காலத்தில், மேற்கொண்டு சொன்னால் வருத்தப்படுவீர்கள்; ஆகவே, விளம்பரத்தை நாங்களாக தேடிச் செல்லவில்லை; எங்களுடைய திட்டங்களினால் அந்த விளம்பரங்கள் கிடைத்தன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள். 7 நிமிடங்கள் முடியப் போகிறது. சீக்கிரம், உரையை முடியுங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கடந்த காலங்களில் திருக்குளங்களும், திருத்தேர்களும் முறையாகச் செப்பனிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தன. மேலும், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வராத குளங்களைக்கூட மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் குடிமராமத்துத் திட்டத்தைப் பயன்படுத்தி அனைத்துக் குளங்களும் சீரமைக்கப்பட்டன. இதைப்போல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதல்வர், குடிமராமத்து நாயகன் அவர்களின் திட்டமான குடிமராமத்துத் திட்டத்தை இந்த அரசும் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

கடந்த 5–4–2023 அன்று சென்னை, நங்கநல்லூரில் அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர் கோயில் திருவிழாவின்போது ஐந்து அர்ச்சகர்கள் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நடைபெற்றது. குளத்தைச் சீர் செய்திருந்தால் இச்சம்பவம் நிகழாமல் தவிர்த்திருக்கலாம். எனவே, இனி வருங்காலங்களில் தமிழகத்திலுள்ள அனைத்துக் குளங்களையும் திருக்கோயில் நிதி அல்லது குடிமராமத்துத் திட்டத்தைப் பயன்படுத்தி சீர்செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனைச் சரியாக அணுகியது மாண்புமிகு அம்மாவின் அரசு. கடந்த காலங்களில் கோயில் குளங்கள் அதிக கவனத்துடன் கையாளப்பட்டன. கடந்த 2021 வரை திருக்கோயில் நிதி மற்றும் ஆணையர் பொதுநல நிதியினை எப்போதும் உபரி நிதியாக சேமித்து, தக்க வைத்து பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது அனைத்துக் கோயில்களையும் மின்னணுமயமாக்குதல் என்ற பெயரில் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி ஆண்டாண்டுக் காலமாக சேமித்து வைத்திருந்த ஆணையர் பொதுநல நிதி கொஞ்சம் கொஞ்சமாகச் செலவு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். இதுவே, இந்த அரசின் சாதனையாக உள்ளது. எனவே, ஆணையர் பொதுநல நிதியின் தற்போதைய இருப்பு பற்றிய விவரத்தைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் ** என்று தெரியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், அந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *நிதி என்று இருந்தால், அந்த நிதியைச் செலவு செய்து திட்டங்களைக் கொண்டுவருவதுதான் ஓர் ஆட்சிக்குரிய சிறப்பாகும். ஆணையர் பொதுநல நிதியிலிருந்து கோயில்களுக்குத் திருப்பணி செய்வது என்பது கடமை. அந்தக் கடமையைச் செய்கின்றபோது ஆணையர் பொதுநல நிதியிலிருக்கின்ற நிதி குறையத்தான் செய்யும். அந்த நிதியைச் செலவு செய்வதில் எங்கேயாவது தவறுகளோ அல்லது வேறு ஏதாவது முறைகேடுகளோ நடந்திருந்தால் சுட்டிக்காட்டுங்கள். நிதியை செலவு செய்வதே தவறு என்று கூறுவது விந்தையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த நிதியை கோயில் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் கூறுகிறேனே தவிர,* wiring *செய்வதற்கும், மின் பணிகள் செய்வதற்கும் உபயோகிக்கக் கூடாது என்றுதான் கூறினேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனையைத்தான் சொல்கிறார்கள். அந்த நிதியை எடுத்து திருப்பணி மேற்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: ஆன்மிகம் என்று சொன்னாலே நினைவுக்கு வருவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலும், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலும் சுமார் 11 ஆயிரத்து 500 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மானியக் கோரிக்கையின்போது, இங்கே எனக்கு முன்பாக நீங்கள் 40 அறிவிப்புகளைத்தான் அறிவித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். 10 நிமிடங்கள் ஆனவுடன் நான் மணியடித்துவிடுவேன். நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: நாங்கள் 400 அறிவிப்புகளை அறிவித்தோம். அந்த அறிவிப்புகளில் இதுவரை குடமுழுக்கு செய்த பணிகளோடு, திருப்பணிகளும் நடத்தப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டி, அறிவித்த அத்தனை பணிகளையும் விரைவாக நடத்தி முடித்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்தான். அதற்குமேல் ஒரு நிமிடம் கொடுக்க இயலாது.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மேலும், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசால் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ.40 கோடி செலவில் யாத்ரி நிவாஸ் கட்டி முடிக்கப்பட்டது. மேலும், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.20 கோடி செலவிலும்,

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.29 கோடி செலவிலும் யாத்ரி நிவாஸ் கட்டி முடிக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலில், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ரூ.20 கோடி செலவில் நவீன வசதியுடன்கூடிய பிரம்மாண்டமான திருமண மண்டபமும் மற்றும் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.22 கோடி செலவில் நவீன வசதியுடன்கூடிய திருமண மண்டபமும் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். பதிலுரை. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும், நன்றி பதிவு செய்தாகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களே உட்காருகிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், ஒரேயொரு நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் நாளும் எங்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும், அறிவுரைகளையும் வழங்கி, இன்று மட்டுமல்ல, என்றும் எங்களுடன் இருந்து எங்களை வழி நடத்தும் அண்ணன் எடப்பாடியார் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆரணி சட்டமன்றத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறத் தொடங்கினர்.)

இன்றைக்கு கடவுள் கோரிக்கை; கடவுளுக்கு விரோதமாக? உங்களுக்கு பக்தி இல்லையா? மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம் அவர்களும், நீங்களும் பக்தி இல்லாமல் போகிறீர்களே?

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் அவையில் இருந்தனர்.)

(திரு. மு. ஜெகன் மூர்த்தி ஏற்கெனவே அவையில் இல்லை.)

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *அவர்கள் போய்விடட்டும். ஏதாவது காதில் விழுந்து, திரும்பி வந்துவிடப் போகிறார்கள். (குறுக்கீடு)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

நன்றி, வணக்கம் சொல்லி உட்கார்ந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். நீங்கள் தேவையான பதிலை அளித்திருக்கிறீர்கள். இன்னும் முழுமையாக நீங்கள் பதிலுரையாற்றி முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்; அதைச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் முழுமையாக இந்த அவையில் பதிலுரையாற்ற வேண்டும் என்று சொல்கிறேன்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் அகரமே! ஈரடி வள்ளுவத்தின் வழி நடக்கும் ஆறடி சிகரமே! ஆளுநர் உரைக் குறிப்பில் நீக்கப்பட்ட தலைவர்கள் பெயரை அவைக் குறிப்பில் இடம் பெற வைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை மகிழ்வுடன் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவுலக ஆசான் பெரியாருக்கு என் முதல் வணக்கம். உரை வீச்சால் உலகளந்த பேரறிஞர் அண்ணாவுக்கு என் வணக்கம். எழுதுகோலால் தமிழ் இனத்தையே எழ வைத்த முத்தமிழறிஞர் நம்மோடு வரலாறாய் வாழ்ந்து கொண்டிருக்கும் வான்புகழ் கலைஞருக்கு என் வணக்கம்.*

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையை அண்ணாந்து பார்க்க வைக்கும் எங்கள் முதல்வருக்கு ஆயிரமாயிரம் வணக்கங்கள். என் நாடு தமிழ்நாடு இந்தப் பெயருக்கு உலகில் ஏதுமில்லை ஈடு. இதற்கு ஒரு அவப்பெயர் ஏற்படுமாயின், எதிர்த்து நிற்பேன் துணிவோடு என்று மூவாயிரம் ஆண்டு மொழி வரலாற்றை தன் தோளில் சுமக்கும் எங்கள் தூயவரே; தமிழரின் சுயமரியாதைக்கொரு பங்கம் வரும்போதெல்லாம் பொங்கி, களமாடி, புரட்டிப் போடுகின்ற புரட்சி சரித்திரமே; மாமன்னர்கள் உருவாக்கிய கம்பீரமான கலைக் கோயில்கள் முத்தமிழறிஞர் கலைஞரின் கம்பீரமான தவப் புதல்வர் கையில் இன்று பாதுகாப்பாக இருக்கின்றன. தனி மனிதன் வீழலாம், தமிழ்நாடு மட்டும் வீழவே கூடாது என்ற உணர்வோடு செயல்படும் இணையற்ற முதல்வரே, இனம் காக்கும் எங்கள் தலைவரே; இயங்குகின்ற தலைவராகவும், எங்களையெல்லாம் இயக்குகின்ற தலைவராகவும் இருக்கின்ற எங்கள் தலைவருக்கு முதல் வணக்கம்.

நிர்வாகத் திறன், கொள்கைப் பற்று ஓய்வில்லா உழைப்பு– இவற்றால் பெற்ற புகழால் மயங்கிப் போகாத மாண்பாளர், எங்கள் முதல்வர்; அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்; அன்னைத் தமிழிலே வழிபாடு செய்யலாம்; பெண்களும் ஓதுவாராகலாம் என்று செய்து காட்டி இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த திராவிடத் திருப்புமுனையே; ஒரு சிட்டுக்குருவி கிளையில் உட்காரும்போது கிளையை நம்பி உட்காருவதில்லை. தன் சிறகை நம்பியே உட்காருகிறது. கிளை எப்போது வேண்டுமானாலும் முறியலாம்; பறப்பதற்குச் சிறகு இருப்பதே பாதுகாப்பானது. இந்தப் பாடத்தை நாளும் எங்களுக்கு நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் நம்பிக்கை நாயகரே, எங்கள் முதல்வரே, மீண்டும் ஒரு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் உயிர் துடிப்பான முதல்வருக்கு மீண்டும், மீண்டும் வணக்கங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கையின் ஜீவ நதியே, எங்களின் உதயநிதியே, நம் வீட்டுப் பிள்ளையை விளையாட்டாய் நினைத்தவர்கள் வியந்திட அடித்து விளையாடும் எங்கள் ஆதவனே, ஓடுகிற நீரில்தான் ஆக்சிஜன் அதிகம் இருக்கும் என்பார்கள். ஓடுகிற நீரில்தான் ஆக்சிஜன்

அதிகம் இருக்கும் என்பார்கள். ஓடி ஓடி உழைக்கும் உதயநிதியின் செயல்பாடோ கழக உயிர் மூச்சின் ஆக்சிஜன். ரசிகர்களா, தொண்டர்களா எனப் பிரித்து பார்க்க முடியாத அளவுக்குத் தமிழகமெங்கும் இளைஞர் பட்டாளத்தை ஈர்த்து வைத்திருக்கும் கழகத்தின் காந்தமே, உங்களுக்கும் ஒரு வணக்கம். பட்டியலின மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட ஐயா, இளைய பெருமாள் அவர்களுக்கு நினைவு அரங்கம் அமைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சாதனைகளைச் சொல்வதென்றால், மன்னராட்சிக் காலம், முன்னர் ஆட்சிக் காலம், எக்காலத்தையும்விட பொற்காலம், நம் முதல்வரின் திராவிட மாடல் காலம். ஒருவர் சாதனையை ஒருவர் முறியடிக்கலாம். நம் முதல்வரின் சாதனையோ முறியடிக்கவே முடியாத சாதனை. அவர் இந்து சமய அறநிலையத் துறைக்கு மட்டும் ஆற்றிய சாதனையை அறிவிப்பதென்றால், ஒரு மணி நேரம் அல்ல; ஒரு நாள் அல்ல; ஒரு வாரம் அல்ல; ஒரு மாதம்கூட போதாத ஒரு சூழ்நிலைதான் இந்து சமய அறநிலையத் துறையின் வரலாறு. இம்மாமன்றம் எனக்கு ஒதுக்கிய நேரத்திற்குள் நான் சிலவற்றை எடுத்துரைக்கிறேன். எனக்கு ஒரு சில மணித்துளிகள் அளித்தால் சாதனைகளைச் சொல்லி நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 ஆயிரம் திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தியதாக அள்ளி வீசிவிட்டுச் சென்றார்கள். அப்படி நடத்தியிருந்தால், அந்தப் பட்டியலை நிச்சயமாக அவர்களால் தர இயலாது. சமயக்குரவர் நால்வர் நடத்திய சமயப் புரட்சிபோல், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை 632 திருக்கோயில்களுக்கு ரூ.128 கோடி மதிப்பீட்டில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. இவற்றுள் 100 ஆண்டுகளைக் கடந்து குடமுழுக்கு நடந்த திருக்கோயில்கள் 8 அடங்கும். 400 ஆண்டுகளைக் கடந்த திருவட்டாறு திருக்கோயிலும் அடங்கும். இப்படி கும்பாபிஷேகங்களை அதிகமாக நடத்தியதால்தான் இன்றைக்கு ஒன்றிய அளவிலேயே தமிழ்நாடு குடமுழுக்குப் பணியிலே முதன்மை பெற்றிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருகால பூஜை திட்டம். இந்தத் திட்டமானது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் 12 ஆயிரத்து 959 திருக்கோயில்களில் செயல்பாட்டில் இருந்தது. இந்தத் திட்டத்திற்கு 1 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அழைத்து, 1 இலட்சம் ரூபாய் என்றால் வைப்புத் தொகையில் கிடைக்கின்ற வட்டித் தொகை எவ்வளவு என்று கேட்டார். ஓராண்டிற்கு 8,000 ரூபாய் என்று எடுத்துக்கூறினோம். 8,000 ரூபாயில் எப்படி ஒரு தெய்வத்திற்குண்டான விளக்கு போன்ற அன்றாட நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும் என்று கூறி 130 கோடி ரூபாயை ஒரே தவணையில் தந்து வைப்பு நிதி ரூ.1 இலட்சமாக இருந்ததை ரூ.2 இலட்சமாக மாற்றிக் காட்டிய பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும்.

பிற்பகல் 3-00

அதன்பிறகு, ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் இப்படி ஒருகால பூஜை திட்டத்திலே எத்தனை கோயில்கள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கச் சொன்னார். முதல் கட்டமாக கடந்த ஆண்டு 2,000 திருக்கோயில்களுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 15 ஆயிரம் கோயில்களில் இன்றைக்கு ஒருகால பூஜை நடைபெறுவதற்குக் காரணமாக இருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் அழுத்தத்தோடு பதிவு செய்கிறேன்.

அதோடு நிற்கவில்லை. அந்தத் திருக்கோயில்களுக்குப் பக்தர்கள் வருகை குறைவாக இருக்கும். அந்தத் திருக்கோயில்களில் இருக்கின்ற அர்ச்சகர்களின் நிலையைப் பற்றி கேட்டறிந்தார். உடனடியாக, இதுவரையில் எந்தவிதமான ஊதியமும் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த அர்ச்சகர்களிடம் வங்கிக் கணக்கை ஏற்படுத்தச் சொல்லி, ரூ.1,000/– மாதந்தோறும் தந்து கொண்டிருக்கின்ற பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னராட்சியில் வழங்கப்பட்ட மானியம் மக்களாட்சியிலும் தொடர்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி

மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால், 490 திருக்கோயில்கள். அந்த 490 திருக்கோயில்களுக்குச் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மானியமாக இருந்த நிலை. அதனைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி, மூன்று கோடி ரூபாயாக இருந்தது, அந்த மூன்று கோடி ரூபாயை கடந்த ஆண்டு ரூ.6 கோடியாக மாற்றித் தந்த பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்களுக்குண்டான மானியத் தொகை ஒரு கோடி ரூபாயாக இருந்தது. அதனை 3 கோடி ரூபாயாக மாற்றித் தந்த பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) *தஞ்சாவூர் தேவஸ்தானக் கட்டுப்பாட்டில் மொத்தம் 88 திருக்கோயில்கள் வருகின்றன. அந்த 88 திருக்கோயில்களில், சில திருக்கோயில்கள்தான் வருமானம் உள்ள கோயில்களாகும். மீதமுள்ள திருக்கோயில்களுக்கு விளக்கு ஏற்றுவதற்குக்கூட வசதியில்லாத நிலை. இதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்விலே தெரிந்து கொண்டு, முதல்முறையாக 3 கோடி ரூபாய் மானியத்தை அள்ளி வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாழக் கிடப்போரை தற்காப்பதே தர்மம்' என்று சொன்ன அய்யா வைகுண்டரின் மறுவடிவே, எங்கள் முதல்வர் என்பதை இந்த நேரத்தில் பதிவிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 ஆண்டுகளுக்குமேல் பழமையான கோயில்கள் என ஒட்டுமொத்தமாக 714 கோயில்கள் கண்டறியப்பட்டன. இந்தத் திருக்கோயில்கள் அனைத்தையும் குடமுழுக்கு செய்து, புனரமைக்க வேண்டுமென்று திட்டமிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு 100 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கீடு செய்தார். அந்த 100 கோடி ரூபாயில் 47 கோயில்கள் குடமுழுக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், 33 கோடி ரூபாய் செலவில் உபயதாரர்கள் 66 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய முன்வந்திருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக 714 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் தொடங்கியிருக்கின்றன. இந்த வேகத்தைப் பார்த்தால்,

முழுமையாக 714 திருக்கோயில்களிலும் ஐந்து ஆண்டுகளிலே குடமுழுக்கு நடைபெறும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பராந்தக சோழன், விக்ரம சோழன், இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன், மகேந்திரவர்ம பல்லவன், நரசிம்மவர்ம பல்லவன், சுந்தர பாண்டியன் போன்ற மன்னர்களின் வரிசையில் தமிழகத்தின் இன்றைய மக்களாட்சி மன்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரும் இடம் பெறும். (மேசையைத் தட்டும் ஒலி) இது காலத்தின் கட்டாயம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்திட்டப் பணிகள். வட மாநிலங்களில் மட்டும்தான் 200 கோடி, 300 கோடி ரூபாயில் திருக்கோயில் பெருந்திட்டப் பணிகள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதை தமிழகத்தின் பக்கம் திருப்பிய பெருமை நம்முடைய முதல்வர் அவர்களைச் சாரும். திருச்செந்தூரில் ரூ.324 கோடி அளவிற்கு பெருந்திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) பெரியபாளையத்தில், பவானி அம்மனுக்கு ரூ.170 கோடியில் பெருந்திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) தீபங்கள் சிரிக்கின்ற திருவண்ணாமலையிலே 118 கோடி ரூபாய் செலவிலே பெருந்திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கன்குடியில், 109 கோடி ரூபாய் அளவிலே பெருந்திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இராமேஸ்வரத்தில் 150 கோடி ரூபாய் அளவிலே பெருந்திட்டம். பழனியில் 100 கோடி ரூபாய் அளவிற்கு பெருந்திட்டம். வடலூர், வள்ளலார் சர்வதேச மையம் கடலூரிலே 100 கோடி ரூபாய் அளவிற்கு பெருந்திட்டம். திருவேற்காட்டில் 62 கோடி ரூபாய், திருத்தணியில், 90 கோடி ரூபாய், சமயபுரத்தில் 62 கோடி ரூபாய் என்று தொடரும் திருப்பணிகள். மக்களாட்சி தொடங்கியதிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டு வரலாற்றில் இவ்வளவு பெரும் தொகையில் திருப்பணிகள் நடைபெற்றது இதுவே முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாதனைகளைக் கண்டு வேற்று மாநிலத்தவர்களும் விழிகள் விரிந்து பார்க்க வைத்த பெருமை நம் முதல்வர் அவர்களைச் சாரும். என்னைப் புகழ வேண்டாம் என்கிறார் முதல்வர்;

இது அரச கட்டளை. என்னைப் புகழ வேண்டாம் என்று சொல்கிறார் முதல்வர்; இது அரச கட்டளை. இந்து சமய அறநிலையத் துறை சாதனைகளைச் சொல்ல வேண்டியுள்ளது; இந்து சமய அறநிலையத் துறை சாதனைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இது ஆண்டவன் கட்டளை. இது புகழுரை அல்ல, உண்மைக்கு எழுதப்படும் பொழிப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் அடையாளங்களில் ஒன்றாக உயர்ந்து நிற்பவை இராஜகோபுரங்கள். இம்மண்ணின் பெருமையைப் பறைசாற்றும் கோபுரங்கள் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டவை. இன்று நம் முதல்வர் ஆட்சியில் ஒன்றல்ல, இரண்டல்ல எண்ணற்ற இராஜகோபுரங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிறைவான திருப்பணிகள் எட்டப்படுகின்றன. அவை சாதனைகளாக விண்ணை முட்டுகின்றன.

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் 7 நிலை இராஜகோபுரம் உட்பட 6 திருக்கோயில்களில் இராஜகோபுரங்கள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த 2022–2023 ஆம் ஆண்டு இதேபோல் 7 திருக்கோயில்களுக்குப் புதிய இராஜகோபுரங்கள் அறிவிக்கப்பட்டு ரூ.33 கோடி செலவில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் 9 நிலை இராஜகோபுரமும் ஒன்று. இது முடிவல்ல. இந்த ஆண்டும் புதிதாக இராஜகோபுரங்கள் கட்டுவதற்கு மூவேந்தர்கள் வழிவந்த நம் முதல்வர் அனுமதி அளித்துள்ளார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டணமில்லாத் திருமணங்கள் குறித்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். இந்தத் திட்டம் 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடரவில்லை. இதை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்கள், அதேபோல் தெய்வ சந்நிதானங்களில் இந்தத் திருமணங்கள் நடப்பதாக உறுதியாக நம்புகிற மக்களுக்கு இந்தத் திட்டத்தைத் தொடர வேண்டுமென்றார். கடந்த ஆண்டு 500 பேருக்கு இந்தத் திட்டத்தை அறிவித்து, ரூ.20,000/– என்றிருந்த நிதியை தற்போது, முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் ரூ.50,000/– ஆக மாற்றி, 500 ஜோடிகளுக்கும் திருமணத்தை நடத்தி முடித்த

பெருமை இந்து சமய அறநிலையத் துறையைச் சாரும். இந்த ஆண்டும் இந்தத் திட்டம் தொடரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்க முதலீடு. தங்கத்தையே துருப்பிடிக்க வைக்க முயற்சித்தது கடந்த ஆட்சி. அதை முறைப்படி உருப்படியாக்கியது நம் தங்க மகன் தளபதி ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வங்களுக்குக் காணிக்கையாக வந்த, பயன்படுத்த இயலாத பலமாற்றுப் பொன் இனங்களை மூட்டை மூட்டையாகக் கட்டிப்போட்டு முடக்கி வைத்திருந்தது அந்த ஆட்சி; அவற்றை மூட்டை மூட்டையாகக் கட்டிப்போட்டு முடக்கி வைத்திருந்தது அந்த ஆட்சி. முடங்கிக் கிடந்த இந்தத் திட்டத்தை முடுக்கி விட்டதால் இன்றைக்கு ரூ.2 கோடிக்கும் அதிகமான முதலீட்டால் நான்கு திருக்கோயில்களுக்கு வட்டி வந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறினால், குறைந்தபட்சம் ஆண்டிற்கு ரூ.50 கோடி அளவிற்குத் திருக்கோயில்களுக்கு வருமானம் வருகின்ற உன்னதமான திட்டமாக இப்போது செயல்பாட்டிலே வந்தது.

இந்தத் திட்டத்தைப் பற்றிக் கூற வேண்டுமென்றால், இந்தத் திட்டத்தைத் தடுக்கப் பார்த்தார்கள்; சுமத்தப் பார்த்தார்கள் இந்து விரோதி பட்டத்தை; தடுக்கப் பார்த்தார்கள்; சுமத்தப் பார்த்தார்கள் இந்து விரோதி பட்டத்தை; வளைக்கப் பார்த்தார்கள் சட்டத்தை; இறுதியாய் நம் முதல்வர் வென்று அடக்கினார் அவர்களுடைய கொட்டத்தை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் என்றால் திருவாரூர். திருவாரூர் என்றால் ஆழித் தேர். அன்று ஓடாத ஆழித் தேரை ஓட வைத்தவர் கலைஞர். 87 ஆண்டுகள் ஓடாமல் இருந்த அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் திருக்கோயில் தேரையும், 80 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சீட்டணஞ்சேரி அருள்மிகு காளீஸ்வரர் திருக்கோயில் தேரையும் வீதியுலா வர வைத்தவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இப்படி 2 ஆண்டுகள் முதல் 87 ஆண்டுகள் வரை ஓடாமல் இருந்த 15 திருத்தேர்களை ஓட வைத்தவர் நம் முதல்வர். ஆரூரில் தேரோட்டம் கலைஞரால் என்றால், அனைத்து ஊர்களிலும் தேரோட்டம் நம் முதல்வரால்

என்பதை நான் இங்கே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், அனைவரும் சமம். அனைவரின் உயர்வுக்கு உறுதுணையாக இருக்கின்ற ஆட்சி என்பதற்கு உதாரணம் கோயில்களும், பக்தர்களும் மட்டும் அல்ல; அர்ச்சகர் நலனிலும் அக்கறை கொண்டுள்ள அரசு நமது அரசு. அர்ச்சகர்களுக்குக் குடியிருப்பு, தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களுக்குக் கட்டணத்தில் 60 சதவிகித பங்குத் தொகை, தைத் திருநாளில் புத்தாடை, ஓய்வூதிய உயர்வு, ஊக்கத் தொகை என இப்படி அர்ச்சகர் நலன் காக்கும் அரசு நம் அரசு. 'வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடையும் வகையிலும், வாக்களிக்காதவர்கள் ஏன் இவருக்கு வாக்களிக்கத் தவறி விட்டோம் என மனம் வருந்துகின்ற அளவிற்கு எங்கள் பணி தொடரும்' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. எங்கள் முதல்வரின் சாதனையால் ஏழைகள் சிரிக்கிறார்கள்; இதனால் இறைவன் மகிழ்ச்சியுறுகிறான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம்–காசி ஆன்மிகப் பயணத் திட்டம் என்பது, ஒன்றிய அரசு அறிவிப்பதற்கு முன்பே கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் 200 நபர்களை இராமேஸ்வரத்திலிருந்து காசி வரை ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்வதாக அறிவித்திருந்தோம். இந்தத் திட்டத்தை உறுதி செய்து, எல்லா நிகழ்வுகளிலும் எப்போதும்போல் தமிழக அரசு இதிலும் முன்னோடி. ஒன்றிய அரசு தமிழக அரசுக்குப் பின்னாடி. இந்தத் திட்டம் இந்த ஆண்டும் தொடரச் செய்திருக்கின்றார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய மக்களுக்கான இறைப் பணி. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் முதன்முதலில் 1997 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆதி திராவிட

மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்தார். அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பாட்டில் இருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்கின்றபோது, ரூபாய் ஒரு இலட்சம் என்பது எப்படி திருப்பணிகளுக்குப் போதும் என்பதைக் கணக்கிட்டு, ரூ.1 இலட்சமாக இருந்ததை ரூ.2 இலட்சமாக உயர்த்தினார். ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயிலுக்கு ரூ.1 இலட்சம், கிராமப்புறங்களில் இருக்கின்ற திருக்கோயிலுக்கு ரூ.1 இலட்சம் என்றிருந்ததை மாற்றி, இரண்டு பகுதிகளுக்கும் ரூபாய் இரண்டு இலட்சமாக மாற்றி, ஆயிரம் திருக்கோயில்கள் இருந்தன என்பதை 1,250, 1,250 என்று 2,500 திருக்கோயில்களாக மாற்றி, அந்த 2,500 திருக்கோயில்களுக்கான தொகையையும் ஒரே முறை, அனைத்து அர்ச்சகர்களையும் வரவழைத்து ரூ.50 கோடியை வாரி வழங்கிய முதல்வர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் கூறுகின்றபோது, ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள கோயில்களில் திருப்பணிகள் நடைபெறவில்லை என்று கூறிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப் பேரவைக்குள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 சித்தர்களில் 3 சித்தர்களுக்கு முத்தான விழா. இந்த ஆட்சிதான் ஆன்றோர்களுக்கும், சான்றோர்களுக்கும் விழா எடுக்கின்ற ஆட்சி. 18 சித்தர்களில் 3 சித்தர்களுக்கு முத்தான விழா. திருமுறை கண்ட சேக்கிழாருக்கு 3 நாட்கள் அரசு விழா; தமிழ்ப் பெருமாட்டி ஔவையாருக்கு மணிமண்டபம் மற்றும் 3 நாட்கள் அரசு விழா; அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங்கருணை கண்ட வள்ளலாருக்கு சரித்திரப் புகழ்மிக்க சர்வதேச மையம்; மாநிலம் எங்கும் ஆண்டு முழுவதும் அன்னதானம். முப்பெரும் விழாவிற்கான செலவு ரூ.3.25 கோடியை அரசே ஏற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அழகர்கோயிலில் பெரியாழ்வாருக்கு திருவரசு; நெம்மேலியில் ஆளவந்தாருக்கு திருவரசு; இப்படி ஆன்மிக ஆன்றோர்களை ஆராதிக்கும் அற்புத அரசு நம் அரசு. இறைத் தொண்டர்களுக்கெல்லாம் சிறப்பு செய்யும் பெரும் தொண்டர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் என்பதால் இந்த நிகழ்வு இந்த ஆட்சியிலே நடந்துகொண்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 19] [திரு. பி.கே. சேகர்பாபு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமேகலையின் கையில் இருந்த அட்சய பாத்திரம் பசிப் பிணி போக்கியது, மாண்புமிகு முதல்வர் உத்தரவினால் அன்னதானத் திட்டம் என்ற அட்சய பாத்திரம் இன்று எல்லாத் தரப்பு மக்களின் பசிப் பிணியையும் போக்கிக் கொண்டிருக்கிறது. 756 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானம்; 8 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம்; 15 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னப்பிரசாதம்; பழனிக்கு திருவிழாக் காலங்களில் பாதயாத்திரையாக வரும் இரண்டு இலட்சம் பக்தர்களுக்கு அன்னதானம்; அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் திருவிழாக் காலங்களில் 30 ஆயிரத்து 500 பக்தர்களுக்கு அன்னதானம்; பழனி திருக்கோயிலைச் சார்ந்த பள்ளி, கல்லூரிகளில் பயிலும் நான்காயிரம் மாணவச் செல்வங்களுக்கு காலைச் சிற்றுண்டி. இவ்வாறு நமது ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்களோடு, இந்த ஆண்டும் புதிய அன்னதானத் திட்டங்களை அறிவிக்கச் சொல்லியிருக்கின்றார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். பக்தி பசியோடு, வயிற்றுப் பசியையும் தீர்க்கும் வள்ளலாரின் ஆன்மிகக் கொள்கையே நம்முடைய ஆட்சியின் கொள்கை, மாண்புமிகு முதல்வரின் கொள்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நில மீட்பைப் பற்றி சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற நாள்முதல் ரூ.4 ஆயிரத்து 259 கோடி மதிப்புள்ள சுமார் 4 ஆயிரத்து 570 ஏக்கர் பெருமானமுள்ள நிலங்களை மீட்டிருக்கின்றோம். இதை ஒப்பீட்டுக்காகச் சொல்கின்றேன். கடந்த 10 ஆண்டுக் கால ஆட்சியில் ஒட்டுமொத்தமாக அவர்கள் மீட்ட நிலத்தின் மதிப்பு ரூ.3 ஆயிரத்து 819 கோடி. நிலத்தின் அளவு 3 ஆயிரத்து 177 ஏக்கர். இதை ஒப்பிடும்போது, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, கடந்த 10 ஆண்டுக் காலத்தில் அவர்களால் மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பைவிட, 1,085 கோடி ரூபாய் கூடுதலான மதிப்புள்ள 1,401 ஏக்கர் நிலத்தை மீட்டுள்ளோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நில மீட்பு விவகாரத்தில் உறுதியாக இருக்கின்றார்கள். இன்னார், இனியவர் என்றில்லாமல் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

நம் முதல்வர் எப்படிப்பட்டவர்? வேட்டி கட்டி நடந்து வரும் திருவாரூர் தேர்! வீழ்த்த வரும் பகை கண்டால் அவர் துள்ளி வரும் திருச்செந்தூர் வேல்! இந்த நில மீட்பு வேட்டை என்பது தொடரும், தொடர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்.

பிற்பகல் 3–15

கோயில் வழிபாடுகளில் சமத்துவமும், சமூக நீதியும். வைக்கம் ஆலய நுழைவு நூற்றாண்டு விழா நடந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் வைக்கம் வீரர் பெரியாரின் வாரிசு ஆட்சி இது என்பதை நிரூபிக்கும் வகையில்–– திருவண்ணாமலை மாவட்டம், தென்முடியனூர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 80 ஆண்டுக் காலமாக ஒரு பிரிவினர் இறை தரிசனத்திற்கு அனுமதிக்கப்படவில்லை; அந்தத் திருக்கோயிலில் அனைவரையும் இறை தரிசனத்திற்கு அனுமதிக்க வைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதோடு, இதுபோன்று மேலும் 5 திருக்கோயில்களில் ஒரு பிரிவினரை இறை தரிசனத்திற்கு அனுமதிக்காத நிலையைத் தகர்த்தெறிந்து அனைவரையும் தரிசிக்க வைத்தவர் நம்முடைய முதல்வர் என்பதை இந்த நேரத்தில் பதிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழையும், சமயத்தையும் தம் இரு கண்களாகப் போற்றி வளர்ப்பது நமது இந்து சமய அறநிலையத் துறை. அன்னைத் தமிழில் வழிபாடு செய்ய ஏதுவாக 14 இறைவன் போற்றிப் பாடல் நூல்கள் வெளியிட்டவர் நம் முதல்வர். கரையான் அரிக்காமல் ஓலைச் சுவடிகளை நூலாக்கினார் தமிழ் தாத்தா உ.வே.சா.; கரையான் அரிக்காமல் ஓலைச் சுவடிகளை நூலாக்கினார் தமிழ் தாத்தா உ.வே.சா. 108 அரிய நூல்களைப் பதிப்பித்து தமிழரின் சொத்தாக்கினார் முத்துவேலரின் பேரன் நம் முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் வென்று விடுவார் இல்லை என்ற சொல்லை, இல்லை என்ற சொல்லே, இனி தமிழ்நாட்டில் இல்லை, முதல்வர் வென்று விடுவார் இல்லை என்ற சொல்லை, இல்லை என்ற சொல்லே, இனி தமிழ்நாட்டில் இல்லை; சாதனை பல நூறு தினம்

தினம் தந்தார்; திராவிட ஆட்சியிலும் பக்தி மணம் தந்தார்; திசையெங்கும் விண்முட்டும் கோபுரங்கள் தந்தார்; பலநூறு கோயில்களுக்குக் குடமுழுக்குத் தந்தார்; திருவிளக்குப் பூஜை என்ற பெருவிளக்கு தந்தார்; பெருந்திட்ட திருப்பணிக்கு ஆயிரம் கோடி ரூபாய் தந்தார்; தொன்மையான கோயில்களுக்கு நூறு கோடி ரூபாய் தந்தார்; அன்னையாகப் பசி தீர்க்கும் அன்னதானம் தந்தார்; சித்தர்கள் சிறப்புக்கு சொல் மண்டபம் தந்தார்; ஔவை பிராட்டிக்கு மணி மண்டபம் தந்தார்; வள்ளலாரின் புகழ் பாடும் உயர் மையம் தந்தார்; திருத்தேர்கள் பல கண்டு தேரோட்டம் தந்தார்; திருக்குளங்களில் அருள் சுரக்கும் நீரோட்டம் தந்தார்; அனைத்து சாதி அர்ச்சகர் எனும் ஜனநாயகம் தந்தார்; பெண்களும் ஓதுவார்கள் எனும் பெரும்புரட்சி தந்தார்; கோயில் நிலங்களை மீட்கும் பெருந்துணிவு தந்தார்; ஓலைச் சுவடி ஆய்வு மையம் தந்தார்; கோயில்கள் எங்கும் நந்தவனம் தந்தார்; தல மரக்கன்று ஒரு இலட்சம் தந்தார்; சூரிய வெப்ப விளக்குகள் தந்தார்; ஒருகால பூஜை என்னும் உயர் காலம் தந்தார்; அந்தக் கோயில்களுக்கு மின் கட்டணமும் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபுரமெங்கும் இடிதாங்கி தந்தார்; அர்ச்சகர் மனம் குளிர குடியிருப்பு தந்தார்; பழனி மாணவருக்கும் சிற்றுண்டி தந்தார்; பொன்னுருக்கி வைப்பு நிதியாக்கித் தந்தார்; இராமேஸ்வரம்-காசிக்கு நற்பயணம் தந்தார்; 500 இணைகளுக்கு சீரோடு திருமணத்தை நடத்தித் தந்தார்; மகா சிவராத்திரி அருள் சாற்றித் தந்தார்; 108 அரிய நூல்கள் பதிப்பித்துத் தந்தார்; 108 வாகனங்கள் துறைக்காகத் தந்தார்; திருத்தேர்கள் பாதுகாக்கப் பெருங்கூரை தந்தார்; தேசம் கடந்து தெய்வச் சிலைகளை மீட்டெடுத்து வந்தார்; நிலம் புதைந்த சிலைகளை கண்டெடுத்துத் தந்தார்; இப்படியாக திருக்கோயில் மேம்பாடு தொடர்ச்சியாகத் தந்தார்; புதுமைகள் தந்தார்; புரட்சிகள் தந்தார்; பக்தருக்கெல்லாம் நிம்மதி தந்தார்; மொத்தத்தில் முதல்வர், சீரும் சிறப்பும் ஒருசேரத் தந்தார். முதல்வரின் சாதனைகள் ஆயிரமோ ஆயிரம், மொத்தமாகச் சொல்ல வந்தால் பொழுதெல்லாம் போயிரும்; (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வரின் சாதனைகள் ஆயிரமோ ஆயிரம், மொத்தமாகச் சொல்ல வந்தால் பொழுதெல்லாம் போயிரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளைப் பொறுத்தளவில், கடந்த ஆண்டு ஒட்டுமொத்தமான அறிவிப்புகளை, இந்த அறிவிப்புகளோடு சீர்தூக்கிப் பார்க்கின்றபோது, 249 அறிவிப்புகளை, அறிவிப்புகளாக வெளியிடுகிறோம். இந்த 249 அறிவிப்புகளையும் படிப்போம் என்று தயவுசெய்து யாரும் நினைத்துவிட வேண்டாம். அதில் 37 அறிவிப்புகளை படிக்கின்றேன். மீதமுள்ள அறிவிப்புகளை பேரவையில் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளும்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த 2021–2022, 2022–2023 மற்றும் தற்போது 2023–2024 ஆம் ஆண்டுகளுக்கான அறிவிப்புகளில் ரூ.4,137 கோடி மதிப்பீட்டில் 16,108 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

உபயதாரர்கள் தாமாக முன்வந்து ரூ.583 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகளை மேற்கொள்கின்றனர். மேலும், உபயதாரர்கள் திருப்பணிகளில் பங்கேற்க ஆர்வம் தெரிவித்து வருவதால் அதிகப்படியான திருப்பணிகள் தொடரும்.

பிற்பகல் 3–20

இந்த ஆண்டு மொத்தம் 249 அறிவிப்புகள். நேரமின்மைக் காரணமாக 37 அறிவிப்புகளை மட்டும் வாசித்து, மீதமுள்ள 212 அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வாசித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

இந்து சமய அறநிலையத் துறை

இராமேசுவரத்தில் மேம்பாட்டுப் பணிகள்

இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலுக்கு, அக்னி தீர்த்தப் படித்துறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.50 கோடி அரசு மானியம் வழங்கப்படும்.

1. இராமேசுவரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அக்னி தீர்த்தப் படித்துறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.50 கோடி அரசு மானியம் வழங்கப்படும்.

Keeping the welfare of the devotees in view, a grant of Rs.50 Crore will be provided by the Government for the improvement of amenities, including development works at Agni Theertham, in Arulmigu Ramanatha Swamy Temple, Rameswaram.

சுடுமண் சிற்பங்களைப் பாதுகாத்துச் சீரமைக்கும் பணி

தமிழர்கள் தொன்றுதொட்டு வழிபடும் கிராம தெய்வங்களின் சுடுமண் சிற்பங்களைப் பாதுகாத்துச் சீரமைக்கும் பணி 6 திருக்கோயில்களில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. தமிழர்களின் வழிபாட்டு மரபுகளில் சுடுமண் சிற்பங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இச்சிற்பங்களின் வாயிலாக மக்களின் பண்பாடு, பண்டைய கலைகள் அறியப்படுகின்றன. கிராமத் திருக்கோயில்களில் இன்றளவும் வழிபாட்டுத் தெய்வங்களாக காணக் கிடைக்கின்றன. இவற்றின் தொன்மை அறிந்து புனரமைத்துப் பாதுகாக்க வேண்டியுள்ளது. அதனால், தமிழர்களால் தொன்றுதொட்டு வழிபடப்படும் மரபு சார்ந்த கிராம தெய்வங்களின் சுடுமண் சிற்பங்களான அம்மன், அய்யனார், ஏழு கன்னிமார்கள் போன்ற திருவுருவங்களைச் சீரமைத்துப் பாதுகாக்கும் பணி முதற்கட்டமாக 6 திருக்கோயில்களில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (இணைப்பு–I)

The Terracotta sculptures in village temples portray the traditional practices of our Tamil Civilisation and Culture in Art forms. To conserve the above traditions, as a first phase, the terracotta sculptures of six temples will be renovated and protected, at an estimated cost of Rs.3 Crore.

இராஜகோபுரங்கள்

திருப்பைஞ்ஞீலி, பழையாறை, திண்டல் உள்ளிட்ட 15 திருக்கோயில்களில் ரூ.25.98 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுரங்கள் கட்டப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன் அவர்களுடைய கோரிக்கை.

3. திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருப்பைஞ்ஞீலி, அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

A five-tier Rajagopuram will be constructed for Arulmigu Gneelivaneswarar Temple, Thiruppaigneeli, Mannachanallur Taluk, Trichy District, at an estimated cost of Rs.7 Crore.

4. விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், முன்னூர், அருள்மிகு ஆடவல்லீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் ஏழு நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

A seven-tier Rajagopuram will be constructed for Arulmigu Adavalleeswarar Temple, Munnur, Marakkanam Taluk, Villupuram District, at an estimated cost of Rs.4.10 Crore.

5. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கீழப்பழையாறை, அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

A five-tier Rajagopuram will be constructed for Arulmigu Somanatha Swamy Temple, Keezha Pazhayarai, Kumbakonam Taluk, Thanjavur District, at an estimated cost of Rs.3.50 Crore.

6. ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், திண்டல், அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

A five-tier Rajagopuram will be constructed for Arulmigu Velayuthaswamy Temple, Thindal, Erode Taluk and District, at an estimated cost of Rs.2 Crore.

7. நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், தோளூர், அருள்மிகு நாச்சிமார் திருக்கோயிலில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் மூன்று நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

A three-tier Rajagopuram will be constructed for Arulmigu Naachimar Temple, Tholur, Sendhamangalam Taluk, Namakkal District, at an estimated cost of Rs.1.40 Crore.

8. நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், வள்ளிபுரம், அருள்மிகு நல்லாயி அம்மன் திருக்கோயிலில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் மூன்று நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

A three–tier Rajagopuram will be constructed for Arulmigu Nallayi Amman Temple, Vallipuram, Namakkal Taluk and District, at an estimated cost of Rs.*1.40* Crore.

9. ஒன்பது திருக்கோயில்களுக்கு ஒன்பது புதிய இராஜகோபுரம் ரூ.6.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். (இணைப்பு–2)

New Rajagopuram will be constructed in nine temples, at an estimated cost of Rs.*6.58* Crore.

புதிய திருத்தேர்கள்

19 திருக்கோயில்களில் புதிய திருத்தேர்கள் ரூ.11.83 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

10. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலில் ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்படும்.

A new wooden Car will be made for Arulmigu Arthanareeswarar Temple, Thiruchencode Taluk and Town, Namakkal District, at an estimated cost of Rs.*2.63* Crore.

11. திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், பூவனூர் அருள்மிகு சதுரங்க வல்லபநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்படும்.

A new wooden Car will be made for Arulmigu Sathuranga Vallabanatha Swamy Temple, Poovanur, Needamangalam Taluk, Thiruvarur District, at an estimated cost of Rs.*1* Crore.

12. தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடு அருள்மிகு திருமூலநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்படும்.

A new wooden Car will be made for Arulmigu Thirumoolanatha Swamy Temple, Vallanadu, Sri Vaikundam Taluk, Thoothukudi District, at an estimated cost of Rs.*1* Crore.

13. புதிய திருத்தேர்கள் 16 திருக்கோயில்களில் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் செய்யப்படும். (இணைப்பு–3)

A new wooden Car will be made for 16 temples, at an estimated cost of Rs.7.20 Crore.

திருத்தேர் பாதுகாப்புக் கொட்டகை

53 திருக்கோயில்களில் உள்ள திருத்தேர்களுக்கு ரூ.10.25 கோடி மதிப்பீட்டில் திருத்தேர் பாதுகாப்புக் கொட்டகைகள் அமைக்கப்படும்.

14. 53 திருக்கோயில்களில் உள்ள திருத்தேர்களுக்கு ரூ.10.25 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்புக் கொட்டகை அமைக்கப்படும். (இணைப்பு-4)

A shed for each Temple Car will be put up in 53 temples, at an estimated cost of Rs.10.25 Crore.

திருக்குளங்கள் சீரமைத்தல்

46 திருக்கோயில்களின் திருக்குளங்கள் ரூ.25.94 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, ரேக்ளா ரேஸ், பொங்கல் திருவிழாக்கள், கிராம தேவதைகளுக்கான விழாக்கள் ஆகியவற்றைக் கண்டுகளிக்க வந்தால் அது பண்பாட்டுச் சுற்றுலா.

மண்ணுக்கேற்ற மணமும், மண்பானைச் சோறும் என பண்டைய தமிழர் உணவு பழக்க வழக்கங்களில் திளைக்க விரும்பினால் அது உணவுச் சுற்றுலா.

பள்ளிப் பாடங்களில் பவனி வருகின்ற பல்வேறு நிலைப்பாடுகளை நேரில் பார்ப்பதற்காக மாணவர்களை அழைத்துச் சென்று சுற்றிக்காட்டுவது என்ற நிலை பாடத் திட்டங்களில் உண்டு. இதுவே கல்விச் சுற்றுலா.

கலை, கலாச்சாரம், இயற்கை எழில் சூழ்ந்த மலை, நீர், நிலப்பரப்புகள் கொண்டதாகவும் இருப்பதால், தமிழ்நாடு நாட்டிலேயே முதன்மை சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. தமிழ்நாடு மற்றும் நாட்டின் முக்கிய நகரங்களில் 38 சுற்றுலா அலுவலகங்கள், 22 சுற்றுலாத் தகவல் மையங்கள் உள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளின் பயணிகளே பெருமளவில் நம் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்னமான மாமல்லபுர நினைவுச் சின்னங்கள் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 984 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டு, வருகையில் முதலிடம் வகிக்கின்றன.

தாஜ்மஹால் 38 ஆயிரத்து 922 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்பட்டு, இரண்டாம் இடத்தில் உள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் 10 பிரபலமான பாரம்பரிய நினைவுச் சின்னங்களின் பட்டியலில், திருமயம் கோட்டை அருங்காட்சியகம்; வட்டக்கோட்டை; செஞ்சிக் கோட்டை; சித்தன்னவாசல், குடைவரை ஜெயின்

கோயில்; சாலுவன்குப்பம் புலிக்குகைக் கோயில் உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

பிற்பகல் 3–45

2021 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 கோடியே 65 இலட்சத்து 66 ஆயிரம். இவற்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்து 30 ஆயிரம். 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 21 கோடியே 89 இலட்சத்து 11 ஆயிரம். இவற்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து 7 ஆயிரம். 2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2022 ஆம் ஆண்டில் 10 கோடியே 23 இலட்சத்து 45 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கூடுதலாக தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர்.

தமிழ்நாடு மாநில திட்டக் குழு "2030–க்குள் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் கொள்கைகளை வகுத்து செயல்படுத்துதல்" என்ற இலக்கினை சுற்றுலாத் துறைக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கினை எய்திட, உலகப் புகழ் பெற்ற "இந்திய நாட்டிய விழா" ஆண்டுதோறும் மாமல்லபுரத்தில் டிசம்பர் முதல் ஜனவரி வரை நடத்தப்படுகிறது. இந்திய நாட்டிய விழாவைக் காண ஆண்டுதோறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்திற்கு வருகை புரிகின்றனர். 50–க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாட்டின் முக்கிய கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்பதால், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை தமிழ்நாட்டில் கணிசமாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2022–2023 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகளைப் பெற்றுள்ளது:

1. சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரைத் தலத்திற்கான விருது, இந்தியா டுடே குழுமத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தின் Lemur கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. "ஆன்மிக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு Travel + Leisure India and South Asia 11–வது பதிப்பு விழாவில் கிடைத்துள்ளது.

3. SKOCH உச்சி மாநாட்டில் 18–1–2023–ல் "வெள்ளி" விருது கிடைத்துள்ளது.

4. இந்தியாவில் பிரமிக்க வைக்கும் மலைக் காட்சிகளுக்கான சிறந்த இடத்திற்கான பிரிவில் நீலகிரி மாவட்டம், குன்னூர் "வெள்ளி" விருதினை, புதுடெல்லியில் Outlook Traveller Awards–2022 விழாவில் பெற்றது.

5. பசுமை சுற்றுலாத் தலங்களுக்கான சிறந்த 100 நிலைத்தன்மை கதைகளுக்கான விருதுக்காக 2022–ல் கிரேக்கத்தின் Athens–ல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

6. "இந்தியாவின் சிறந்த பாரம்பரிய தலத்திற்கான" விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஜெர்மன் தலைநகர் Berlin–ல் Pacific Area Travel Writers Association (PATWA) ஆல் வழங்கப்பட்டது.

7. "இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சராகிய எனக்கு Pacific Area Travel Writers Association ஆல் (PATWA) ஜெர்மன் தலைநகர் Berlin–ல் நடைபெற்ற சர்வதேச பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, TravelXP Channels மற்றும் TravelXP சமூக ஊடகங்கள்மூலம் தமிழ்நாட்டின் அழகையும் கலாச்சாரத்தையும் 15 மொழிகளில் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் விளம்பர உத்திகள் 2022–2023 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவியது.

சுற்றுலாத் துறையானது, 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள்/இடங்களைக் கண்டறிந்து மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2022–2023 ஆம் ஆண்டில், அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், பூண்டி அணைக்கட்டு, ஆண்டிபாளையம் ஏரிப் பகுதி, கொளவாய் ஏரிப் பகுதி, ஒகேனக்கல் அருவிப் பகுதி, முட்டம் கடற்கரை, திற்பரப்பு அருவி, பூம்புகார், குற்றாலம், பிச்சாவரம், முத்துப்பேட்டை Mangrove காடுகள், முத்துக்குடா பகுதி, வத்தல்மலை ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த மொத்தமாக ரூ.97.0068 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மதுரை, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கம், சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஆன்மிக மற்றும் கலாச்சார சுற்றுச்சூழல் பூங்கா, இராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானலில் helicopter இறங்குதளம் ஆகியவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.46.9593 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் helicopter இறங்குதளம் அமைப்பது பற்றிக் கேட்டிருந்தார்கள். அதை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 3–50

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான சேவைகளை வழங்குவதற்கு, "தமிழ்நாடு சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், சுற்றுலாப் பேருந்து இயக்குபவர்களுக்கான திட்டம் 2023" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சுற்றுலாக் கொள்கை தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்படும்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு முதன்முதலாகத் தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2022–ல் வழங்கப்பட்டன. இதில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள், விமான நிறுவனங்கள், விடுதிகள், உணவகங்கள், வழிகாட்டிகள் போன்ற பல்வேறு சுற்றுலா பங்களிப்பாளர்களை உள்ளடக்கிய 17 வெவ்வேறு பிரிவுகளில் 55 விருதுகள் வழங்கப்பட்டன.

ஆடம்பர வசதிகளுடன்கூடிய Cordelia Cruises என்ற சொகுசுக் கப்பல் சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை துறைமுகத்திலிருந்து துவக்கி

வைக்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய மைல் கல்லாக அமைகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 30-6-1971 அன்று நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிட வசதிகள், பல்வேறு தொகுப்பு சுற்றுலாக்கள், படகுக் குழாம்கள், பொருட்காட்சி மற்றும் திருவிழாக்கள் போன்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியச் செயல்பாடுகளாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 28 ஓட்டல்களை நேரடியாக நிர்வகித்து வருகிறது. ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம் தீவுத்திடல், கடற்கரை ஓய்வு வளாகம், மாமல்லபுரம், ஓட்டல் தமிழ்நாடு மதுரை-2, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருச்சி, ராணிப்பேட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு 2022-2023 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு தரமுயர்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களில் உணவு விற்பனையை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படியே "அமுதகம்" என்ற வணிகப் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது 35 உணவகங்கள் "அமுதகம்" என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

வண்டலூர், கோவளம், ஏற்காடு மற்றும் வாலாங்குளம் ஏரி ஆகிய சுற்றுலாத் தலங்களில் "குயிக் பைட்ஸ்" என்ற வணிகப் பெயரில் துரித உணவகங்கள்மூலம் மார்ச் 2023 வரை ரூ.56.59 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.

ஆலயம் என்ற பெயரில் இராமேஸ்வரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பக்தர்கள் தங்கும் மூன்று விடுதிகளை 50:50 என்ற இலாபப் பகிர்வு அடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து நடத்தி வருகின்றது. 2022-2023 ஆம் ஆண்டில் ஆலய விடுதிகள்மூலம் ரூ.291.54 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம், வாலாங்குளம் ஆகிய 9 இடங்களில் சாகசப் படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன்கூடிய படகு குழாம் இயக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டில், முட்டுக்காடு படகு குழாம்மூலம் ரூ.485.82 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. முதலியார்குப்பம் படகு குழாம்மூலம் ரூ.117.20 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. உதகமண்டலம் படகு குழாம்மூலம் ரூ.1375.95 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பைக்காரா படகு குழாம்மூலம் ரூ.390.00 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கொடைக்கானல் படகு குழாம்மூலம் ரூ.452.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. ஏற்காடு படகு குழாம்மூலம் ரூ.364.17 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பிச்சாவரம் படகு குழாம்மூலம் ரூ.466.87 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய படகு இல்லம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24–8–2022 அன்று கோயம்புத்தூர் வாலாங்குளம் ஏரியில் திறக்கப்பட்டது. 2022–2023 ஆம் ஆண்டு இதன்மூலம் ரூ.29.85 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தொட்டபெட்டா, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலை வாசஸ்தலங்களில் தொலைநோக்கி இல்லங்கள் இயங்கி வருகின்றன. 2022–2023 ஆம் ஆண்டு இவைமூலம் ரூ.299.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–55

டென்மார்க் சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையின்மூலம், நீலக்கொடி சான்றிதழ் பெற்ற கோவளம் கடற்கரை, தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவில் 9–வது நீலக்கொடி கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொண்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டு கோவளம் நீலக்கொடி கடற்கரைமூலம் ரூ.178.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொந்தமாக 14 சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவற்றின் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரகச் சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு-மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை மிகவும் புகழ்பெற்றவை.

பொதுமக்களின் அமோக வரவேற்பினைப் பெற்ற சென்னை-திருப்பதி ஒருநாள் தினசரி சுற்றுலாவை இணையவழி முன்பதிவுமூலம் பதிவு செய்யப்பட்டு, திருமலை திருப்பதி தேவஸ்தான கணினியுடன் இணைக்கப்பட்டு, விரைவாக தரிசனம் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. (குறுக்கீடு) இதோ முடித்துவிடுகிறேன்.

தற்போது தினசரி 1,000 விரைவு தரிசன சீட்டுகளைப் பெற்று சென்னை, திருச்சி, கோவை, மதுரை, சேலம், ஓசூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலிருந்து தினசரி இச்சுற்றுலாவை இயக்கி வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 33 திருக்கோயில்களிலும் உடனடி சிறப்பு தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டில் ஆடி மாதம் அம்மன் மற்றும் புரட்டாசி மாதம் பெருமாள் சிறப்பு தரிசனச் சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் தேவாலயச் சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜைன சமய தொடர்புடைய இடங்கள் அதிகம் உள்ளன. இவற்றைப் பிரபலப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதக்கும் உணவகம், உதகை படகு இல்லத்தில் சாகச விளையாட்டுகள், மாமல்லபுரம் மரகதப் பூங்காவில் 'ஒளிரும் பூங்கா' ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை ஆகிய சுற்றுலாத் தலங்களில் கம்பி வட ஊர்தி நிறுவுவதற்கும், சென்னையில் 'எங்கும் ஏறலாம்-எங்கும் இறங்கலாம்' என்ற பேருந்து

வசதியினை அறிமுகப்படுத்துவதற்கும், தமிழ்நாட்டிலுள்ள ஐந்து திருக்கோயில்களை laser ஒளிக்கற்றைமூலம் மிளிரும் வகையில் அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத்திடலில் 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் மார்ச் வரை 70 நாட்களுக்கு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. அந்தக் காலகட்டத்தில் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தவாறு இத்திட்டத்தை வடிவமைத்து வழங்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 47–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தொடங்கி மார்ச் 23 ஆம் தேதி வரை ‘சுற்றுலா மறுசிந்தனை’ என்ற கருப்பொருளை மையமாக வைத்து வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை உள்பட 51 அரசுத் துறைகளின் அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இதன்மூலம் அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றி பொதுமக்கள் பார்த்து தெரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது. இந்தாண்டு பொருட்காட்சியை சுமார் 15 இலட்சம் பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகுக்குத் தெரியப்படுத்தும்விதமாக, கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து, “நம்ம ஊரு திருவிழா” எனும் வருடாந்திர கலைவிழா சென்னையில் நடத்தப்பட்டது. இந்த திருவிழாவில் 40–க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலை வடிவங்களில் 500–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வு சென்னையில் தீவுத்திடல் உள்பட 18 இடங்களில் நடைபெற்றது. இந்த விழாவில் பார்வையாளர்கள் நமது தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உணவு அரங்குகள் அமைத்து சிறப்பாக நடத்தியது.

பிற்பகல் 4-00

ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை இணையவழி உடன்நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், Channel Manager-ஐ நியமித்து பிரபலமான ஆன்லைன் பயணத் திரட்டிகள் (OTAs) இணைய தளங்களான Makemytrip, Goibibo, Booking.com மற்றும் இதர OTA-க்களில் தமிழ்நாடு ஓட்டல்களின் அறைகளை முன்பதிவு செய்ய வழிவகை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் 5 ஆயிரத்து 96 முன்பதிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரையிலான காலக்கட்டத்தில் ரூபாய் ஒரு கோடியே 85 இலட்சம் வருவாயையும் ஈட்டியுள்ளது. அனைத்து ஓட்டல்களிலும், QR குறியீடுகளைப் பயன்படுத்தி பின்னூட்ட செயல்முறை (Feedback mechanism) அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாட்டைப் பற்றிய பயணம் மற்றும் சுற்றுலா தொடர்பான தகவல்களைத் தொலைபேசி 1800 4253 1111 மூலம் 24 மணி நேரமும் வழங்குவதற்காகப் பிரத்யேகமான அடிப்படையில் சுற்றுலா தகவல் உதவி (Helpline) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

தீவுத்திடலில் உள்ள டிரைவ்-இன் உணவகமானது ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் டிரைவ்-இன் திரையரங்கம், பார்பிக்யூ நிலையம் மற்றும் தேநீர் விடுதி போன்ற பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு, 4-1-2023 அன்று முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வணிகங்களை அதிகப்படுத்தும் வகையில் வணிகத்துடன் வணிகம் என்ற புதிய திட்டம் 2022 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களின் வருவாயை உயர்த்த வெளி மாநிலங்களைச் சேர்ந்த முன்னணி பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் சுமார் 597-க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இத்தகைய சுற்றுலாத் தலங்களை எதிர்காலத்தில் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதி ஆதாரத்தைப் பெற்று மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடக் கோட்பாட்டின் செயல்பாடுகளைத் தொகுத்து, 'திராவிட மாடல்' என புதிய விடியலை வழங்கி மகிழும் தானைத் தளபதியின் வாக்குகளும், வழிகாட்டுதல்களும் சுற்றுலாத் துறைக்கு மிக சுபிட்சத்தை வழங்கி வருகின்றன.

கோட்டையில் தீட்டிய தளபதியாரின் திட்டங்களைப் பட்டி தொட்டி எங்கும் பரப்பும் வகையில் சுற்றுப் பயணம் நிகழ்த்திவரும் சின்னவரை மக்கள் என்னவர் என்றே போற்றுகின்றனர். தனித்து நின்று, துணிந்து சென்று டில்லி களத்தைக் கலக்கி இந்தியத் தலைவர்களின் விழிகளை வியப்பால் விரிய வைத்த செயல்சிட்டு சின்னவரின் சுறுசுறுப்பைக் கண்டு வீரநடை போடுகிறோம். அத்தகு செம்மாந்த செயல்பாடுகளின் எழுத்துருவையே மானியக் கோரிக்கையாக்கி பேரவையின்முன் பணிவன்போடு சமர்ப்பணம் செய்து முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதாவது, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தம் 10 பேர் பேசியிருக்கிறார்கள். ஓரளவு என்னுடைய உரையிலேயும், என்னுடைய அறிவிப்பிலேயும் அவர்கள் கேட்டதற்கெல்லாம் பதில் வந்துவிடும். (குறுக்கீடு) அவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்புகள் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறையின் வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கி உதவி செய்த அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்களுக்கும், நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம், இ.ஆ.ப. அவர்களுக்கும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்

துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் சந்திரமோகன், இ.ஆ.ப. அவர்களுக்கும், சுற்றுலாத் துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலாத் துறையின் அதிகாரிகள் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும், இந்த வாய்ப்பினை வழங்கிய நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் இந்தத் தருணத்தில் நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், அறிவிப்புகளைச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *எனது துறையின்மூலம் 22 அறிவிப்புகள் இருக்கின்றன. அவற்றின் தலைப்புகளை மட்டும் நான் படிக்கிறேன். மீதியை நான் படித்ததாகக் கருதி அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 4–05

அறிவிப்புகள்

சுற்றுலாத் துறை

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தனுஷ்கோடி பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் (Dhanushkodi at Ramanathapuram District will be developed with various tourist amenities at a cost of Rs.5 crores)

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் வங்கக்கடலும், இந்திய பெருங்கடலும் கூடும் இடமாகிய தனுஷ்கோடி பகுதிக்கு அதிகளவில் செல்கின்றனர். இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் பாரம்பரிய கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல், அடிப்படை வசதிகள்,

[திரு. கா. ராமசந்திரன்] [2023 ஏப்ரல் 19

உள்கட்டமைப்பு, பார்வையாளர் மாடம், நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், நடைபாதை, இருக்கைகள் மற்றும் வழிகாட்டிப் பலகைகள், சூரிய ஒளிசக்தி மின்விளக்கு வசதிகள் ஆகிய பல்வேறு வசதிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

2. ஏற்காடு, நிலச்சீரமைப்பு, காட்சிமுனை, உள்கட்டமைப்பு மற்றும் பிற சுற்றுலா வசதிகளுடன், ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் (Yercaud will be developed with aesthetic landscaping, View points, Lake Front, street scaping and tourist amenities at a cost of Rs.10 crores)

சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஏற்காடு, சேர்வராயன் மலைத் தொடரில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் சுற்றுலாவை மேம்படுத்த, ஏற்காட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களான எமரால்டு ஏரிப்பகுதி மேம்பாடு, பார்வையாளர் மாடம், ஒலி–ஒளிக் காட்சி, நடைபாதைகள், பறவைகளைக் காண்பதற்கான காட்சிமுனைகள், நிலச்சீரமைப்பு, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்ற பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

3. மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கலாச்சார பாரம்பரிய நகரான தரங்கம்பாடியில், பல்வேறு சுற்றுலா வசதிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் (Tharangambadi heritage town in Mayiladuthurai District will be developed by providing necessary tourist amenities at a cost of Rs.3 crores)

டேனிஷ் வர்த்தக நிலையமாக விளங்கிய தரங்கம்பாடி ஒரு கடற்கரை நகரமாகும். இங்கு அமைந்துள்ள டேனிஷ்கோட்டை 1620 ஆம் ஆண்டு டேனிஷ் கட்டடக் கலை அம்சங்களைக் கொண்டு கட்டப்பட்டது. டேனிஷ் கலாச்சார பாரம்பரிய நகரான தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை வளாகம் மற்றும் பழமையான கட்டடங்களின் மேம்பாடு, அடிப்படை வசதிகள், நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதை, கடற்கரைப் பகுதி மேம்பாடு, வாகன நிறுத்துமிடம், வழிகாட்டிப் பலகைகள் போன்ற சுற்றுலா அடிப்படை வசதிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 19] [*திரு. கா. ராமசந்திரன்*]

4. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குப் புதிய காட்சிமுனைகள் அமைத்தல் மற்றும் தற்போதைய காட்சிமுனைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் (New viewpoints will be setup and existing viewpoints will be upgraded across important destinations in Tamil Nadu at a total cost of Rs.10 crores)

தமிழ்நாட்டில் இயற்கை அழகினைக் கண்டுகளிக்கவும், இனிமையான சுற்றுலா நினைவுகளைப் பெறுவதற்கும் பல்வேறு இடங்களில் காட்சிமுனைகள் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு சுற்றுலாத் தலங்களில் காட்சிமுனை வசதிகள் ஏற்படுத்தும் வகையில் புதிய தலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஏற்கெனவே அமைக்கப்பட்ட காட்சிமுனைகளை மேம்படுத்தவும், புதிய காட்சிமுனைகளை உருவாக்கவும், அவ்விடங்களில் வாகன நிறுத்துமிடம், பார்வையாளர் மாடம், அமரும் இருக்கைகள், நிழற்குடைகள், தகவல் பலகைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ரூ.10 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

5. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய பழங்கால சமணத் தலங்களில் ஒன்றான சித்தன்னவாசல், ரூ.4 கோடி செலவில் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும் (Sittanavasal, one of the important ancient Jain Centers in Tamil Nadu will be developed as a tourist attraction with various amenities at a cost of Rs.4 crores)

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள சித்தன்னவாசல், தனிச்சிறப்பு மிக்க குடைவரை ஓவியங்கள் மற்றும் குகை ஓவியங்களுக்குப் புகழ்பெற்றதாகும். ஒரே பாறையில் செதுக்கப்பட்ட சமணர் கோயில், அற்புதமான சுவரோவியங்கள், 17 சமணர் படுகைகள் சித்தன்னவாசலில் உள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வகையில், இங்கு அடிப்படை வசதிகள், நிலச்சீரமைப்பு, நடைபாதை, சமண கலைக்கூடம், வழிகாட்டிப் பலகைகள், வாகன நிறுத்துமிடம் போன்ற சுற்றுலா அடிப்படை வசதிகள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

6. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாத்தூர் தொட்டிப் பாலம் பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் (Mathoor Aqueduct in Kanniyakumari District will be developed with various tourist amenities at a cost of Rs.3 crores)

மாத்தூர் பகுதியில் உள்ள கணியான்பாறை என்ற மலையையும், கூட்டுவாயுப்பாறை என்ற மலையையும் இணைக்கும் வகையில் தண்ணீரைக் கொண்டு செல்வதற்காக தெற்காசியாவிலேயே மிக உயரமான மாத்தூர் தொட்டிப் பாலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தும் வகையில், காட்சிமுனை, அடிப்படை வசதிகள், நிலச்சீரமைப்பு, மின்விளக்கு வசதிகள், திடக்கழிவு மேலாண்மை, பூங்கா மேம்படுத்துதல் போன்ற பணிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

7. இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து தமிழ்நாட்டின் முக்கியக் கோயில்களில் வழிகாட்டிச் சுற்றுலாக்கள் (Guided Tours) நடத்தப்படும் (Guided Tours will be organized in major temples of Tamil Nadu in association with the Hindu Religious Charitable Endowments Department)

தமிழ்நாட்டில் உள்ள மதுரை மீனாட்சியம்மன் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், திருவரங்கம் ரெங்கநாதர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், கன்னியாகுமரி சுசீந்திரம் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் ஆகிய பிரசித்தி பெற்ற கோயில்களின் வரலாறு மற்றும் கோயில்களின் உட்புறத்தில் சிறப்புமிக்க முக்கிய இடங்கள் குறித்த வரலாற்றுத் தகவல்களைச் சுற்றுலாப் பயணிகளுக்கு விளக்கும் வகையிலும், சிறந்த பயண அனுபவங்களை வழங்கும் வகையிலும், பயிற்சி பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள் வாயிலாக இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து வழிகாட்டிச் சுற்றுலாக்கள் (Guided Tours) தொடங்கப்படும்.

8. தமிழ்நாட்டில் மருத்துவ மற்றும் ஆரோக்கியச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து ஆண்டுதோறும் சர்வதேச மருத்துவச் சுற்றுலா மாநாடு சென்னையில் நடத்தப்படும் (To promote medical and wellness tourism, annual Tamil Nadu Medical Value Travel Summit will be conducted in Chennai in collaboration with various stakeholders)

தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்துவரும் சுற்றுலாப் பிரிவில் மருத்துவச் சுற்றுலாவும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் அமைந்துள்ள பல்நோக்கு மற்றும் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள், மருத்துவச் சுற்றுலாவிற்கான தலமாக வளர்வதற்கு மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளன. மருத்துவச் சுற்றுலாவிற்கான சிறந்த தலமாக தமிழ்நாட்டினை அடையாளப்படுத்த மருத்துவத் துறையில் தொழில் முனைவோர்களுடன் இணைந்து சர்வதேச மருத்துவச் சுற்றுலா மாநாடு சென்னையில் நடத்தப்படும். இம்மாநாடு உடல்நலம் பேணும் வல்லுநர்களை ஒருங்கிணைக்கும் வகையில் கண்காட்சி அரங்கங்கள், கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்கம் நடத்தவும் ஒரு சிறந்த தளமாக அமையும்.

9. யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமான அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம் கோயில் நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், வழிகாட்டுப் பலகை, மின் வாகனங்கள் மற்றும் பிற வசதிகள் ரூ.5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் (Gangaikonda Cholapuram Temple in Ariyalur District, an UNESCO world heritage site will be developed with various tourist amenities like Entry plaza, parking, Signages, E–vehicles and other facilities at a cost of Rs.5 crores)

யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமான அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வருகை புரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் வகையில், நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், வழிகாட்டுப் பலகைகள், மின் வாகனங்கள் வாங்குதல் மற்றும் பிற வசதிகள் ரூ.5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

10. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாறு அணையில் சாகசச் சுற்றுலா வசதிகள், பல்லுயிர் பூங்கா மற்றும் இதர வசதிகளுடன் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக ரூ.5 கோடி செலவில் மேம்படுத்தப்படும் (Manimutharu Dam in Tirunelveli District will be developed as an Eco–tourism destination with adventure tourism activities, Bio–diversity Park and other amenities at a cost of Rs.5 crores)

திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு பகுதியில் மணிமுத்தாறு அணையைப் பார்வையிடுவதற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, சாகசச் சுற்றுலா, பல்லுயிர் பூங்கா மற்றும் இதர வசதிகளுடன் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மணிமுத்தாறு அணை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

11. நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டல ஏரிப் பகுதியில், பார்வையாளர் மாடம், நடைபாதைகள், இருக்கைகள், மின்விளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு வசதிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் (Udhagamandalam Lake waterfront in Nilgiri District will be upgraded with various amenities such as viewing decks, walkways, benches, installation of lights and other facilities at a cost of Rs.5 crores)

1824 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உதகை ஏரிக்கு, வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இயற்கை அழகினைக் கண்டு ரசிக்கும் வகையில் பார்வையாளர் மாடம், நடைபாதைகள் மற்றும் இருக்கைகள், ஏரியின் அழகினை இரவிலும் கண்டு ரசிக்க மின்விளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு வசதிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

12. முட்டுக்காடு பகுதியில் அமைந்துள்ள 30 ஏக்கர் தீவுப் பகுதியை, கடற்கரைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில் சாகச விளையாட்டுகள், நடைபாதைகள், பறவைகளைப் பார்வையிடுவதற்கு மாடம் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் (TTDC will develop the 30 acre island

area located at Muttukadu as a coastal tourism destination with various entertainment activities like Adventure sports, board walks, Bird watching decks and other amenities at a cost of Rs.5 crores)

செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் பக்கிங்ஹாம் கால்வாய் கடலுடன் இணையும் பகுதியில் அமைந்துள்ள 30 ஏக்கர் பரப்பிலான தீவுப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் படகுமூலம் செல்லவும், இத்தலத்தினை கடற்கரைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில் சாகச விளையாட்டுகள், நடைபாதைகள், பறவைகளைப் பார்வையிடுவதற்கு மாடம் மற்றும் இதர வசதிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

13. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள அரித்ரா நதி கோயில் குளம், படகு இல்லம் மற்றும் பிற வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் (Haridhra Nadhi Temple tank in Mannarkudi, Thiruvarur District will be developed as a tourist destination with attractions like Boating and other amenities at a cost of Rs.50 lakhs)

இந்தியாவில் உள்ள கோயில் தெப்பக்குளங்களில் பெரிய தெப்பக்குளமாகக் கருதப்படும் மன்னார்குடி, அரித்ரா நதி கோயில் தெப்பக்குளத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் படகில் பயணித்தவண்ணம் கோயிலின் அழகினை ரசிக்கும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளுக்கு இனிமையான அனுபவங்களை வழங்கும் வகையிலும் அரித்ரா நதி தெப்பக்குளத்தில் அடிப்படை வசதிகளுடன் படகு இல்லம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

14. ஈரோடு மாவட்டம், அந்தியூர் பெரிய ஏரி படகு இல்லம் மற்றும் பிற வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் (Anthiyur Periya Lake in Erode District will be developed as a tourist destination with a boat house and other infrastructure amenities at a cost of Rs.50 lakhs)

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பெரிய ஏரிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் படகில் பயணித்தவண்ணம் இயற்கை அழகினை ரசிக்க, இனிமையான அனுபவங்களை வழங்கும்

வகையில் இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் படகு இல்லம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

15. செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாகத்தில் MICE சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாக ரூ.20 கோடி மதிப்பீட்டில் அதிநவீன மாநாட்டு அரங்கம் (Convention Centre) கட்டப்படும் (To promote ECR as a MICE destination, a state–of–the–art convention centre will be constructed at TTDC Beach Resort Complex, Mamallapuram at a cost of Rs.20 crores)

யுனெஸ்கோ பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் ஒன்றான மாமல்லபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை ஓய்வு வளாகத்தில் (TTDC Beach Resort Complex, Mamallapuram) MICE *சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள், மாநாடுகள், வர்த்தகக் கண்காட்சிகள் நடத்திடும் வகையில் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய அதிநவீன மாநாட்டு அரங்கம்* (Convention Centre) *ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.*

16. மதுரையில் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு அலகு 2–ல் கூடுதல் விருந்து மண்டபங்கள் (Banquet Halls) ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் (A new Block will be constructed at Hotel Tamil Nadu, Unit–2 at Madurai with Banquet Halls, Modern Kitchen, Dining Halls and other infrastructure facilities at an estimated cost of Rs.7 crores)

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க மதுரை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாடு அலகு 2–க்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும், கூடுதல் வருவாய் ஈட்டும் நோக்கோடும் நவீன வசதிகளுடன்கூடிய நிகழ்விடங்கள், உணவறைகள், சமையலறை மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் கட்டடம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

17. இராமேஸ்வரத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும் (A new hotel block will be constructed at Hotel Tamil Nadu, Rameswaram with necessary infrastructure and modern amenities at an estimated cost of Rs.7 crores)

இராமேஸ்வரத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் வகையில் வரவேற்பு அறை, விருந்தினர் அறைகள் மற்றும் நவீன வசதிகள் ரூ.7 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

18. திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரூ.2.80 கோடி செலவில் 43 இருக்கைகளுடன்கூடிய இரண்டு குளிர்சாதன Volvo பேருந்துகள் வாங்கப்படும் (TTDC will purchase two 43 seater Volvo A/c buses at a cost of Rs.2.80 crores to cater to the additional demand generated through Tirupathi tours and other package tours)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் சென்னையிலிருந்து இயக்கப்பட்டு வரும் ஒரு நாள் திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய 43 இருக்கைகளுடன்கூடிய இரண்டு புதிய குளிர்சாதன Volvo *பேருந்துகள் ரூ.2.80 கோடி செலவில் வாங்கப்படும்.*

19. ஏற்காட்டில் உள்ள எமரால்டு ஏரியில் 3D projection mapping தொழில்நுட்பத்துடன்கூடிய நீர் சார்ந்த ஒலி, ஒளிக் காட்சி பொது–தனியார் பங்களிப்பில் (PPP) அமைக்கப்படும் (Water based sound and light show with 3D projection mapping technology will be setup in Emerald lake, Yercaud through Public–Private Partnership (PPP) mode)

கிழக்கு தொடர்ச்சி மலைத்தொடரில் உள்ள சேர்வராயன் மலைத்தொடரில் கோடை வாசஸ்தலமான ஏற்காடு அமைந்துள்ளது. இங்குள்ள எமரால்டு ஏரிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்குப் புதிய சுற்றுலா அனுபவங்களை வழங்கும் வகையில் 3D projection mapping

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. கா. ராமசந்திரன்] [2023 ஏப்ரல் 19

தொழில்நுட்பத்துடன்கூடிய நீர் சார்ந்த ஒலி, ஒளிக் காட்சி பொது-தனியார் பங்களிப்பில் (PPP) அமைக்கப்படும்.

20. நீலகிரி மாவட்டம், தேவாலா பகுதி, தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து சாகச விளையாட்டுகள், பார்வையாளர் மாடம் மற்றும் மலர் பூங்கா போன்ற பல்வேறு வசதிகளுடன்கூடிய சுற்றுலாத் தலமாக ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தப்படும் (Devala in Nilgiri District will be developed as a tourist destination with various attractions like adventure sports, viewing decks and flower garden in association with Horticulture Department at a cost of Rs.3 crores)

உதகமண்டலத்தின் கூடலூர் பகுதியின் இயற்கை அழகினைக் கண்டு ரசிக்கவும், புதிய பயண அனுபவங்களைச் சுற்றுலாப் பயணிகள் பெறும் வகையிலும் தேவாலா பகுதி, சாகச விளையாட்டுகள், பார்வையாளர் மாடம் (viewing deck) மற்றும் மலர் பூங்கா போன்ற பல்வேறு வசதிகளுடன்கூடிய சுற்றுலாத் தலமாக தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

21. ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள படகு இல்லங்களில் மிதவை உணவகங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும் (Feasibility study will be conducted to establish floating restaurants at lakes in Yercaud, Kodaikanal, Ooty and Coimbatore at a cost of Rs.15 lakhs)

முட்டுக்காடு படகு இல்லத்தில் பொது-தனியார் பங்களிப்புடன் மிதக்கும் உணவகம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, கோயம்புத்தூர்-வாலாங்குளம் ஆகிய படகு குழாம்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தனித்துவமான அனுபவத்தை வழங்கும் வகையில் மிதவை உணவகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

2023 ஏப்ரல் 19] *[திரு. கா. ராமசந்திரன்]*

22. கன்னியாகுமரியை சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை ரூ.1 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும் (A detailed Project report will be prepared to develop Kanniyakumari as an Eco–tourism destination at a cost of Rs.1 crore)

இந்தியாவின் தென்கோடியில் முக்கடல் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரியில் இயற்கை எழில் கொஞ்சும் அருவிகள், நிலப்பரப்புகள், சூரிய உதயம் மற்றும் அஸ்தமனத்தைப் பார்வையிடல், கடலின் நடுவே திருவள்ளுவருக்கு அமைக்கப்பட்ட 133 அடி சிலை, காந்தி மண்டபம், விவேகானந்தர் நினைவு மண்டபம், திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டிப்பாலம் மற்றும் பல்வேறு சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ளன. இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தங்கும் கால அளவினை அதிகரிக்கும் வகையில் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை ரூ.1 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

பிற்பகல் 4–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர்கள் 110 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் படித்துப் பார்த்தேன். வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்கும் கொள்கை விளக்கக் குறிப்பிலும், எனது பதிலுரையிலும் விரிவான விளக்கங்களை அளித்துள்ளேன் என்று நம்புகிறேன். இன்னும் செய்ய வேண்டிய வேலைகளைத் தொடர்ந்து இந்த ஆண்டு செய்வதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வேன் என்று கூறிக்கொண்டு, சுற்றுலாத் துறையின்மீது அளிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காம்போதி ராக ஆலாபனை நடந்து*

முடிந்திருக்கிறது. இன்னொரு கல்யாணி ராக ஆலாபனை நடந்து முடிந்திருக்கிறது. எனவே, நான் அந்த அளவிற்கு விஸ்தாரமான ஆலாபனைக்குச் செல்லாமல், ஒரு மத்திமாவதியாக இந்தக் கச்சேரியை நிறைவுக்குக் கொண்டு வருகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கலை, பண்பாட்டுத் துறை பல்வேறு சாதனைகளைப் புரிந்து வந்திருக்கிறது. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலவாழ்வு அளிக்கக்கூடிய வகையில் நாடெல்லாம் சங்கமம் கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக 11 கோடி ரூபாயை அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர், நம்முடைய தமிழ் பண்பாட்டினுடைய தொன்மை அடையாளங்களை மீண்டும் எடுத்து மீட்டுருவாக்கம் செய்து, அதனை நிலைநிறுத்துவதற்காகத் தமிழ்நாட்டில் மேலும் 8 இடங்களில் இந்த ஆண்டு அகழ்வாய்வுகளை நாம் துவங்குவதற்கு அனுமதியினை வழங்கியிருக்கிறார்கள். கீழடியிலே மிகப் பெரிய ஓர் அருமையான அருங்காட்சியகத்தை உருவாக்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதனுடைய தொடர்ச்சியாக பொருநையிலும் நம்முடைய பண்பாட்டை நிலை நிறுத்தக்கூடிய வகையில்— கீழடி எப்படி தமிழ் பண்பாட்டை கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு எடுத்துச்சென்றதோ, சிவகளை இன்னும் மேலே, 3,800 ஆண்டுகள் பழமையாக அதனைக் கொண்டுசென்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மயிலாடும்பாறை இரும்பினுடைய பயன்பாட்டுக் காலத்தை 4,500 ஆண்டுக்கு முன்னே எடுத்துச் சென்றிருக்கிறது. எனவே, நம்முடைய தமிழ் பண்பாட்டை மீட்டெடுத்து, அதனை நிலைநிறுத்தக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் இந்தத் துறை அவரோடு துணை நிற்கும் என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி, இந்தத் துறையின்மீது வெட்டுத் தீர்மானங்களை 7 பேர் கொடுத்திருக்கிறார்கள். எங்களையும் நன்றாக எண்ணிய அந்த 7 பேருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அண்ணன் அவர்கள் நாட்டுப்புறப் பாட்டு ஒன்றை பாடச் சொல்கிறார்கள். இப்போது நான் பாடினால் அது மத்திமாவதியாக இருக்காது; இருக்கக்கூடிய சூழலில் நீலாம்பரியாக முடிந்து அது உங்களைத் தூங்கத்தான் வைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதற்கு நான் தயாராக இல்லை என்று சொல்லி, நீங்கள் அளித்திருக்கக்கூடிய அந்த 7 வெட்டுத் தீர்மானங்களை,

எத்தனையோ வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் விலக்கிக் கொண்டிருக்கிறீர்கள், இது ஏழே ஏழு. இதனையும் நீங்கள் விலக்கிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டு, நான் இந்த அறிவிப்புகளை இந்த அவையிலே படித்ததாகக் கருதி, இரண்டே இரண்டு அறிவிப்புகளை மட்டும் இங்கே படிக்கிறேன்.

அறிவிப்புகள்

கலை மற்றும் பண்பாடு

1. தமிழ்நாட்டின் கலை வடிவங்களை அழியாமல் பாதுகாக்கவும், அவற்றை வளர்க்கவும் 200 அரசு கல்லூரிகளில் மாணாக்கர்களுக்குக் கலைப் பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்படும்

கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர் கலைப் பயிற்சியில் ஈடுபடுவதன்மூலம் அவர்களின் மனம் ஒருமுகப்பட்டு நினைவாற்றல், படைப்பாற்றல் மற்றும் கற்கும்திறன் மேம்படும். 200 அரசு கல்லூரிகளில் நிகழ்த்துக் கலை மற்றும் கவின் கலைகளில் வாரத்திற்கு இரண்டு நாட்கள் மாணாக்கர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இதற்கெனத் தொடரும் செலவினமாக ரூ.1.20 கோடியும், கலைப் பயிற்சி பொருட்கள் வழங்கிட தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சமும் என மொத்தம் ரூ.1.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகளில் தவில் மற்றும் நாதசுரம் பிரிவுகளில் ரூ.18 இலட்சம் செலவில் பட்டப் படிப்பு தொடங்கப்படும்

அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் தவில் மற்றும் நாதசுரம் ஆகிய கலைகளில் பயின்று வரும் மாணாக்கர்கள் மேல்படிப்பைத் தொடர ஏதுவாக முதற்கட்டமாக சென்னை மற்றும் திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் தவில் மற்றும் நாதசுரம் கலைகளுக்கான பட்டப் படிப்புகள் தொடங்கப்படும். ஆசிரியர்களுக்கான தொகுப்பூதியத்திற்காகத் தொடரும் செலவினமாக ரூ.8 இலட்சமும், கலைப் பயிற்சி பொருட்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

[திரு. தங்கம் தென்னரசு] [2023 ஏப்ரல் 19

3. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் அனைத்து வசதிகளுடன்கூடிய மூன்று புதிய வகுப்பறைகள் மற்றும் நூலகம் ரூ.20.92 கோடி செலவில் கட்டப்படும்

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி, நூற்றாண்டு கடந்த பழமையான கட்டடத்திலும், ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள சில கட்டடங்களிலும் செயல்பட்டு வருகிறது. மாணாக்கர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வகுப்பறை வசதிகள் ஏற்படுத்தும் வகையில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் வரைமுறைப்படி பதிப்போவியம், துகிலியல், கலை வரலாறு ஆகிய பிரிவுகளுக்கு வகுப்பறைகளும் மற்றும் நவீன வசதிகளுடன்கூடிய நூலகமும் கட்டுவதற்கு தொடராச் செலவினமாக ரூ.20.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் ரூ.1.97 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரியில் புதிதாகத் தொடங்கப்பட்ட குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் பட்டப் படிப்புகள் மற்றும் நாதசுரம், தவில் ஆகிய பிரிவுகளில் பட்டயப் படிப்புகளுக்காக 8 வகுப்பறைகள் தற்போது உள்ள கட்டடத்தின் இரண்டாம் தளத்தில் கட்டப்படும். இதற்கென ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் 20 கூடுதல் சவகர் சிறுவர் மன்றங்கள் ரூ.58 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

தமிழ்நாட்டில் தற்போது 30 மாவட்டங்களில் செயல்படும் சவகர் சிறுவர் மன்றங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்திடும் வகையில் 8 மாவட்டங்களிலும், பெருநகரங்களில் உள்ள மாணாக்கர்களுக்கு இணையாக கலைப் பயிற்சிகளைப் பழங்குடியினர் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள சிறார்களும் பெற்றுப் பயனடையும் வகையில் ஊரகப் பகுதிகளிலும் மற்றும் மண்டல மையங்கள் செயல்படும் இடங்களிலும் 12 புதிய சவகர் சிறுவர் மன்றங்கள் தோற்றுவிக்கப்படும். இதற்கெனத் தொடரும் செலவினமாக ரூ.48 இலட்சமும், பயிற்சிப் பொருட்கள் வாங்க தொடராச்

செலவினமாக ரூ.10 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திரையரங்கம் ரூ.50 இலட்சம் செலவில் நவீன முறையில் மேம்படுத்தப்படும்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் அமைந்துள்ள போதிய பராமரிப்பின்றி உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திரையரங்கம், இங்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாதுகாக்கப்பட்டு வரும் ஒலி-ஒளி நாடாக்கள் மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட பாரம்பரியக் கலைகளை உள்ளடக்கிய ஒளித் தட்டுகளைப் பார்வையாளர்கள் பார்த்து பயன்பெறும் வகையில் நவீன முறையில் புதிய உபகரணங்கள் வாங்கி மேம்படுத்தப்படும். இதற்கென ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் பழம்பெரும் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் கலைப்படைப்புகள் ரூ.20 இலட்சம் செலவில் டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தி பாதுகாக்கப்படும்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடத்தப்படும் கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் திறந்து வைக்கப்படும் பழம்பெரும் கலைஞர்களின் திருவுருவப்படங்கள் டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தி பாதுகாக்கப்படும். மேலும், இவர்களது வாழ்க்கை வரலாறு மற்றும் கலைப் படைப்புகளை கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவ-மாணவியர் கணினியில் தொடு உணர்வுடன் பார்த்துப் பயன்பெறும் வகையில் நவீனமயமாக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக கலாச்சாரப் பரிமாற்றத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்படும்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலாச்சார பரிவர்த்தனை திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் சிறப்பையும், பெருமையையும் எடுத்துக்கூறும் வகையில் செவ்வியல்

மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி நல்கை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடரும் செலவினமாகக் கூடுதலாக ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் நல்கைத் தொகையினை உயர்த்திடவும், அலுவலகத்திற்கான தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்திடவும் ரூ.1.09 கோடி ஒதுக்கப்படும்

நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் அனைத்து நலத் திட்டங்களையும் தொய்வின்றி செயல்படுத்திடும் வகையில் நலத் திட்டத்திற்கான நிதி மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் நிருவாகச் செலவுகளுக்கான தொடர் ஒதுக்கீட்டு நிதியினை ரூ.35 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாகவும், அலுவலகத்திற்கான தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்திட தொடராச் செலவினமாக ரூ.9 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.1.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அறிவிப்புகள்

அருங்காட்சியகங்கள்

1. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வளர்கலைக் கூடம், மானுடவியல் கூடம், சிறுவர் அருங்காட்சியகம் மற்றும் பாந்தியன் கட்டடங்கள் ரூ.10 கோடி செலவில் பழுதுபார்த்து சீரமைக்கப்படும்

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள வளர்கலைக் கூடம், மானுடவியல் கூடம், சிறுவர் அருங்காட்சியகம் மற்றும் பாந்தியன் கட்டடங்களின் முகப்புத் தோற்றம், பழுதடைந்துள்ள கூரைப் பகுதிகள், ஜன்னல்கள் மற்றும் சேதமடைந்துள்ள சுவர் பகுதிகளைப் பழுதுபார்த்து புதுப்பொலிவுடன் வண்ணம் தீட்டி புத்தாக்கப் பணிகள் மேற்கொள்ள தொடராச் செலவினமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. அனைத்து அருங்காட்சியகங்களிலும் உள்ள சேகரிப்புகளைப் பட்டியலிடுவதற்குத் தனிப் பயனாக்கப்பட்ட மென்பொருள் "அருங்காட்சியகத் தகவல் அமைப்பு" ரூ.1.5 கோடி செலவில் உருவாக்கப்படும்

அனைத்து அருங்காட்சியகங்களில் சேகரிப்பில் உள்ள பொருட்களைப் பற்றிய தகவல்களை அணுகவும், சேகரிப்புகளை

நிர்வகிக்கவும், மையப்படுத்தப்பட்ட ஒரு தரவுத் தளத்தை வழங்கும் அருங்காட்சியகப் பட்டியல் மென்பொருள் உருவாக்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.1.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. வேலூர் அரசு அருங்காட்சியகம் பார்வையாளர்களுக்கான வசதிகளுடனும் நவீன காட்சியமைப்பு மற்றும் ஊடாடும் தொழில்நுட்பங்களுடனும் ரூ.1 கோடி செலவில் மேம்படுத்தப்படும்

அருங்காட்சியகத் துறையில் சென்னைக்கு அடுத்து அதிக பார்வையாளர்களின் வருகையைப் பெற்றுள்ள வேலூர் அரசு அருங்காட்சியகத்தினைக் காலத்திற்கேற்றவாறு நவீன ஒளியமைப்பு, புதிய காட்சிப் பெட்டிகள் மற்றும் ஊடாடும் தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்திட தொடராச் செலவினமாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. மதுரை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள சிற்பப் பூங்கா மற்றும் விலங்கியல் காட்சிக் கூடங்கள் ரூ.50 இலட்சத்தில் மேம்படுத்தப்படும்

மதுரை அரசு அருங்காட்சியகத்தில் திறந்தவெளியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கற்சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றைப் பாதுகாக்க மேற்கூரை அமைத்து சிற்பப் பூங்காவைச் சீரமைக்கவும், விலங்கியல் பொருட்களை சுற்றுச்சூழல் அமைப்புடன் காட்சிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளவும் தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. கடலூர் அரசு அருங்காட்சியகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் காட்சியமைப்பு முறைகள் நவீன முறையில் ரூ.50 இலட்சத்தில் மேம்படுத்தப்படும்

கடலூர் அரசு அருங்காட்சியகத்தின் தற்போதுள்ள காட்சியமைப்பினை சுற்றுச்சூழலியல் முறையில் மாற்றி புதிய காட்சிப் பெட்டிகள், நவீன ஒளியமைப்பு, ஊடாடும் தொழில்நுட்பங்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான வசதிகளுடன் மேம்படுத்திட தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. சென்னை ஹுமாயுன் மகால் பாரம்பரியக் கட்டடத்தில், 'சுதந்திர தின அருங்காட்சியகம்' அமைப்பதற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15–8–2022 அன்று சுதந்திர தின விழாவில் அறிவிக்கப்பட்டவாறு, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் 260 ஆண்டுகால தொடர் பங்களிப்பினை வருங்கால இளம் சமுதாயத்தினர் அறிந்துகொள்ளும் வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய 'இந்திய சுதந்திர தின அருங்காட்சியகம்' சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பழமை வாய்ந்த ஹுமாயுன் மகாலில் அமைத்திட திட்ட அறிக்கை தயாரிக்க தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அறிவிப்புகள்

தொல்லியல்

1. தமிழ்நாட்டின் தொன்மையான பண்பாட்டு மரபுகளைக் காலவரிசைப்படி அறிந்துகொள்வதற்காகத் தமிழ்நாட்டின் தொல்லியல் மற்றும் வரலாற்று நிலவரைபடத் தொகுதி (Atlas) தயாரிக்கும் பணிகள் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்

தமிழ்நாட்டின் தொன்மையான பண்பாட்டு மரபுகளைக் காலவரிசைப்படி அறிந்துகொள்வதற்காகப் புவியியல் தகவல் முறைமைமூலம் (Geographical Information System) தொல்லியல் மற்றும் வரலாற்று நிலவரைபடத் தொகுதி (Atlas) விளக்கங்கள் மற்றும் வரைபடங்களுடன் மின்பதிப்பாக்க முறையிலும், நூல் வடிவிலும் தயாரிக்கும் பணிகள் 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.94 இலட்சத்திலும், 2024–2025 ஆம் நிதியாண்டில் ரூ.81 இலட்சத்திலும், 2025–2026 ஆம் நிதியாண்டில் ரூ.25 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

2. பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமும் சுற்றுலாத் தலமுமாகிய மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் வேலி மற்றும் புல்வெளித்தளம் அமைக்கும் பணிகள் ரூ.68.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்

மதுரை நகரில் புகழ்பெற்ற தொல்லியல் சின்னமும், சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் தலமுமாகிய

திருமலை நாயக்கர் அரண்மனையில், ஏற்கெனவே இருந்துவரும் கம்பி வேலி அமைப்பினைக் கூடுதலான உயரத்திற்கு நீட்டிப்பு செய்து, முள்கம்பியினைச் சீரமைப்பு செய்யும் பணிகள் மற்றும் அரண்மனையின் தெற்கு மற்றும் மேற்குப்புறங்களில் புல்வெளித்தளம் அமைத்து பசுமையாக்கிடும் பணிகள் மேற்கொள்ள 2023–2024 ஆம் நிதியாண்டில் தொடராச் செலவினமாக ரூ.68.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்தத் துறையில் எங்களோடு இருந்து, உதவி செய்திருக்கக்கூடிய துறையினுடைய செயலாளர் டாக்டர் R. சந்திரமோகன், இ.ஆ.ப. அவர்கள், மதிப்பிற்குரிய திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள், திரு. S.R. காந்தி அவர்கள், அதைபோல் நம்முடைய இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 29–சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.201,46,60,000/–, மூலதனக் கணக்கில் ரூ.153,16,26,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.80,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு

வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 4–15

(ஆ) கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.571,26,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 19] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

—

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைமையில் பிற்பகல் 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும் —*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 36 — திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(ஈ) கோரிக்கை எண் 38 — பொதுத் துறை
(உ) கோரிக்கை எண் 1 — மாநில சட்டமன்றம்
(ஊ) கோரிக்கை எண் 2 — ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(எ) கோரிக்கை எண் 16 — நிதித் துறை
(ஏ) கோரிக்கை எண் 35 — மனிதவள மேலாண்மைத் துறை
(ஐ) கோரிக்கை எண் 50 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

—

(இ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு*

முயற்சிகள் துறை, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.408,07,67,000/–, மூலதனக் கணக்கில் ரூ.74,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

** எதிர்த்து, மக்களைக் காத்த நம் இருபெரும் தலைவர்களின் ஆசிர்வாதத்தோடும், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்கள், நிர்வாகிகளின் பேராதரவோடும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்கிற வார்த்தை நன்றாக இல்லையே! அந்த வார்த்தைகளை நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. It is not good. திரு. செந்தில் குமார், நீங்கள் பேசுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: வாராது வந்த மாமணிபோல், கழகம் காத்து, புரட்சித் தலைவரின் வள்ளல் குணமும், புரட்சித் தலைவியின் துணிவும், துணிச்சலும், ஆளுமைத் திறனும் ஒருங்கே பெற்ற தமிழகத்தை மீட்க வருகின்ற கழகப் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன்.

என்னைப்போல் சாதாரணத் தொண்டனை, ஒன்றியக் கழகச் செயலாளராகவும், சட்டமன்ற வேட்பாளராகவும் அறிவித்து, வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற வைத்த எங்கள் மண்ணின் மைந்தர், மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எனது வாணியம்பாடி தொகுதி அன்பு வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக அயராது பாடுபட்ட கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நண்பர்களுக்கும், என்னைப் பெற்ற தாய், தந்தையருக்கும், எனது மனைவிக்கும் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தந்தையின் 30 ஆண்டுக் காலக் கனவை, எனது 35 வயதில் நிறைவேற்ற வாய்ப்புத் தந்தமைக்கு கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எனது மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 19] [திரு. கோ. செந்தில் குமார்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு * முதல் பேச்சு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும். . .

பிற்பகல் 5–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கூறிய ** என்கிற வார்த்தைக்கு அதிக அளவில் எதிர்ப்பு இருக்கிறது. எனவே, அதனை முதல் பேச்சு என்று மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடு) காலங்காலமாக இருந்திருக்கிறது. தற்போது உள்ள தாய்மார்கள் அந்த வார்த்தையை விரும்பவில்லை, எனவே அதனை மாற்றிவிடுகிறேன்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் தங்களுக்கும் மற்றும் மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்து உரையாற்றுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் உரையைத் துவங்கும்முன் என் தொகுதி சார்ந்த ஒருசில கோரிக்கைகளை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியிலுள்ள காவலூர், நாயக்கனூர், பீமகுளம், அருணாசலம் கொட்டாய் கிராமப்பகுதிகளில் ஒற்றைக் கொம்பு யானை ஒன்று காலில் பலத்த காயங்களுடன் புகுந்து சிகிச்சை வேண்டி பிளிறிக்கொண்டிருக்கிறது. இதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துறையின்மூலம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளிடம் கூறி தீவிர சிகிச்சை அளிக்க வேண்டுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அது என் உரிமை, நீங்கள் யாரும் தலையிடக் கூடாது. (குறுக்கீடுகள்)*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் அனைத்து நிகழ்வுகளையும் எந்த வெட்டுதலுமின்றி நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மேலும் விளக்கம் சொல்லவேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் கூறிய ** அது என் உரிமை, அதை நீங்கள் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. நான் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் விதியைச் சொன்னேன். நீங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கொடுக்கவில்லையென்று நான் சொன்னேனா? (குறுக்கீடுகள்) நான் விதியைச் சொன்னேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்கு நான் பதில் சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** எனவே அதே மரபினை அந்த ஆட்சியில் இருந்த மரபினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் பின்பற்றியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இதன்மீது விவாதம் இல்லை. இது என் உரிமை. நான் விதியை சொன்னேன். நீங்கள் நடந்ததைச் சொன்னீர்கள். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 19]

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் சரியாகத்தான் பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை நீக்கிவிட்டீர்கள், பரவாயில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதுபோல் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டன. அதன் பிறகு நடந்ததை நீங்கள் குறிப்பிடவில்லை. அதன்பிறகு எங்கள் அரசின் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இருந்தபோது, மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு 3 வருடங்கள் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. அதேபோன்று மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்டது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். ** கோரிக்கைதான் வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்* consider *செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, மேலும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நீங்கள் 10 வருடங்கள் ஆட்சியிலிருந்த காரணத்தால், அந்தக் கணக்கு வரும்போது, அந்தக் கணக்கின் அடிப்படையில் வரும்போது, உங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர் தலைவராக இருந்திருப்பார்கள். அதன் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும். விதி அதைதான் சொல்கிறது. அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. நீங்கள் என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் குமார், தற்போது வேறு* subject *குறித்து உரையாற்றவும்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் அனைத்து நிகழ்வுகளும் எந்த வெட்டுதலுமின்றி நேரடி ஒளிபரப்பு செய்யப்பட வேண்டும். அதனை அன்றாடம் சட்டமன்றப் பேரவையின் வலைதளத்தின்மூலம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின்* e-mail *முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் குறைந்தது இரண்டு தினங்களுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது முதல் நாள் இரவு வருவதால் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

சட்டமன்றப் பேரவைக் குழுக்கள் இரண்டு ஆண்டுகளாக வட இந்திய ஆய்வுப் பயணம் மேற்கொள்ள இயலவில்லை. எனவே, சட்டமன்றப் பேரவை ஆய்வுக் குழுக்கள் பிற மாநிலங்களுக்கான ஆய்வுப் பயணத்தினை செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் இருவருக்கு ஒருவர் வீதம் பணியினை மேற்கொள்வதால், பணிச் சுமையால், பணிகளை சரிவர செய்ய முடிவதில்லை, காலதாமதம் என பெரும் இன்னலுக்கு மக்கள் ஆளாகின்றனர். ஆகவே, 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள இடங்களில் பணியாளர்களைப் பணியமர்த்த வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 4 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த 9 மாதங்களுக்கு முன்பாக நடைபெற்ற TNPSC Group-IV தேர்வு முடிவு கடந்த மாதம்தான் வந்தது. சுமார் 21 இலட்சம் பேர் விண்ணப்பித்து, 18½ இலட்சம் பேர் தேர்வு எழுதினர். அவர்களின் தேர்வு முடிவு வந்தும் பணி வழங்கப்படுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை நகர்வுகள் ஏதும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர்களின் நலன் கருதி, விரைவில் பணியில் அமர்த்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன். TNPSC Board கிட்டத்தட்ட 13 உறுப்பினர்களைக் கொண்டது. இப்போது, 3 உறுப்பினர்கள் மட்டுமே உள்ள நிலையில் தற்காலிக Chairman ஆக ஒருவர் உள்ளார். மீதமுள்ள 10 உறுப்பினர்களையும் உடனடியாக நியமனம் செய்து TNPSC Board-ல் உள்ள காலியிடங்களை சரி செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காலி பணியிடங்களை நிரப்ப சொல்கிறீர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *அதேபோல்,* TNPSC Group–I, Group–II, Group–IV *ஆகிய தேர்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்பட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பு டிசம்பர் மாதம் வரவிருப்பதாகவும், மற்ற* TNPSC Group exams *எல்லாம் ஆண்டுதோறும் நடைபெறும்வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வருடத்திற்கு ஒருமுறை தேர்வுகளை நடத்த வேண்டும். கிட்டத்தட்ட 4 வருடங்களாக நடத்தப்படவில்லை. 2 வருடங்கள்* COVID *காரணமாக நாங்கள் செய்யவில்லை. அடுத்த இரண்டு வருடங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது மிக நியாயமான கோரிக்கை. ஒரு சிறிய விளக்கம். ஏற்கெனவே, ஓர் ஆண்டு நீதிமன்ற நடவடிக்கையினால் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் 2 ஆண்டுகள்* COVID–*னால் நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது ஓர் ஆண்டினுடைய எல்லா தேர்வுகளுக்கான முழு* list, *கிட்டத்தட்ட 80 தேர்வுகளுக்குப் பட்டியல் வெளியிடப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுபற்றி ஏற்கெனவே நான் பல முறை இங்கே கூறியிருக்கிறேன். ஆனாலும், என்னுடைய பதிலுரையில் இன்னும் விளக்கமாகக் கூறவிருக்கிறேன். இந்த விதிமுறையே என்னைப் பொறுத்தவரைக்கும் காலத்திற்கு ஏற்றதாக இல்லை. இது பழைய காலத்து விதிமுறை. இந்தத் திட்டத்தையே சிறப்பிப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் முழுவதும் பேசிய பிறகு, என் பதிலுரையில் அதற்கு நான் விளக்கம் அளிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம்* UPSC exam–*ஐ அறிவிப்பதுபோல்,*

சரியான நேரத்தில் ஆண்டுதோறும் நடைபெற வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் UPSC exam-ஐ online-ல் மத்திய அரசாங்கம் அறிவிக்கவில்லை. அரசு online முறையில் TNPSC Group exam நடத்துவதற்கான வழிவகையைச் செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

IAS தேர்விற்கான IAS Coaching Centre, Anna Administrative Staff College, சென்னையில் மட்டும் இருக்கிறது. தென் மாவட்டங்களான மதுரை, திருச்சி போன்ற இடங்களில் IAS Coaching Centre-ஐ உருவாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று 3 முறை அறிவிக்கப்பட்ட அகவிலைப்படியானது 6 மாதக் காலம் கடந்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசு அறிவித்துள்ள 4 சதவிகித அகவிலைப்படி குறித்தும், தமிழ்நாட்டில் பணி செய்யும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. எனவே, மத்திய அரசு அறிவிக்கும் அகவிலைப்படிக்கு இணையான அகவிலைப்படியினை மத்திய அரசு அறிவிக்கும் தேதியிலிருந்தே நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் old pension scheme-க்கான வாக்குறுதியைக் கொடுத்திருந்தீர்கள். பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பல குழுக்கள் இயங்கிவரும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் அதிக வருவாய் ஈட்டக்கூடிய TASMAC நிறுவனத்திற்கென ஒரு தனிக் குழு அமைத்திட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 2 வருடங்களில் எத்தனையோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் சேர்த்து மேசையைத் தட்டுகிறார்கள்.

2023 ஏப்ரல் 19]

திரு. கோ. செந்தில் குமார்: கிட்டத்தட்ட எல்லாவற்றையும் உயர்த்தும்போது நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்தோம். இதை உயர்த்தினால் 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சௌகரியம். ஏனென்றால் 12 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக வரியை உயர்த்தி, 3 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட 54 இலட்சம் ரூபாய் GST-க்கே போய்விடுகிறது. திட்ட மதிப்பிடுதலும்—3, 4 வருடங்களுக்கு முன்பு 1 கிலோ மீட்டர் சாலை வசதி ஏற்படுத்த வேண்டுமென்றால், 13 இலட்சம் ரூபாய் இருந்தாலே WBM போட்டு, 1 layer ஜல்லி போட்டு, தார் போட்டு விடலாம். இன்றைக்கு 1 கிலோ மீட்டர் சாலை ஏற்படுத்தவே 37 இலட்சம் ரூபாயிலிருந்து 42 இலட்சம் ரூபாய் வரை செலவு அதிகமாகிறது.

பள்ளிகள், கூட்டுறவுத் துறை ரேஷன் கடைகள், விவசாயிகளுக்கான சிறு பாசனக் கண்மாய்கள், மடைகள் போன்றவற்றைச் சீரமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயே செய்யக்கூடிய நிலை உள்ளதால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.3 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்த வேண்டுமென்று அனைவருடைய சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–30

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு உதவியாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பக்கத்து மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் வழங்குகிறார்கள். நமக்கு அதையெல்லாம் கொடுக்காவிட்டாலும், இதையாவது கொடுக்கலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் high mast light, மாற்றுத் திறனாளிகளுக்கு bike போன்றவற்றையெல்லாம் வழங்குவதைப்போல சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கும் இ-சேவை மையம் அமைத்துக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குரிய technical assistant, computer operator போன்ற பணியாளர்களை பணியமர்த்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. A.P.J. அப்துல் கலாம் ஐயா அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள சின்னப்பள்ளி குப்பம், மின்னூர் ஆகிய பகுதிகளில் இலங்கைத் தமிழர்களுக்கெனக் குடியிருப்புகள் கட்டப்படும் பணிகள் கொஞ்சம் காலதாமதமாகவும், மெதுவாகவும் நடைபெற்று வருகின்றன. இதனை விரைந்து முடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டிற்கு 100 நாட்கள் சட்டமன்றக் கூட்டத் தொடரை நடத்துவதாகத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தீர்கள். தற்போது 40 நாட்கள், 45 நாட்கள்தான் நடக்கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடரை 100 நாட்கள் நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அனைவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முதல் முறையாக பேசுபவருக்கு, உங்கள் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் support செய்ய வேண்டும். செய்யாமல் இருக்கிறீர்களே! (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அப்படி 100 நாட்கள் நடத்தவில்லையென்றாலும்கூட, 50 நாட்கள் நடத்தும்பட்சத்தில் ஓர் உறுப்பினருக்கு ஒரு மணி நேரம் வீதம், அது கேள்வி நேரமாக இருந்தாலும் சரி, Zero Hour ஆக இருந்தாலும் சரி, மானியக் கோரிக்கையாக இருந்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக ஒரு மணி நேரம் கால அவகாசம் கிடைக்கும் வகையில் செய்து தந்தால், தொகுதியின் மொத்த கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சராசரியாக 32 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். உங்களைப்

போன்று double உள்ள உறுப்பினர்கள் 18 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேசுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கான pension தொகையை 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளே இல்லாத தமிழகம் என்பதை உருவாக்க கலைஞர் வீடு வழங்கும் திட்டம் கொண்டு வரப்படும் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். பசுமை வீடு, அதனுடைய fund எல்லாம் IAY, PMAY வீடுகளில் வருகிறது. அதைத் தனித்தனியாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் IAY வீடுகளின் norms வேறு, PMAY வீடுகளின் norms வேறு. எனவே, கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்படி கொடுத்தாலும் சரி. எங்கள் பசுமை வீடு திட்டத்தை நிறுத்திவிட்டீர்கள். நாங்கள் கொடுத்துக் கொண்டிருந்தது, இப்போது இல்லை. நீங்கள் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதாகத் தெரிவித்திருந்தீர்கள். கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை அரசுப் பணியாளர்களாகப் பணியமர்த்தி காலமுறை ஊதியம் வழங்கப்படுமென்று சொன்னீர்கள். அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தைத் தந்திருக்கிறீர்கள். அதனால் ஆட்டோ ஓட்டுனர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆட்டோ ஓட்டுனர்களுக்குச் சொந்தமாக ஆட்டோ வாங்கிட 10,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். அவர்களுக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆட்டோ ஓட்டுனர்கள் எல்லாம் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். 10,000 ரூபாய் மானியத் தொகையை 25,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால், அவர்களின் வாழ்வாதாரம் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று பேருந்துகளுக்கு pink colour paint அடித்திருக்கிறீர்கள்; நன்றாக இருக்கிறது. Centre-ல் கூட இருக்கிறது. அந்தப் பேருந்தில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து பயணம் செய்வதால், முன் படிக்கட்டு வழியாக பெண்களும், பின் படிக்கட்டு வழியாக ஆண்களும் ஏறுகிற மாதிரி தனித்தனியாக இருந்தால், வேலைக்குப் போகும் பெண்கள், கூட்ட நெரிசலில்கூட எந்தவித சங்கடமும் இல்லாமல் பயணம் செய்வார்கள். தனித்தனியாக இருந்தால் நன்றாக இருக்கும். எவ்வளவு கூட்டம் இருந்தாலும் கொஞ்சம் சேர்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி வலியது என்று சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனைகளை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி வலியது என்று சொல்வார்கள். விதி வலியது என்றாலும், விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு அம்மா அவர்களது அரசின் நிதி மேலாண்மை நல்லதொரு சான்றாகும். எங்கள் கழக ஆட்சியிலும் நிதிப் பற்றாக்குறை இருந்தது. வருவாய்ப் பற்றாக்குறையும் இருந்தது. கொரோனா பெருந்தொற்று காரணமாக ஊரடங்கால் மாநிலத்தின் சொந்த வரி வருவாயும் சரி, மாநிலத்தின் சொந்த வரியில்லா வருவாயும் சரி, வெகுவாகக் குறைந்திருந்தது. மற்றொருபுறம் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் மற்றும் கொரோனா பெருந்தொற்று ஆகியவையும் மாண்புமிகு அம்மாவின் அரசிற்கு மிகப் பெரிய சவால்களாக இருந்தன. ஆயினும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு, அந்தப் பேரிடர் காலத்தின் தாக்கத்தைத் தமிழக மக்கள் உணராத வகையில் தாயன்போடு மக்களைக் காத்து பேரிடர்களை வென்ற பேராண்மையாக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பார்கள். ஆனால், கேட்காமலேயே கொடுத்த அம்மாவின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) பசியறிந்து பாலூட்டும் அன்னையைப்போல, மக்களின் துயர் அறிந்து, கடும் நிதிச் சுமைக்கிடையேயும் தமிழக மக்கள் கேட்காமலேயே 2.607 கோடி

அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2,500/– பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மகிழ்ச்சியைப் பொங்க வைத்த பெருமை அம்மாவின் அரசுக்கு உண்டு.

பிற்பகல் 5–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள்; அதாவது, இந்த அரசின் சிறப்பான நிதி நிர்வாகத்தால், வரவு–செலவுத் திட்டத்தில் வருவாய்ப் பற்றாக்குறை குறைந்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஒன்றும் புதியதோ, புதுமையோ அல்ல. அம்மாவின் ஆட்சிக் காலத்தில்கூட ** படைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது அவருடைய * முதல் பேச்சு என்பதால் எனக்குக் குறுக்கிட விருப்பமில்லை. ஆனால், 2014–க்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டும் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை அதிகரித்துக்கொண்டே போனதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அவர், கணக்கு சரியாக இல்லையென்றால் அதை இங்கே கொண்டு வந்து சமர்ப்பிக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தவறான கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். அதை ஆதாரத்தோடு கொண்டு வந்து சமர்ப்பிக்கட்டும். இல்லையென்றால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் சொல்வது தவறான கருத்து. எந்த ஆண்டிலும் அது குறையவே இல்லை. அப்படி அது குறைந்ததற்கு அவர்களே வெளியிட்ட புத்தகம் ஏதாவது இருந்தால் அதைக் கொண்டு வந்து காண்பிக்கச் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்களுக்கு அதற்காக* time *கொடுக்கிறேன். அதற்குள் அவர் கொண்டு வந்து கொடுக்கவில்லையென்றால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமின்றி, நிதிப் பற்றாக்குறை 2.56 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. அதேவேளையில் உற்பத்தி மதிப்பு 2.79 சதவிகிதம் உயர்த்தப்பட்டது. உதய் திட்டம்,* Pay Commission, *ஊதிய உயர்வு போன்றவற்றின் தாக்கம் குறையும் என்பதாலும், வரி வருவாயில் காணப்படும் வளர்ச்சியாலும் வருவாய்ப் பற்றாக்குறை படிப்படியாகக் குறையும் என்று ஏற்கெனவே நாங்கள் கணித்து, அதற்கான செயல் திட்டங்களையும் வகுத்திருக்கிறோம். அதைத்தான் நீங்கள் இப்போது ** செய்து வருகிறீர்கள். அம்மாவின் அரசில்,* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடு) *ஏதாவது ஆதாரத்தோடு அல்லது புள்ளிவிவரத்தோடு பேச வேண்டும். 7 வருடங்களாக ஒவ்வோர் ஆண்டும் புது* record revenue deficit, *புது* record fiscal deficit *எல்லா வகையிலும் நடந்த பிறகு, அவர், நாங்கள் சிறப்பாக செய்து வைத்துவிட்டோம்; அதைத்தான் நீங்கள் ** செய்கிறீர்கள் என்று சொல்கிறார். இது மிகவும் தவறான கருத்து. ஒன்று வருவாய்ப் பற்றாக்குறையில் அல்லது நிதிப் பற்றாக்குறையில் ஓர் ஆண்டு அல்ல, 7 ஆண்டுகளில் 1 ரூபாய் குறைத்ததாகக் காட்டட்டும்;* (மேசையைத் தட்டும் ஒலி) *அதற்குப் பிறகு பேசட்டும். எதுவுமே செய்யாமல், நாங்கள் செய்து வைத்துவிட்டுப் போய்விட்டோம்; நீங்கள் ** செய்கிறீர்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள், பேசுங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 19]

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதல் முதலில் * முதல் பேச்சு பேசுகிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எல்லாமே தெரிந்தவர்தான். அவர்கள் அமெரிக்காவிற்குகூட* Finance Minister *ஆக இருக்கலாம். ஆனால், உறுப்பினர் அவர்கள் புதிதாகப் பேசுகிறார்கள். அவர் பேசுவதைக் கேட்டுவிட்டு பதில் சொல்லட்டும். ஆனால், அவர் பேசக் கூடாது என்றெல்லாம் சொல்ல முடியாது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அதற்குப் பிறகு அவர்கள் பதில் சொல்லட்டும். ஆனால், பேசக் கூடாது, பேசக் கூடாது என்று சொன்னால் பிறகு எப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். அதாவது, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொல்லும்போது அதற்கான சரியான பதிலைச் சொல்லவில்லை என்றால், அந்த உறுப்பினர் இந்த அவையில் புதியவர்; முதல் முதலாகப் பேசுகிறார் என்று இந்த அவையில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும். ஆனால், பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் அது செய்தியாக வரும்போது சரியான பதில் இல்லாமல் இருந்தால் (குறுக்கீடு)* unparliamentary word *இல்லை; தவறான தகவலையும் சொல்லக் கூடாது அல்லவா! மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் கடனில் தத்தளிக்கச் செய்துவிட்டது என்று மேடைதோறும் பேசினீர்கள். 2011–ல் தி.மு.க. ஆட்சியைவிட்டுச் செல்லும்போது தமிழகத்தின் கடன் ரூ.1 இலட்சம் கோடி. 2021–ல் அ.தி.மு.க. ஆட்சியைவிட்டுச் சென்றபோது தமிழகத்தின் கடன் ரூ.4 இலட்சத்து 85 ஆயிரத்து 660 கோடியாகும். மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் 21.83% ஆக இருந்தது. கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நாங்கள் பெற்ற கடன் ரூ.3 இலட்சத்து 85 ஆயிரம் கோடி மட்டுமே. குறிப்பாக, வெகுசிறப்பாகச் சொல்லப்போனால், அம்மாவின் அரசு வாங்கிய கடனில் 90 சதவிகிதம் மூலதனச் செலவிற்கு மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. அதாவது, பாலங்கள், வருவாய் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், தடுப்பணைகள்*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

கட்டுதல், மாவட்டம் பிரிப்பு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல், S.P. அலுவலகம் கட்டுதல், மாவட்ட நீதிமன்றம் கட்டுதல், 11 மருத்துவக் கல்லூரிகள் அமைத்தல் (மேசையைத் தட்டும் ஒலி) 7 சட்டக் கல்லூரிகள் அமைத்தல், 100-க்கும் மேற்பட்ட Polytechnic மற்றும் Engineering Colleges, பள்ளிக்கூடங்களின் நிலையை உயர்த்துதல், அவினாசி-அத்திக்கடவு திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை மூலதனமாக. . .

பிற்பகல் 5-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கை இந்த மேசை மீதுள்ள சிறு கணினியில் இருக்கும் என்று நினைத்தேன்; இங்கே இல்லை. அதனால் ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலதனத்தைப் பற்றிச் சொன்னார்.

2006-ல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, ஆண்டுக்கான முதலீடு 5,000 கோடி ரூபாய். அது 2011-ல் ஆட்சியை முடித்து போகும்போது 13,000 சொச்சம் கோடி ரூபாய். அதாவது 2 மடங்குக்குமேல் உயர்த்தப்பட்டது. ஆனால், 13,000 சொச்சம் கோடி ரூபாய் விட்டுவிட்டுப் போனதை, 10 ஆண்டுகளில் 20,000 சொச்சம் கோடி ரூபாய்க்குத்தான் உயர்த்தினார்கள். 100 சதவிகிதம்கூட 10 ஆண்டுகளில் முதலீட்டை உயர்த்தவில்லை. இன்னும் 5 நிமிடங்களில் நிதித் துறையிலிருந்து ஒவ்வோர் ஆண்டுக்குமான தகவலைக் கொண்டுவந்து கொடுக்கிறேன். தயவுசெய்து அதையும் பதிவு செய்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவலுக்கு எதிர்ப்பான தகவல். இப்போது அலுவலகத்திலிருந்து வெள்ளை அறிக்கையைக் கொண்டுவரச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி மேலாண்மையைச் செவ்வனே செய்து, செம்மையாக நல்லாட்சியைத் தந்து, செழுமையான

தமிழகத்தை படைத்த காரணத்தினால்தான் நல்லாட்சிக்கான தேசிய விருதினைத் (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து 2 முறை, முன்னாள் முதல்வர், அனைத்திலும் முதன்மையான முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பெற்று பெருமை சேர்த்துத் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று நல்ல ஆளுமையையும், நிதி மேலாண்மையையும் தமிழக மக்கள் இந்த அரசிடம் எதிர்பார்க்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 2 நிமிடங்கள் இருக்கின்றன. உரையை முடியுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக் கோரிக்கைகள் இருக்கின்றன. என்னுடைய வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியின் முக்கியக் கோரிக்கைகளைப் பதிவு செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு 2 தகவல்கள்.

ஒன்று, தேர்வாணையத்தின் Group IV தேர்வுக்கான interview முடிந்து, இப்போது counselling நடந்துகொண்டிருக்கின்றது. அதற்கான இறுதிப் பட்டியல் விரைவில் வெளியிடப்படும். I.A.S. Coaching Centre, Anna Administrative Staff College மூலமாக நடத்தப்படுகிறது. Initial-ஆக சென்னையில் மட்டும்தான் இருந்தது. இப்போது மதுரை, கோவை ஆகிய 2 இடங்களில் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. இன்னும் பல இடங்களுக்கு இதை விரிவாக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலியை சேர்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: இரண்டாவது, நிதித் துறையை சிறப்பாக மேலாண்மை செய்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். 2014 ஆம் ஆண்டு வரைக்கும், அதாவது

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 19

2003–2006 வரை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் இருந்தபோதும், 2006–2011 வரை தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தி.மு.க. ஆட்சி இருந்தபோதும், 2011–2014 வரை மாண்புமிகு அம்மையார் இருந்தபோதும் சிறப்பாகச் செயல்பட்டது.

ஏனென்றால் உற்பத்தியில் கடன், வெறும் number*–ஐ பார்த்தால் பிரயோஜனமில்லை என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம் வந்தபோது, 28 சதவிகிதம் இருந்தது. அந்த 28 சதவிகிதம் படிப்படியாக அ.தி.மு.க. ஆட்சி, தி.மு.க. ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி என்று 2014, 2015 வரைக்கும் குறைந்துகொண்டே வந்து, கிட்டத்தட்ட 17 சதவிகிதத்திற்கு எல்லோரும் கொண்டு வந்துவிட்டோம். எல்லோருக்கும் பங்கு உண்டு. ஆனால் 2014–ல் அம்மையார் அந்தப் பொறுப்பிலிருந்து இறங்கியபிறகு, தொடர்ந்து அது தவறான திசையில்போய், அவர்கள் போகும்போது, 24 சதவிகிதம், 25 சதவிகிதத்தில் முடித்துக் கொடுத்தார்கள். 17 சதவிகிதம் வரைக்கும் வந்தது நல்லது; அதற்குமேல் இறங்கியது தவறு. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவ்வளவு சிறப்பாகச் செயல்பட்ட அன்றைக்கு இருந்த நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களை எந்த அளவிற்குப் பாராட்டிப் பேசுகிறார் என்பதைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள், உரையை முடியுங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அமைச்சர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். நீங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கட்டுப்பட்டுதான் இருக்கிறீர்கள். அதேபோல, அம்மா அவர்கள் இருந்தபோதும், எடப்பாடியார் அவர்கள் இருந்தபோதும் எல்லோருமே முதலமைச்சர் அவர்களுக்குக் கட்டுப்பட்டு, அவர்களுடைய வழிகாட்டுதலில்தான் செய்வார்கள். ஆகவே, அப்படியெல்லாம் நீங்கள் தனியாகப் பேச முடியாது. நீங்கள் மட்டும் அப்படிச் செய்கிறீர்களா? நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்காமல், நீங்களேதான் எல்லாம் செய்கிறீர்களா?*

2023 ஏப்ரல் 19]

பிற்பகல் 5–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். நீங்கள் paper–ஐ எடுப்பதற்கே அரை நிமிடம் ஆகிவிடும் போலிருக்கிறது. இன்னும் ஒன்றரை நிமிடம்தான் இருக்கிறது. உரையை முடியுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக் கோரிக்கைக்கு வந்துவிடுகிறேன். வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியின் பிரதான கோரிக்கை. கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், அன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் அந்த வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். New Town railway crossing–ல் பாலம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் உங்கள் கோரிக்கை என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) கோரிக்கை என்னவென்று சொல்லிவிட்டால் பதிவாகிவிடும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடையப்போகிறது.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையை முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். மற்றவற்றையெல்லாம் கொடுத்துவிடுகிறேன். பதிவு செய்து தாருங்கள். இந்த இரண்டு நிமிடங்களில் விஷயத்தைப் பேசிவிடுகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலின்போது, நாடாளுமன்ற வேட்பாளராக வெற்றி பெற்ற அடுத்த நாள் முதலே இந்தப் பணி தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், தற்போது 5 வருடங்கள் முடியப் போகிறது; இன்னும் செய்யவில்லை. எனவே, அந்தப் பணியினை விரைந்து செய்ய வேண்டும். ஏனென்றால், அங்கு இலட்சக்கணக்கான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பணி என்னவென்றே நீங்கள் இன்னும் சொல்லவில்லை.

திரு. கோ. செந்தில் குமார்: அது இரயில்வே மேம்பாலப் பணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரயில்வே மேம்பாலம், right.

திரு. கோ. செந்தில் குமார்: அதேபோன்று வாணியம்பாடி தொகுதிக்கென ஆய்வு மாளிகை ஒன்று, கடந்த கூட்டத் தொடரில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அது வாணியம்பாடியைத் தவிர்த்துவிட்டு ஜோலார்பேட்டை தொகுதியில் தற்போது கட்டப்பட்டு வருகிறது. Actual ஆக வாணியம்பாடியில் இருக்கின்ற Travellers Bungalow-ஐ இடித்துவிட்டு கட்டுவது போன்றுதான் சொல்லியிருந்தார்கள். ஏற்கெனவே, ஜோலார்பேட்டையில் 4 ஆய்வு மாளிகைகள் இருந்தும், தற்போது இதையும் அங்கேயே கட்டுவதைப் பார்த்தால், வாணியம்பாடி தொகுதி புறக்கணிக்கப்படுவது போன்று இருக்கிறது. அதுவும் NHAI இடத்தில் கட்டப்பட்டு வருகிறது. மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், இது NHAI இடத்தில் இருப்பதாகத் தெரிகிறதே என்று கேள்வி நேரத்தில் எழுப்பியிருந்தார்கள். அந்த வழி முழுவதும் அவர்களது இடத்தில் இருக்கிறது. இதற்கான documents அனைத்தையும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது கொடுத்திருக்கிறேன். அது NHAI இடத்தில் இருக்கிறது. இதேபோன்று 12 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது, எங்கள் ஆட்சிக்குமுன் உங்கள் ஆட்சியில் கட்டப்பட்ட பேருந்து நிலையம் இன்றுவரை திறக்கப்படாமல் இருக்கிறது. அதன் மதிப்பீடு 10 கோடி ரூபாய். அந்த 10 கோடி ரூபாய் வீணாகிப் போனதால், வாணியம்பாடி நகராட்சி இன்றுவரை கடனில்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். உங்கள் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்து தந்துவிடுகிறேன்.

திரு. கோ. செந்தில் குமார்: இதுபோன்று நிதி வீணாகிப் போவதால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகுதான், அது waste ஆனதா,

waste ஆகவில்லையா என்பது தெரியும். (குறுக்கீடு) இரயில்வே மேம்பாலம் என்று சொல்லும்போது, அதை State Government மட்டும் செய்ய முடியாது. Central and State Governments சேர்ந்துதான் செய்ய வேண்டும். அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்குப்பின் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்கென ஒரு Indoor mini stadium, அதாவது, உள் விளையாட்டரங்கம் அறிவிக்கப்பட்டது. அதற்காகத் தேர்வு செய்யப்பட்ட இடம் வாணியம்பாடியிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ள நிம்மியம்பட்டு ஊராட்சியில் அமைந்திருக்கிறது. வாணியம்பாடி நகரில் சுமார் 1½ இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஒன்றாக வாழும் பகுதி. இங்கேயே அந்த விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டால் இரு சாராரும் ஒன்றாக விளையாடி, ஒற்றுமையைப் பேணக்கூடிய வகையில் இருக்கும். இடம் இருக்கிறது; 3 இடங்களை நாங்கள் காண்பித்தோம்; அங்கெல்லாம் அமைக்காமல் 15 கி.மீ. தொலைவில் அமைக்கப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, இதைப் பதிவு செய்துவிட்டீர்கள். அடுத்த பொருள் குறித்துப் பேசுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இடம் தேர்வு செய்திருக்கிறார்கள். அதை இங்கேயே மாற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தகுந்த இடம் இருக்கிறது என்று நீங்கள் எழுதிக்கொடுங்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கோரிக்கைகளைத் தங்களிடம் வழங்குகிறேன். அவற்றை நான் படித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: படித்ததாக அல்ல, நீங்கள் பேசியதாகவே நான் பதிவு செய்து தந்துவிடுகிறேன். நன்றி.

திரு. கோ. செந்தில் குமார்: தொகுதிக் கோரிக்கைகள்.

ஆலங்காயம் வட்டார சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். மல்லகுண்டா ஊராட்சியில் தொழிற்பூங்கா அமைக்க வேண்டும். வாணியம்பாடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டும். உதயேந்திரம் பேரூராட்சி குடிநீர்த் தேவைக்காக இராமநாயக்கன்பேட்டை–உதயேந்திரம் வரை பைப்லைன் அமைக்க வேண்டும்.

திருப்பத்தூர் ஒன்றியம், பெருமாப்பட்டு ஜலகம்பாறை நீர்வீழ்ச்சி மற்றும் முருகன் கோயிலுக்குப் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்வதால், அப்பகுதியில் Check Dam மற்றும் படகுக் குழாம் அமைத்து அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும். ஜவ்வாது மலை அருகிலுள்ள காவலூர் விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு பலரும் வந்து செல்வதால், ஆலங்காயம்–காவலூர் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டும். வாணியம்பாடி நகர், பாலாற்றின் கிளை ஆறுகளில் 5 இடங்களில் பாலங்களும், இருபுறங்களில் தார்ச்சாலையும் அமைத்துத் தர வேண்டும்.

வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாட்றாம்பள்ளி ஒன்றியம், மல்லகுண்டா ஊராட்சி, சிட்ரப்பள்ளம் பகுதியில் பெரிய Check Dam அமைத்துத் தர வேண்டும். வாணியம்பாடி நகரின் மையப் பகுதியில் உள்ள C.L. ரோடு–கச்சேரி ரோடு இணைக்கும் பகுதியில் உள்ள ஓம் சக்தி கோயில் அருகே பாலாற்றுப் பகுதியில் சிறுபாலம் அமைத்துத் தர வேண்டும். நாட்றாம்பள்ளி ஒன்றியம், இராமநாயக்கன்பேட்டை ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

நாட்றாம்பள்ளி ஒன்றியம், நாராயணபுரம் ஊராட்சி, ஜவ்வாது ராமசமுத்திரம் ஏரியிலிருந்து வெளியேறும் நீரை சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் முறையாகக் கால்வாய் அமைத்து பாசன வசதி செய்து தர வேண்டும். ஆலங்காயம் ஒன்றியம், நெக்னாமலை பகுதியிலுள்ள சாலையை தார்ச் சாலையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். வாணியம்பாடி தொகுதியில் உள்ள நாட்றாம்பள்ளி ஒன்றியம், ஆலங்காயம் ஒன்றியம், உதயேந்திரம் பேரூராட்சி, ஆலங்காயம் பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் கிடைக்க வழிவகை செய்திட வேண்டும்.

வாணியம்பாடி நகரப் பகுதிகளிலுள்ள வக்ஃபு வாரிய இடம் அல்லது அரசு இடத்தில் கபர்ஸ்தான் அமைக்க ஒதுக்கித் தர வேண்டும். பழைய வாணியம்பாடி, ஈச்சங்கால், சங்கராபுரம், எக்லாஸ்புரம், அம்பலூர், கோயான்கொல்லை வழித்தடங்களில் மீண்டும் மினி பஸ் வசதி செய்து தர வேண்டும்.

வாணியம்பாடியிலிருந்து ஆலங்காயம் செல்லும், கணவாய்புதூர், பெத்தவேப்பம்பட்டு, விஜிலாபுரம், முல்லை வழியாக ஆலங்காயம் வரை ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த வழித்தடத்தில் அரசு மினி பேருந்தை இயக்க வேண்டும். ஆலங்காயம் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். வாணியம்பாடி வாரச் சந்தை மைதானம் அருகில் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உடனடியாகப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆண்டியப்பனூர் நீர்த்தேக்க அணையைத் தூர்வாரி, ஏரிகளுக்குப் பாசன வசதி செய்து, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். தெக்குப்பட்டு ஊராட்சியில், மூடப்பட்டுள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலையைச் சீரமைத்து மீண்டும் இயக்க வேண்டும்; அல்லது வேறு தொழிற்சாலை தொடங்கி அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். வாணியம்பாடியில் புதிதாக விழுப்புரம் அல்லது சேலம் கோட்ட போக்குவரத்துக் கழக பணிமனை ஒன்றைத் துவக்க வேண்டும்.

வாணியம்பாடி தொகுதியில், அரசு பள்ளி மற்றும் அங்கன்வாடி கட்டடங்களைச் சீரமைத்து, மாணவ, மாணவிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும். வாணியம்பாடி–குப்பம் வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளை இயக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில் குமார் அவர்கள் பேசும்போது, பொதுவாக சட்டமன்றக் குழுக்களை வட இந்திய ஆய்வுப் பயணம் அனுப்புவதற்கு

அதிகாரம் பெற்றவர் நீங்கள்தான். இரண்டாண்டுகளாக எங்களை அவ்வாறு அனுப்பவில்லை என்ற ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். பொதுவாகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்று விரும்புவதுண்டு. 1984-ல், அந்த காலகட்டத்திலேயே, நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது வட இந்திய ஆய்வு பயணம் செல்வது என்றால், ஏதோ வெளிநாட்டிற்குச் செல்கிறோம் என்ற எண்ணத்தோடு செல்வோம்.

கடந்த ஆண்டில்கூட சட்டமன்றக் கூட்டத் தொடர் கலைவாணர் அரங்கத்தில்தான் நடைபெற்றது. அப்போதுகூட நாமெல்லாம் mask அணிந்துதான் சட்டமன்றத்திற்கே செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தது. எனவே, இரண்டாண்டுக் காலமாக ஒரு பெருந்தொற்று காரணமாக மோசமான சூழ்நிலை இந்தியாவில் நிலவிக்கொண்டிருந்தது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாகக்கூட ஒன்றிய அரசின் அமைச்சர் அவர்கள் மாநில அரசுகள் உஷாராக இருங்கள், மீண்டும் வரும் அளவிற்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று சொன்னார்கள். இதெல்லாம் இல்லாமல் இந்தியாவே முழுமையாக ஆரோக்கியமாக இருக்கின்ற நிலையில் வட இந்திய ஆய்வுப் பயணங்களுக்கு அனுப்பினால் வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான்.

அதேபோன்று, Capital Expenditure குறித்துப் பேசினார்கள். அதற்கு விளக்கம் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவில், நானும், நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் தொடர்ந்து பத்தாண்டுக் காலம்--பேசியிருக்கிறோம். மாண்புமிகு அம்மையார் அவர்கள் ஆளுகிறபோது, அவர்களால் 2012-ல் 'Vision 2023' என்று ஒரு பெரிய booklet-ஒரு புத்தகம் தயாரித்து, வெளியிடப்பட்டது. எந்தெந்தத் துறைகளுக்கான மூலதனச் செலவு என்று அதற்கு 8 தலைப்புகள் கொடுத்து, 'Vision 2023'-க்கு 15 இலட்சம் கோடி ரூபாய் capital expenditure செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். கடைசியாக இவர்கள் ஆட்சியை நிறைவு செய்கிறபோது, நாங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் சுமார் 2 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குக்கூட செலவுகளை செய்ய முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலைமையில்தான் அவர்களுடைய நிதி ஆளுமை இருந்தது என்பதை நான் பதிவு செய்கிறேன்; வேறொன்றுமில்லை.

பிற்பகல் 5–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்கள் வட மாநிலங்கள் செல்வதற்கு (குறுக்கீடு) இந்த ஒன்றைமட்டும் நான் சொல்லிவிடுகிறேன். குழுக்கள் வட மாநிலங்களுக்குச் செல்லவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய பேரவைச் செயலகம்மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு* file *அனுப்பப்பட்டு, அவர்கள் குழுக்கள் செல்வதற்கு அனுமதித்தார்கள். ஆனால், பலவிதமான காரணங்களினால் போக விரும்பவில்லை. அதனால்தான் போகவில்லையே தவிர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குழுக்கள் செல்வதற்கு இசைவு தெரிவித்திருந்தார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள் அந்த ஸ்டேடியத்தை நிம்மியம்பட்டுக்கு கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னார். அவருக்காகத்தான். அவர் வீடு பக்கத்திலே இருக்கிறது. அவர் நடந்தே சென்று பக்கத்திலுள்ள, நிம்மியம்பட்டு ஸ்டேடியத்திற்குப் போகலாம். (குறுக்கீடு) அதனால், உங்களுடைய வசதிக்காகத்தான் நிம்மியம்பட்டில் வைத்திருக்கிறோம். வேண்டாம் என்று சொல்லுங்கள், பார்க்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கு, நான் சொன்னேன் அது தவறு என்று. எனவே, நான் அதைப் படிக்கிறேன். இது அரசாங்கம் வெளியிட்ட தகவல். அன்றைக்கு நாங்கள் ஆட்சியில் இல்லை. நான் கூறியதைப்போல், 2011–2012–ல் அம்மையார் ஆட்சி, ரூ.1,364 கோடி உபரி; 2012–2013–ல் ரூ.1,760 கோடி உபரி; இதெல்லாம் வருவாய்க் கணக்கில். ஆனால், நான் கூறியதைப்போல், 2013–2014–ல் ரூ.1,789 கோடி பற்றாக்குறை; 2014–2015–ல் ரூ.6,400 கோடி; 2015–2016–ல் ரூ.11,985 கோடி; 2016–2017–ல் ரூ.12,964 கோடி; 2017–2018–ல் ரூ.21,594 கோடி; 2018–2019–ல் ரூ.23,459 கோடி; (மேசையைத் தட்டும் ஒலி) 2019–2020–ல் ரூ.35,909 கோடி; 2020–2021–ல் ரூ.61,320 கோடி. எனக்குத் தெரிகின்ற அளவில் இந்த* number *மோசமாகத்தான் போய் கொண்டேயிருந்ததே தவிர, ஓர் ஆண்டுகூட ஒரு ரூபாய்*

குறைத்த வரலாறு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது அரசினுடைய ஆவணங்கள்; ஒன்று. இரண்டாவது அவர் சொன்னார், பத்து வருடங்களில் கடன் வாங்கப்பட்டது ரூபாய் 3 இலட்சத்து 80 கோடிக்குமேல் என்பது correct. பெரும்பான்மை, 80 சதவிகிதம் முதலீட்டிற்கு என்று சொன்னார். அது முற்றிலும் தவறு. இறுதி ஐந்தாண்டுகளில் ரூ.1,22,000 கோடியும், முதல் ஐந்தாண்டுகளில் ரூ.84,000 கோடியும், வெறும் ரூபாய் 2 இலட்சம் கோடிதான் முதலீட்டிற்காக, அதாவது சுமார் பாதி அளவுதான் முதலீட்டிற்குச் செலவிடப்பட்டு, பாக்கியெல்லாம் நான் சொன்ன, தொடர்ந்து increase ஆகிக்கொண்டிருந்த revenue deficit-ஐ finance செய்வதற்குத்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். நீங்கள் எந்தப் பிரச்சினை குறித்து, (குறுக்கீடு) சீக்கிரம் முடியுங்கள், நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள், திரு. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, சிலை அமைப்பதற்கு அனுமதி தந்து, மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நம்முடைய அண்ணா பல்கலைக்கழக வளாகத்தின் முன்வாயிலில் சிலை அமைக்கப்படவிருக்கிறது. அதே நேரத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இரண்டு, மூன்று கோரிக்கைகள் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்பது பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி. அது, முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் இருந்தபோது கொண்டுவரப்பட்ட அற்புதமான திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர், கூடுதல் நிதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதுகுறித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகமும் சரி, மாண்புமிகு ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வரப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நன்றி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டு பூகம்பம், வெண்தாடி வேந்தர், அறிவும், மானமும் மனிதனுக்கு அழகு என்று போதித்த திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர், இடுப்பில் கட்டியிருந்த துண்டை எடுத்து தோளில் போட்டுக்கொள் நீ மனிதன் என்று நமக்கு மனித நேயத்தைக் கற்றுத் தந்த மாமனிதர், வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

காஞ்சி தந்த தவப்புதல்வன், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை தமிழ்நாட்டிற்கு கற்றுத் தந்த புனிதத் தலைவன்; குள்ளமாய் இருந்தாலும் உயரமாய் சிந்திக்க வைத்த மாபெரும் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) பேசிப் பேசி ஒரு நாட்டை ஆள முடியும் என்பதை உலகிற்கு உணர்த்திய உத்தமத் தலைவன் (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன்.

இருபெரும் உருவமாய் தமிழ் உலகத்திற்குக் கிடைத்த தவப்புதல்வர், தென்னகத்தில் குடியிருந்த இந்தியாவின் திசைகாட்டி, முத்தமிழறிஞர், மூதறிஞர், பத்து கோடி மக்களைப் பாதுகாத்த பாதுகாவலர்; இந்தியாவின் தலைநகர் டில்லி என்பதை மாற்றி, இந்தியாவின் தலைநகர் சென்னை என்பதை நிரூபித்த அற்புதத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 5–55

மூவரின் உருவமாய் இந்தத் தமிழுலகுக்குக் கிடைத்த தவப்புதல்வர் தன்னிகரில்லாத் தலைவர், 1976–ல் மிசா கொட்டடியில் அடைபட்ட காலம் முதல் இன்று வரை இந்த மண்ணுக்காக, மொழிக்காக, இனத்திற்காக தன்னையே அர்ப்பணித்துப் பணியாற்றுகிற வெள்ளுடை வேந்தர் எங்களின் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நாளைய தமிழகமாய், இளைஞர்களுக்கு வழிகாட்டியாய், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராய், உரையாற்றும்போது, “இது சேர, சோழ, பாண்டியர்கள் நாடு; இது சேர, சோழ, பாண்டியர்கள் நாடு; வட நாட்டுக்காரர்களை ஆளவிட மாட்டோம்” என்று வடநாட்டிற்கு எச்சரிக்கை மணியடித்த எங்களின் இளந்தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறையின் மூத்த அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறையின் மூத்த அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், என்னை நெறிப்படுத்துகிற பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், இன்றையதினம் பதிலுரையாற்றவிருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நான் என்றைக்கும் மதிக்கக்கூடிய சட்டமன்றப் பேரவையினுடைய மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும், இந்த அவையில் முன்வரிசையில் வீற்றிருக்கின்ற மூத்த முன்னணி அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கும், அவையில் இருக்கக்கூடிய ஆன்றோர்களுக்கும், நான் சார்ந்திருக்கிற தஞ்சை மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும்,

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை. சந்திரசேகரன்) தலைமை]

இந்த நிர்வாகம் சிறப்பாக நடப்பதற்குக் காரணமாக இருக்கிற, மூலமாக இருக்கிற நம்முடைய தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் எழுத்தாளர், சிந்தனையாளர், மதிப்புமிகு முனைவர் இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், முதல்வர் இட்ட பணியை நாடு முழுவதும் செயல்படுத்துகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகச் செயலாளர்கள் மதிப்புமிகு திரு. உதயசந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு. உமாநாத், இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு. சண்முகம், இ.ஆ.ப.

அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப. அவர்களுக்கும், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புச் செயலாளர் சகோதரர் திரு. தினேஷ் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவையினுடைய செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 3 அமைச்சர்கள் பதிலளிக்கக்கூடிய 7 பொருட்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றம் வரலாற்றுப் புகழுடைய சட்டமன்றமாகும். இங்கேயிருக்கக்கூடிய மகாத்மா காந்தி; அரையுடையோடு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் முதன்முதலில் சிறைக்குப் போனது ஒத்துழையாமை இயக்கத்தில்; ஒத்துழையாமை இயக்கத்தில் காந்தி சிறைக்குப் போன வருடம் 1922; வயது 53. தண்டி யாத்திரையில் முதன்முதலில் ராஜாஜி அவர்கள் சிறைக்குப் போனார்கள்; ஆண்டு 1930; வயது 52. உப்பு சத்தியாகிரகத்தில் முதன்முதலில் காமராஜர் சிறைக்குப் போனார்; ஆண்டு 1930; வயது 27. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முதன்முதலில் சிறைக்குப் போனார் பேரறிஞர் அண்ணா; ஆண்டு 1937; வயது 28. கல்லக்குடி போராட்டத்தில் முதன்முதலில் சிறை சென்ற தலைவர், அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர்; ஆண்டு 1953; வயது 29. ஆக, முதன்முதலில், 53, 52, 27, 28, 29 என்ற வயதில் சிறைக்குச் சென்றவர்கள் மத்தியில், நெருக்கடி காலத்தை எதிர்த்து 1976–ல் சிறைக்குச் சென்றபோது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வயது வெறும் 23. ஆக, இந்தியத் திருநாட்டில் நாட்டைக் காக்க இளம் வயதில் சிறைக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் இருக்கிற இந்த அரசு, தற்போது எண்ணற்ற சாதனைகளை, எண்ணற்ற சிறப்புகளைச் செய்தவண்ணம் இருக்கிறது.

இந்தச் சட்டமன்றம் வரலாற்றுப் புகழுடைய சட்டமன்றமாகும். எதிரணியிலிருந்து பேசிய அருமைச் சகோதரர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், 100 நாட்கள் சபை நடக்கும் என்று தேர்தல் வாக்குறுதியில் சொன்னீர்களே! என்ன ஆனது என்று கேட்டார். நீங்கள் ஆட்சியில் இருந்த 10 ஆண்டுக் காலத்தில், ரேஷன் அட்டை உள்ள எல்லோருக்கும் செல்ஃபோன்

வழங்கப்படும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையில் சொன்னீர்களே! தேர்தல் அறிக்கை கையில் இருக்கிறது.

பிற்பகல் 6–00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தீர்கள். ரேஷன் அட்டை இருந்தது; செல்ஃபோன் எங்கே போனது? பொது இடத்தில் எல்லோருக்கும் Wi–fi வசதி. பொது இடம் இருக்கிறது; tower இருக்கிறது; Wi–fi எங்கே போனது? அதைவிட இன்னொன்று, நான் இரண்டு முறை எதிர்க்கட்சியில் இருந்தேன். இன்றைக்கு ஆளுகிற பொறுப்பு. கடந்த ஆட்சியின் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீட்டுமனை வழங்கப்படும். சொன்னது நீங்கள். நான் மீண்டும் கேட்கிறேன், சொன்ன நீங்கள் இங்கே, வீட்டுமனை எங்கே? எனவே, தேர்தல் நேரத்தில் பேசுகிற அந்தக் கருத்துகளை நாங்கள் உள்வாங்குகிறோம்; நாங்கள் உணராமல் இல்லை; ஆனால், இந்தச் சட்டமன்றம் என்பது வரலாற்றுச் சிறப்புடைய ஒரு சட்டமன்றம். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தைச் சட்டமாக்கித் தந்த சட்டமன்றம், இந்த வரலாற்றுப் புகழுடைய சட்டமன்றம். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை. சந்திரசேகரன்): அவர் உண்மையைத்தானே சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா–அதனை நாங்கள் சொல்லவில்லை. அதேபோல் 2 ஏக்கர் நிலம் எல்லோருக்கும் கொடுப்பதாக நீங்களும் சொன்னீர்கள். ஆனால், எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை. அதேபோல் நாம் பேசினால், பேசிக் கொண்டேயிருக்கலாம். அரசுக் கொறடா அவர்கள் எப்போதும் எல்லோரையும் மதிக்கக்கூடியவர்; subject மாறிச் செல்கிறது. 2 ஏக்கர் நிலம்; இன்னும் நிறைய நாம் பேசலாம். எங்களுக்கும் அதேபோன்று பேசுவதற்கு வாய்ப்பைக் கொடுங்கள். வீட்டுமனைப் பட்டா நாங்கள் சொல்லவில்லை; cell phone-ஐ நாங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை. சந்திரசேகரன்): *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வாக்குறுதியையேற்று, அரசால் நத்தம் புறம்போக்கு என்று கண்டுபிடிக்கப்பட்ட இடங்களையெல்லாம் திருவள்ளூர் மாவட்டத்தில் வழங்கியிருக்கிறோம். நான் சொல்ல வருகிற செய்தி, பல்வேறு வரலாற்றுச் சாதனைகளை நிறைவேற்றிய இந்தச் சட்டமன்றத்தில்தான் இன்றைக்கு நம்முடைய பெருமையை, சட்டமன்றப் பெருமையை, தமிழகத்தினுடைய பெருமையை நிலைநாட்டுகிற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா என்று சொன்னால், தமிழ்நாடு பெயர் மாற்றம்; சீர்த்திருத்தத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும்; இருமொழிக் கொள்கைக்கு உத்தரவாதம், பேரும் பெருமையும் உண்டு. அன்புத் தலைவர் கலைஞர் என்று சொன்னால், பெண்களுக்கு சொத்துரிமையில் சம பங்கு என்ற சட்டத்தை யாத்து தந்தார்; வரலாற்றுப் பெருமையுண்டு.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் இதே சட்டமன்றத்தில், சட்டமன்ற மரபுகளை மீறி, ஆளுநர் உரையாற்றியபோது, இந்தியாவில் இத்தனை மாநிலங்கள் இருந்தபோதிலும், முதலமைச்சர்கள் இருந்தும், ஓர் அமைச்சரவை முடிவெடுத்து கொடுக்கக்கூடிய அந்த ஆளுநர் உரையை மீறிப் படித்த வாசகத்தையும், இணைத்துப் படித்த வாசகத்தையும், படித்து உட்கார்ந்த அடுத்த வினாடி, ஆளுநர் உரையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்த வரலாற்றுச் சிறப்புடைய சட்டமன்றம், இந்தச் சட்டமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

மூத்த தலைவர்களாகிய உங்களுக்குத் தெரியும். சட்டமன்றத்தினுடைய பெருமையை உணர்த்துகிறேன். ஆக All roads lead to Rome *என்று கேள்விப்பட்டிருக்கிறோம்;* Shakespeare *நாடகத்தில் வருகின்ற வாசகம். ஆனால், இன்றைக்கு* All roads lead to Tamil Nadu, lead to M.K. Stalin *என்ற பெருமை கிடைத்திருக்கிறது. மேற்கு வங்காளம் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றது. அதைவிட பெருமை, நாம் நிறைவேற்றுகிற அந்தத் தீர்மானம்–அது ஆளுகிற பொறுப்பு,*

எதிர் பொறுப்போ, 234 சட்டமன்ற உறுப்பினர்களுடைய சபை. நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். அதனை ஆளுநருக்கு அனுப்புகிறோம். அதை காலக்கெடுவில்லாமல் காலம் கடந்தபோது, இந்தியத் திருநாட்டில் முதன்முதலில் ஆளுநருக்கு நாங்கள் அனுப்பிய தீர்மானத்தில் காலக்கெடுவுக்குள் அனுப்ப வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி, ஜனநாயகத்தைக் கட்டிக்காத்த முதல் சட்டமன்றம், தமிழ்நாடு சட்டமன்றம். முதல் முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். இது அனைவருக்கும் பொருத்தமான உரிமைப் போர். இது அனைவருக்கும் பொருத்தமான, தேவையான கருவி. அதனால்தான் சொல்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தித் தர வேண்டுமென்று சொன்னார்; வரவேற்கிறோம். நாங்களும் ரூ.5 கோடி தர வேண்டுமென்று சொல்கிறோம். நீங்கள் நினைப்பதெல்லாம் நான் பாட வேண்டும். நான் நினைப்பதெல்லாம் நீங்கள் பாட வேண்டும் என்று ஆசைதான். அதிகம் தேவைதான். ஆனால், 1989-ல் உள்ளாட்சித் தேர்தல் நடத்தி முடித்ததற்குப் பிறகு, சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நாங்கள் தொகுதிக்குச் செல்கிறபோது, சாலை வசதி, தண்ணீர் வசதி, motor pump வசதி என்று கேட்கிறபோது, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் கையை விரிக்கிறார்களே என்ற நிலை வந்தபோது, முதன்முதலில் 25 இலட்சம் ரூபாய் என்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை தமிழ்நாடு சட்டமன்றத்தில் தந்த தலைவர், தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர்.

பிற்பகல் 6-05

இன்றைக்கு எதிரணியில் இருக்கின்ற நீங்கள், 2 ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பெற்று, நிதியில் வழங்குகிறோம், நிதியில் வழங்குகிறோம் என்று பெயரை போட்டுக் கொள்கிறீர்கள் என்று சொன்னால், அது பேருந்து நிலையமோ, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியோ, பள்ளிக்கூடக் கட்டடமோ, அங்கன்வாடி மையமோ, சமுதாயக் கூடமோ உங்கள் பெயர் அந்த நிதியில் என்று போடுவதற்கான பிதாமகன், எங்கள் முன்னாள் முதல்வர், எங்களைக் கட்டியாண்ட அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர். ஆக, எந்தத் திட்டமாக இருந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் காரணம். அதைவிட பெருமை மாண்புமிகு

மூத்த உறுப்பினர், அருமை அண்ணன் திரு. முனுசாமி அவர்கள், நாங்கள் கொடுத்த தேர்தல் அறிக்கையை மையமாக வைத்து, 50 ஆண்டுகால வளர்ச்சி, வளர்ச்சி என்று சொல்கிறீர்களே, 30 ஆண்டு காலம் நாங்கள் ஆட்சியில் இருந்தோம் என்று குறிப்பிட்டார். நிரம்பப் படித்தவர், நிரம்ப விஷயம் தெரிந்தவர் சொன்னார். ஆனால், நாங்கள் கேட்பது, அந்த 50 ஆண்டு கால வளர்ச்சியில், 30 ஆண்டு காலம் உங்களுடைய பங்கும் உண்டு என்றால், கலைஞர் அவர்கள் கொண்டு வந்த பெரியார் சமத்துவபுரத் திட்டம் எங்கே? உங்களுக்கும் பங்கு உண்டல்லவா? அந்த 50 ஆண்டுகளில், 30 ஆண்டுகள் உங்களுக்குப் பங்கு உண்டு என்றால், அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் இருந்த 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' எங்கே? (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, நீடித்த பெருமையைப் பெறுவது தி.மு.க. அரசு, கலைஞர் அரசு, தளபதி அரசு. அதனால்தான் சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்களே, இந்தியத் திருநாட்டில் வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டு, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த முதல் முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். 10 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தீர்கள். இதுதான் வரவு, இதுதான் செலவு, இதுதான் பற்றாக்குறை, இதுதான் திட்டம்; இப்படிச் சொன்ன மாநிலம், வேறு எந்த மாநிலம்? அதைவிட ஐந்து பொருளாதார மேதைகளை நியமித்து, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, வீண் செலவைக் குறைத்து, இன்றைக்கு இந்த நெருக்கடியிலும் பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகையைத் தந்த ஒரு மாபெரும் புரட்சி, இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசின் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இப்பேர்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றிய நாம், சட்டமன்றம் என்று வருகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை அதிகரித்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தை அதிகம் வழங்க வேண்டுமென்று அந்தச் சங்கத்தினர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆண்டுக்கு வழங்குகின்ற 50 ஆயிரம் ரூபாய் மருத்துவ வசதித் தேவையை மாதந்தோறும் தர வேண்டுமென்ற கோரிக்கையை எண்ணத்தை வைத்திருக்கிறார்கள்.

இதே சட்டமன்றத்தில் பார்க்கிறோமே, இவ்வளவு சூழலிலும் நேரடி ஒளிபரப்பு கேட்கின்ற அனைத்து சட்டமன்ற

உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்தில் சொல்வேன். முடியுமா, நடக்காதா என்று ஏங்கியிருந்தோம். கடந்த முறை எதிர்க்கட்சியில் நாங்கள் இருந்தோம். நேரடி ஒளிபரப்பு தேவையென்று கேட்டோம். என்ன நடக்கிறது என்று மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னோம். என்ன சொன்னார்கள், நிதியாதாரம் இல்லை என்று சொன்னார்கள். சொன்னது சட்டமன்றத்தில் அல்ல; நீதிமன்றத்தில். ஆனால், நிதி நெருக்கடி இருந்தபோதும், கேள்வி நேரத்தை ஜனநாயகரீதியில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பி, இது வெள்ளை அரசு என்பதை அறிவித்த முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இன்றைக்கு எங்களையும் காட்ட வேண்டும் என்று கேட்கிறோம், காட்டுவோம். அதற்கான முடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள். அதைவிட இன்னும் ஒரு சிறப்பு, காகிதமில்லாத சட்டமன்றம். நினைத்துப் பாருங்கள். அன்றைக்கு எப்பேர்ப்பட்ட புத்தகங்கள். ஆக, எந்த வகையில் பார்த்தாலும் புதுமையை விரும்பி நடத்துகின்ற இந்தச் சட்டமன்றத்தினுடைய பணி மாண்புக்குரியது, பாராட்டுக்குரியது, சிறப்புக்குரியது என்பதை இந்த நேரத்தில் நாம் மனதாரப் பாராட்டியாக வேண்டும்.

அதுமாத்திரமல்ல, இன்றைக்கு வெளி நாட்டில் பணிபுரிகின்ற தமிழர்களுக்கு ஓர் அசாதாரண சூழ்நிலை வந்தது. எங்கேயோ எடுத்த வீடியோவைக் காட்டி, தமிழகத்தில் இருக்கக்கூடிய பீகார், ஜார்கண்ட் தொழிலாளர்களுக்கு ஆபத்து என்று பிரச்சினைக்கு தூபம் போட ஆரம்பித்தார்கள். தமிழகத்தின் நிலையறிய தலைமைச் செயலாளர் தலைமையில் பீகாரிலிருந்து ஒரு குழுகூட வந்தது. எப்பேர்ப்பட்ட இடர்பாடு? தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தவித்துப் போனார்கள். இங்கிருக்கின்ற வெளி மாநில தொழிலாளர்களுக்கு ஆபத்து என்று சொன்னால், அந்தந்த மாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்களுக்கு ஆபத்து என்று உணர்ந்த முதலமைச்சர்தான், பாதுகாப்பான முறையில் மாவட்ட நிர்வாகத்தை முடுக்கிவிட்டு, காவல் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தி, உயர் போலீஸ் அதிகாரிகளை அனுப்பி, ஒரு தந்தையைப்போல் அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாத்து, ஒரே நாளில் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்த தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

இதே போன்ற ஒரு சம்பவத்தைச் சொல்ல வேண்டுமேயானால், கன்னட நடிகர் திரு. ராஜ்குமார் அவர்கள் கடத்தப்பட்ட நேரம். தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் யுத்த நிலை. கடத்தப்பட்ட விஷயம் தெரியும், அவரை உயிரோடு மீட்க வேண்டும். முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் என்ன சொன்னர்களென்றால், கடத்தப்பட்ட திரு. ராஜ்குமாருக்காக நான் கவலைப்படுகிறேனோ, இல்லையோ, கன்னடத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறேன் என்று பேச்சுவார்த்தை நடத்தி, அவரை உயிரோடு மீட்ட தலைவர். அதேபோலதான் வெளிநாடுவாழ், வெளி மாநிலத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்த நேரத்தில் பாதுகாப்பான சூழ்நிலையை நாம் உருவாக்கிக் காட்டினோம்.

பிற்பகல் 6–10

இந்தச் சட்டமன்றத்தினுடைய அலுவல்களை சாராத பணிகளை இங்கு நான் சொல்ல வேண்டுமானால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு அனைத்துத் தொகுதிகளுக்கும் வந்தார். என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியிலும் சொன்னார். என்னை நம்பி இந்தக் கோரிக்கை பெட்டியில் மனு போடுங்கள். நான் ஆட்சிக்கு வந்தால் செய்து முடிப்பேன். ‘உங்கள் தொகுதியில் மு.க. ஸ்டாலின்’ என்று இருந்ததை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்று சொல்லி, இன்றைக்கு என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட நான்கு கோரிக்கைளை ஒன்றரை கோடி ரூபாய் செலவில் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின்மூலம் நிறைவேற்றியிருக்கிறார். அதற்காக ‘முதல்வரின் முகவரி’, ‘தனி தலைமைச் செயலகம்’, சமூக வலைதளத்தின்மூலம், ஊடகத்தின்மூலம், மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம், அரசு தலைமைச் செயலாளர்மூலம் எத்தனை மனுக்கள் வந்தாலும், வந்த மனுக்களில், கிட்டத்தட்ட 80 சதவிகித கோரிக்கைகளை நிறைவேற்றிய ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் என்ற கம்பீரத்தைப் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நேரத்தின் அருமை புரிகிறது. எனவே, நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இறுதியாக, தேர்தல் நேரம். தேர்தல் வரையறையைப் பொறுத்தவரை, ‘ஒரே நாடு ஒரே தேசம்’

என்று ஒன்றிய அரசு சொல்கிறது. இதோ முடித்துக்கொள்கிறேன். 'ஒரே நாடு ஒரே தேசம்' என்பது இந்தியாவில் எடுபடாது. ஒரே தேசம் என்று கொண்டுவந்தால் நான்கு கட்டங்களாக தேர்தல் நடத்துகிற மாநிலம் என்னவாகும். காவல் துறை பாதுகாப்பு, அதற்கான இயந்திரம், செலவு. எனவே, ஒத்துப் போகாத விஷயத்தை டெல்லி சொல்கிறது. அதை இங்குள்ள ஒருசிலர் ஏற்றுக்கொள்கிறார்களென்றால் நாடு தாங்காது என்ற எச்சரிக்கையை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் தந்தை பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார். பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார். அன்புத் தலைவர் கலைஞர் சட்டமன்ற பவள விழாவைக் கொண்டாடினார். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேராசிரியருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார். சட்டமன்றப் பேரவையினுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார். அப்போது ஜனாதிபதி அவர்களை அழைத்து விழா நடத்தினார். கூடியவிரைவில் முத்தமிழறிஞர், மூதறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவையும் நடத்தவிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா நூற்றாண்டு விழா கொண்டாடியதைப்போல், கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடியதைப்போல், அகவை எழுபதைத் தொட்டிருக்கிற எங்களின் தமிழக முதல்வரே! தலைவரே! நீங்கள் நூற்றாண்டு விழா காணும்வரை வாழ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நூற்றாண்டு விழாவை நீங்களே நடத்த வேண்டும். அதுவரை இந்தத் தமிழகம் சிறக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வைக்கிறேன்.

ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு எளிய தொண்டன். வாழ்க பெரியார்! வாழ்க அண்ணா! வாழ்க கலைஞர்! ஒரு பிரச்சார தூதுவனாக இருந்த என்னை, சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் நிறுத்தி, எந்தவொரு பண பலமோ, படை பலமோ, ஆள் பலமோ, நட்சத்திர அந்தஸ்தோ, பொருளாதார அந்தஸ்தோ இல்லாமல் ஒரு ஓலைக் குடிசையில் பிறந்த ஏழைத் தொண்டன் கோவி. செழியனுக்கு 2011, 2016, 2021 என மூன்று முறை தேர்தலில்

நிற்க வாய்ப்புத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) நான் மூன்றாவது முறையாக வெற்றி பெற்று வந்து தங்களைச் சந்தித்துவிட்டு, பிறகு ஊருக்குச் செல்கிறபோது தேசியக் கொடியும், கோபுரச் சின்னமும் வழங்கி, ஓலைக் குடிசையில் பிறந்த கோவி. செழியனை, சட்டமன்ற அரசு தலைமைக் கொறடா என்ற அங்கீகாரத்தோடு நீங்கள் அறிவித்தீர்களென்றால், இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் அடையாளம். இது 'வெல்லட்டும், வெல்லட்டும், வெல்லட்டும்' எனச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆயுட்காலம் உள்ள வரை தலைவரே உங்கள் பாதச் சுவடுகளில் நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

நாச்சியார்கோவில், திருப்பனந்தாள் ஆகிய ஊர்களில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டும். அரசு தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic college), அரசு தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) அமைக்க வேண்டும். இருபாலர் படிக்கும் வகையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

நாச்சியார்கோவில், பந்தநல்லூர் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா பிரித்துத் தர வேண்டும். கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய வட்டங்களைப் பிரித்து திருப்பனந்தாள்-நாச்சியார்கோவில் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா பிரித்துத் தர வேண்டும்.

கும்பகோணம்-திருவாரூர் நெடுஞ்சாலை, திருநறையூர் நாச்சியார்கோவில் பகுதிகளில் மிகவும் அகலம் குறைவாக உள்ளதால் போக்குவரத்தில் அடிக்கடி தடை ஏற்படுகிறது. எனவே, நாச்சியார்கோவில் பகுதியில் புறவழிச்சாலை (கிருஷ்ணாபுரத்திலிருந்து மாத்தூர் வரை) அமைக்க வேண்டும்.

கும்பகோணம்-ஆடுதுறை நெடுஞ்சாலையில் திருபுவனம், திருவிடைமருதூர், ஆடுதுறை ஆகிய மூன்று பேரூராட்சிகளின் கடைவீதி அமைந்துள்ளதால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கும்பகோணத்திலிருந்து ஆடுதுறை வரை பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான காவிரி ஆற்றின் தெற்குக் கரையில் மாற்றுவழிச் சாலை அமைக்க வேண்டும்.

கும்பகோணம் வட்டம், விளந்தகண்டம் ஊராட்சியில் இராஜாக்கநல்லூர் மேலத் தெரு தொடங்கி சோழபுரம் வேப்பத்தூர் பிரதான சாலையை இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்க வேண்டும்.

திருவிடைமருதூர் தொகுதி, இஞ்சிகொல்லை ஊராட்சி, நடுத்திட்டு கிராமம் மற்றும் திருவாரூர் மாவட்டம், விடையல்கருப்பூர் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் நடுத்திட்டு சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும்.

பருத்திச்சேரி ஊராட்சி மற்றும் திருவாரூர் மாவட்டம், குடவாசல் பேரூராட்சி ஆகியவற்றை இணைக்கும் வகையில் புத்தாறு ஆற்றின் குறுக்கே புதியதாகப் பாலம் அமைக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தில் நீதிமன்றக் கிளை செயல்பட்டு வருகிறது. அதற்குத் தனியாக நீதிமன்றக் கட்டடத்துடன்கூடிய நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டும்.

திருவிடைமருதூரில் கணினி வசதி செய்யப்பட்ட டிஜிட்டல் நூலகம் அமைக்க வேண்டும்.

திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்களில் உள்ள அனைத்து விவசாயப் பகுதிகளிலுமுள்ள மின் கம்பிகளைப் புதிதாக மாற்றி அமைக்க வேண்டும்.

திருவிடைமருதூர் தொகுதியில் புதிய உழவர் சந்தை, பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

திருவிடைமருதூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை. சந்திரசேகரன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தியாகராஜன் அவர்கள்.

திரு. ந. தியாகராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன். இன்றைக்குத் திராவிட மாடல் ஆட்சி நடத்தி, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்து தமிழகத்தை அழகு பார்த்திருக்கின்ற கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னவனே!

(மேசையைத் தட்டும் ஒலி) கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னவனே! கொடி தாங்கும் தொண்டனை தன் மடிதாங்கும் தென்னவனே! கொடி தாங்கும் தொண்டனை தன் மடிதாங்கும் தென்னவனே! வடபுலம் திரும்பிப் பார்க்கும் தெற்கத்து சூரியனே! வடபுலம் திரும்பிப் பார்க்கும் தெற்கத்து சூரியனே! தலைகனம் இல்லா தலைவனே! புது இலக்கணம் படைப்பதில் முதல்வனே! தலைகனம் இல்லா தலைவனே! புது இலக்கணம் படைப்பதில் முதல்வனே!

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கலைஞரின் புதல்வரே, ஓயாத உழைப்பினால் முதல்வரின் முதல்வரே! ஏழைப் பெண்களின் இதயம் தொட்ட சிகரம்! கழகத்தைத் தொடர்ந்து வழிநடத்தும் இதயம்! தடைகள் கடந்தால் அடையும் இமயம்! ஐயாதுரை நீ! தமிழர்கள் நெஞ்சில் கிழக்கின் உதயம்! எழுபது அகவைத் தொட்ட சிகரம்! எழுபது அகவைத் தொட்ட சிகரம்! நீவிர் தலைமை ஏற்றதால் தமிழகம் உயரும்! இனி வெற்றியெல்லாம் உமக்கென அமையும்! நீவிர் திராவிட சரித்திரத்தின் உழைப்பின் உயரம் என்று உங்களை வாழ்த்தி, வணங்குகிறேன். உங்கள் காலகட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக பங்கேற்றதற்கு நானும், என்னுடைய குடும்பமும், முசிறி சட்டமன்றத் தொகுதியும் உங்களுக்கு என்றைக்கும் நன்றிக் கடனாக இருப்போம் என்பதைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–15

கலைஞர் படைவீட்டின் ஐந்தெழுத்து தமிழ்ச் சொல்லே! திருக்குவளை கண்டெடுத்த திராவிட விதை நெல்லே! எதிரிகளுக்கு பிரம்மாஸ்திரம், நீ எடுத்த ஒற்றைச் செங்கல்லிலே! திராவிட களம் நலம்பெற வந்துதித்த இளம்பரிதி. கலைஞர் பெயரில் பாதி, உதயசூரியனின் பேர் பாதி, உமது பேராட்சி சின்னவரே, உதயநிதி. நான்காம் தலைமுறை வழிநடத்த நீதான் திராவிட வைப்பு நிதி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், புன்னகை மன்னன், நமது உதயநிதி ஐயா அவர்களை வணங்குகிறேன்.

[*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. S.R. இராஜா) தலைமை*]

நமது மூத்த தலைவர், கழகப் பொதுச் செயலாளர், அவை முன்னவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழக முதன்மைச் செயலாளர், எங்கள் திருச்சி மாவட்டத்தை கழகக் கோட்டையாக நிர்மாணித்து காத்து வருபவர். தமிழ்நாடு முழுவதும் நகராட்சி நிர்வாகத் துறையின்கீழ் புதிய கட்டமைப்புகளை உருவாக்கி புகழ் குவிப்பவர், எங்கள் வழிகாட்டியாகத் திகழும் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் ஆட்சியின் தூண்களாகத் திகழும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குத் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, மனிதவள மேலாண்மைத் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள் சார்பாக பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தளபதியார் உலகத் தமிழர் அனைவருக்கும் தந்தையாக விளங்கிக் கொண்டிருக்கின்றார். உலகத் தமிழருக்கு தாய் வீடாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்ற பிறகு அயல்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு ஓர் இன்னல் என்றால், தன்னுடைய முழு முயற்சியும் எடுத்து இன்றைக்குக் காப்பாற்றிக் கொண்டிருப்பவர் நமது மேன்மைதாங்கிய தமிழக முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள்.

அதேபோல, இன்றைக்கு விழா நாயகர் என்றால், அது நமது தளபதியார் அவர்கள்தான். அதற்கு ஒரு ராசி வேண்டும். ஏனென்றால், சட்டமன்ற நூற்றாண்டு விழா, இந்திய சுதந்திர தின 75-வது பவளவிழா, இந்தியா-பாகிஸ்தான் போர் நடைபெற்று 50 ஆண்டுகள் நிறைவு விழா என்ற விழாக்களைத் தொடர்ந்து நடத்தி, விழா நாயகனாகப் பொறுப்பேற்றிருக்கின்றார். ஒரே மாதத்தில் டெல்டாவில் நிலக்கரி எடுப்பதைத் தடுத்தவர்; அதேபோல், ஆன்லைன் ரம்மி விளையாட்டைத் தடுத்து

அதிலும் ஓர் அங்கீகாரம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் ஒலி) சி.ஆர்.பி.எப். தேர்வைத் தமிழில் எழுத வைத்த எங்களது மாபெரும் தமிழக முதல்வரை வணங்குகின்றேன்.

முதல் சட்டமன்றத் தேர்தல் முடிந்து கிட்டத்தட்ட 70 வருடங்கள் ஆகின்றன. உங்களுக்கு அகவையும் 70 ஆகிவிட்டது. இந்த நன்னாளெல்லாம் யாருக்கும் கிடைக்காத பொன்னாள். ஏனென்றால், இன்றைக்கு எல்லா துறைகளையும் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற நீங்கள், எல்லா துறைகளிலும் கவனம் வைத்து சிறப்பாக ஆட்சி நடத்துவதினால்தான் ஐ.நா. சபையின் துணைச் செயலாளர், நார்வே நாட்டு அதிபர்கூட உங்களை வாழ்த்தியிருக்கின்றார்கள். இந்தியா மட்டுமல்ல, அயல்நாடுகளில் உள்ள தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து பத்திரிகைகளாலும் பாராட்டப் பெற்ற ஒரே முதல்வர், முதல்வரின் முதல்வர் எங்கள் தளபதியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தளபதி அவர்களே, எங்கள் பகுதி காவேரி பகுதி. காவேரி ஆற்றின் நஞ்சையும், புஞ்சையும் கலந்த பகுதி. இதில் சேலம் மாவட்டத்தில் கடந்த ஆட்சியில், அதிகப்படியாக நீர்வரத்து வரும்போது ஏரிகளுக்குப் பாய்ச்சி அதைக் குளிர்வித்தார்கள். திருச்சி மாவட்டம் என்றைக்கும் தி.மு.க.வின் கோட்டை. திருச்சி மாவட்டம் என்றைக்கும் உங்களது கோட்டை. எனவே, நீங்கள் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, தயவுசெய்து காவேரி ஆற்றில் அதிக நீர் வரும்போது எங்கள் பகுதியில் அதிகமாகவுள்ள குளங்களில் நீரேற்றினால் மிகச் சிறப்பாக அந்தப் பகுதி செழுமையடையும். என்றைக்கும் உங்களை மக்கள் மறக்கமாட்டார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகமாக உள்ள பகுதி என்பதால் அதில் நீங்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம், அதிக நீர் வரும்போது, தண்ணீர் வீணாகப் போகிறது, இதை எப்படியாவது குளங்களில் சேர்க்க வேண்டுமென்று சொன்னோம். நான்தான் அத்துறைக்கான அமைச்சர்; உடனே உபரியாக வருகின்ற நீரை திருப்பி திருத்தியாமலை ஏரியில் கொண்டுவந்து விட்டார்; அது செழுமையடைந்துவிட்டது.

[திரு. ந. தியாகராஜன்] [2023 ஏப்ரல் 19

பிற்பகல் 6–20

ஏனென்றால், தலைவர் எவ்வழியோ, அவ்வழியே எங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களும். தலைவர் அவர்கள் வெயிலாக இருந்தாலும் சரி, வெள்ளமாக இருந்தாலும் சரி, துணிச்சலாக வேட்டியை மடித்துக்கொண்டு இறங்கி, இறங்கியதன் காரணத்தால்தான் தாய்க்குலம் எல்லாம் உங்களைப் பாராட்டுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சட்டமன்ற உறுப்பினர்களின் வேலையில் பாதி வேலையை நீங்களே செய்துவிடுகிறீர்கள். அதாவது முதல்வரின் முகவரி என்ற பக்கத்தில் தலைவருக்குக் கோரிக்கை அனுப்பிவிடுகிறார்கள். அது உடனடியாகச் செயல்பாட்டிற்கு வந்துவிடுகிறது. ‘உங்கள் தொகுதியில் முதல்வர்’ அதில் பாதி வேலை நடந்துவிடுகிறது. அதனால் எல்லோரும் நம்பிக்கை வைத்து இன்றைக்கு உங்களை மிகப் பெரிய சக்தியாக, எது கேட்டாலும், தளபதி ஆட்சியில் கண்டிப்பாக நடக்கும் என்ற ஒரு சிந்தனைக்கு மக்கள் வந்துவிட்டார்கள். இதனால் உங்களை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள்; எதிரிக்கட்சிகள் எல்லாம் எப்படியாவது பெயரைக் கெடுத்துவிட வேண்டுமென்று நினைவு. அதற்கு ஓர் உதாரணம், பீகாரைச் சேர்ந்த தொழிலாளர்கள் நமது தமிழ்நாட்டில் வந்து வேலைசெய்யும்போது அவர்கள் எல்லாம் தாக்கப்பட்டார்கள் என்றார்கள். அதனால், ஏதோ பெரிய கலவரம் வரும் என்று எதிர்க்கட்சிகள் நினைத்தபொழுது, அதை இரண்டு நாட்களில் புஸ்வானம் ஆக்கிய பெருமை உங்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், பீகார் முதல்வரை அணுகி, உங்களுடைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுவிட்டார்களா என்று நீங்களே நேரில் வந்து பாருங்கள் என்று சொன்னவர், நமது ஆளுமை மிக்க தளபதியார் அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்டவர் நீங்கள்; எல்லா தொண்டர்களுக்கும், எல்லா மக்களுக்கும், படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும், விவசாயிகளுக்கும் இன்றைக்கு மிகப் பெரிய சக்தியாக, உதவியாக இருந்து தமிழகத்தை முன்னிலை மாநிலமாக ஆக்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

இந்தச் சமயத்தில் நாங்களும் ஒரு கோரிக்கையை வைக்கின்றோம். ஏனென்றால், உங்களை விட்டால் எங்களுக்கு வேறு கதியில்லை. கடந்த ஆட்சியாக இருக்கட்டும், வேறு

முதல்வராக இருக்கட்டும் அவர்களைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் எங்களுக்குத் தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் இருக்கும்போது—எதிர்க்கட்சியாக இருந்தபோதே கொரோனா காலத்தில் நீங்கள் இறங்கி மக்களுக்குச் செய்த சேவை, ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு கொரோனா காலத்தில் நீங்கள் துணிச்சலாக எடுத்த முடிவு, உங்களுக்குத் துணையாக இருந்த, கழக உடன் பிறப்புகளில் இன்றைக்கு பாதிபேர் சட்டமன்ற உறுப்பினர்களாக உங்களோடு இருக்கின்றோம். இந்தக் காலகட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும். ஏனென்றால், இப்போது உள்ளாட்சித் தேர்தல் நடந்திருக்கிறது. உள்ளாட்சி நிர்வாகிகள் இருக்கின்றார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றால், சாக்கடை சரியில்லை. நீங்கள் செய்து கொடுங்கள்; Light *எரியவில்லை நீங்கள் செய்து கொடுங்கள் என்று* night*-ல்* phone *செய்து எதுவாக இருந்தாலும்* MLA*-வை* direct *ஆக அணுகுகிறார்கள். அதற்குக் காரணமே, (மணியடிக்கப்பெற்றது) முக்கியமானது, கொஞ்சம் நேரம் கொடுங்கள். நாங்கள் ஏதாவது மறுப்பு சொன்னால், நேரடியாகத் தலைவருக்கு* letter *போட்டு பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் செய்ய வேண்டாம் ஐயா என்கிற அளவிற்கு மக்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் அந்த அளவிற்கு எல்லா பகுதி மக்களோடும் நீங்கள் தொடர்பில் இருக்கின்றீர்கள்.*

அதைப்போலவே, நமது இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒரு பேட்டியில் சொன்னார்கள். மழைக் காலத்தில் இரவில் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தேன்; அப்போது திடீரென்று phone *வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைத்தார்கள். எங்கே இருக்கின்றாய் என்று கேட்டார்கள். வீட்டில் இருக்கின்றேன் என்றாராம். உடனே சொன்னாராம்; மழை அதிகமாக பெய்கின்றது. உன் தொகுதி மக்கள் எல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ? அங்கு சென்று பார்க்காமல் நீ தூங்கிக்கொண்டிருக்கின்றாயா? என்று கேட்டாராம். அவருடைய பிள்ளை, அமைச்சராக இருந்தாலும்,* MLA *ஆக இருந்தாலும், அவருடைய பிள்ளையையே இரவில் எழுப்பி, அங்கு சென்று பார்க்கச் சொல்லும்போது, நாங்கள் எப்படி? (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட ஒரு பங்கு அதிகமாக இருந்தால்தான், உங்களுக்கு பெரிய வலிமை.*

எனவே, ஒரே ஒரு கோரிக்கை தவறாக யாரும் நினைத்துக்கொள்ள வேண்டாம். இப்போது இருக்கின்ற அலுவலர்கள் Official Executives ஆக இருக்கின்றார்கள். MLA Political Executives ஆக இருக்கிறோம். அவர்களுக்கு நல்ல சம்பளம், நன்றாக இருக்கிறார்கள். இன்றைக்கு, இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தீர்களென்றால் எங்களுக்கு சொந்த car தான். ஆனால், இன்றைக்கு ஸ்டாலின் பஸ் வருகிறது. ஸ்டாலின் அவர்கள் கொடுத்தார்கள். 1000 ரூபாய் பணம் கொடுத்தார்கள் என்று எல்லோரும் பேசுகிறார்கள். உங்களையே நம்பி இருக்கின்ற ** சம்பளத்தை ஏற்றிக் கொடுக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சொல்வார், மூலதனக் கணக்கின்கீழ் சுமார் 10 ஆயிரம் கோடி, 5 ஆயிரம் கோடி, செலவுக் கணக்கில் சுமார் ஆயிரம் கோடி என்கிறார். அந்தக் கோடிக்கணக்கான நிதியில் ** (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நான் இதனை விளையாட்டுக்குச் சொல்லவில்லை. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கே நேரடியாக எத்தனை phone வருகின்றது? எத்தனை letter வருகின்றன? ஊரில் ஒரு சின்ன பிரச்சினை என்றால்கூட—எதிர்பார்க்கப்படுகின்ற ஓர் அரசாக ஆகிவிட்டது. எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு முதல்வராக ஆகிவிட்டீர்கள். உங்கள் பிள்ளைகள் நாங்கள். எங்களையும் நீங்கள் ** நாங்களும் ஊரில் போய் நல்ல பணிகளைச் செய்வோம். இன்னும் சொல்லப்போனால், Chairman-க்கு car கொடுக்கிறீர்கள். அவர்கள் எல்லோரும் அந்தப் பகுதிகளில் மட்டும் car-ல் சுற்றுகிறார்கள். ஆனால், நாங்கள் தொகுதி முழுவதும் சுற்றி வரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அனைவருக்கும் car கொடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–25

MLAs, நாங்கள் போகும்போது, 'ஸ்டாலின் MLA வருகிறார்' என்பதற்கேற்ற வகையில், எல்லா வகைகளிலும் நீங்கள் முத்திரை பதிக்க வேண்டும். ஆனால், ஒன்றை நீங்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். MLAs கூட்டத்தில் நிதி நெருக்கடி குறித்து நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்; அதனையும் நான் மறக்கவில்லை. நிதி நெருக்கடி இருக்கிறது. அதேமாதிரி,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்னைப் புகழ்ந்து பேசக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு எந்த நெருக்கடியையும் கொடுக்கவில்லை. கோரிக்கையைத்தான் வைக்கிறோம். உலகத் தமிழர்கள் எல்லோருடைய கோரிக்கைகளையும் நீங்கள் நிறைவேற்றி வைக்கிறீர்கள். எங்களுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். நன்றி சொல்லிவிடுகிறேன்.

இன்றைக்கு எந்தப் பக்கம் பார்த்தாலும், எங்களுக்குதான் அதிக சுமை. சிறிய பிரச்சினையென்றாலும் எங்களைத்தான் அழைக்கிறார்கள். பஸ் வரவில்லையென்றால், MLA-வை அழைத்து, பஸ் வரவில்லை என்று சொல்கிறார்கள். Current நின்றுவிட்டால்கூட எங்களுக்கு phone செய்துவிடுகிறார்கள். அதனால், இரவு என்றும், பகல் என்றும் பார்க்காமல், உங்களை எப்படி தொந்தரவு செய்கிறார்களோ, அதேமாதிரி, உங்களைப் போலவே, எங்களையும் தொந்தரவு செய்கிறார்கள். சிறப்பான ஆட்சி நடைபெறுகிறது. அதனால்தான் உங்களிடத்தில் பேசுகிறார்கள்; MLA-க்களிடம் பேசுகிறார்கள். பழைய MLA-க்களிடம் யாரும் போனதேயில்லை. அந்த MLA-க்கள் தொகுதி பக்கமே வரமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நாங்கள் தொகுதி பக்கம் செல்லவில்லையென்றால், எங்களுக்கு enquiry போட்டுவிடுகிறீர்கள். (குறுக்கீடு) நன்றியை மட்டும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. S.R. இராஜா): மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராஜன் அவர்கள் சம்பளத்தைப் பற்றி சொன்னார்கள். அவர் ரூ.1,05,000/– சம்பளம் மற்றும் allowances–ஆக வாங்குகிறார். நாங்கள் ரூ.80,000/– வாங்குகிறோம். எங்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்று கேளுங்கள். எந்த ஊரில்தான் கும்பாபிஷேகம் நடத்துவார்கள் என்று தெரியவில்லை. இந்தச் சம்பளத்தில் கும்பாபிஷேகத்திற்கே பாதி போய்விடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காலையில் எழுந்தால் மஞ்சள் பையுடன் நிற்கிறார்கள். ரூ.25,000/– எள்ளு; ரூ.10,000/– எள்ளு. ஆகையினால், எங்களைவிட நீங்கள் பரவாயில்லை என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. S.R. இராஜா): மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராஜன் அவர்கள் பேசும்போது, உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின்கீழ் நேரடியாக petitions கொடுத்துவிடுகிறார்கள் என்றும்; எங்களை யாரும் மதிப்பதில்லை என்றும் சொன்னார்கள். நான் அதுமாதிரியெல்லாம் செய்வதில்லை. அந்த petitions-ஐ வாங்கிக் கொண்டுவந்து இங்கே கொடுத்துவிடுகிறேன். அப்பொழுதுதான் வேலை சீக்கிரம் ஆகுமென்று இங்கேயே கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு) திரு. தியாகராஜன், உரையை இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. ந. தியாகராஜன்: சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியையும், சம்பளத்தையும் உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்ன மாதிரிதான் எங்களிடத்தில் cricket போட்டியிலிருந்து எல்லாவற்றிற்கும் donation வாங்க வந்துவிடுகிறார்கள். அதிலும் தி.மு.க. உறுப்பினர்கள் என்பதாலே எங்களிடம் வந்துவிடுகிறார்கள். மற்றவர்களைப்போல ஏமாற்ற முடியாது. எனக்கு நல்ல வாய்ப்பை வழங்கியதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

திருச்சி மாவட்டம், உன்னியூர்-நெரூர் காவேரி ஆற்றுக்கு இடையே தடுப்பணை கட்ட வேண்டும். செவிந்திலிங்கபுரம்-மருதூர் காவேரிக்கு இடையே தடுப்பணை கட்ட வேண்டும். தொட்டியம் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். கொல்லிமலை தண்ணீரை மகாதேவி தா. பேட்டை ஏரிக்குக் கொண்டுவர வேண்டும். முசிறி,தொட்டியம்மருத்துவமனைகளைத்தரம்உயர்த்திடவேண்டும். வாளசிராமணியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட

வேண்டும். தா. பேட்டை பகுதியில் நெசவாளர்களுக்குக் கைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டும்.

தொட்டியம், மதுரை காளியம்மன் தேர்த் திருவிழாவிற்கு மின்சார புதைவடக் கம்பி அமைத்துத் தர வேண்டும். அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரிக்கு (முசிறி) புதிய பாடத் திட்டங்கள் கொண்டு வர வேண்டும். தொட்டியம் பகுதியில் தானியக் கிடங்கு ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

காட்டுபுத்தூர், தொட்டியம், முசிறி பகுதிகளில் குடிசை மாற்று வாரியம் வாயிலாக குடியிருப்புகள் கட்ட வேண்டும். முசிறி காவேரி பாலம் முதல் சமயபுரம் டோல்கேட் வரை நான்குவழிச் சாலை ஏற்படுத்தித் தர வேண்டும். ஏழுர்பட்டி பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்திட வேண்டும்.

தா.பேட்டை, மேட்டுப்பாளையம் பகுதியில் பத்திரப் பதிவு அலுவலகம் புதிதாக ஏற்படுத்த வேண்டும். முசிறி, மண்ணச்சநல்லூர், துறையூர் மூன்று தொகுதிகளும் இணையும் இடத்தில் சிப்காட் அமைக்க வேண்டும். முசிறி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும்.

முசிறி கல்வி மாவட்டத்திலிருந்த மாவட்டக் கல்வி அலுவலகத்தை மீண்டும் முசிறியிலேயே அமைக்க வேண்டும். முசிறியில் செவிலியர் கல்வியியல் கல்லூரி அமைக்க வேண்டும். காட்டுபுத்தூரில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. S.R. இராஜா): மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தென்னகத்தின் காந்தியென்று போற்றப்படும், ஏழை மக்கள் வாழ்வில் வளம்பெற வேண்டுமென்று,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சம்பளம், ** என்றெல்லாம் பேசினார்கள். அவர் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளெல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. R. ராதாகிருஷ்ணன்: தென்னகத்தின் காந்தியென்று போற்றப்படும், ஏழை மக்கள் வாழ்வில் வளம்பெற வேண்டுமென்பதற்காக தனது வாழ்வை பொது வாழ்க்கைக்கு அர்ப்பணித்த கர்ம வீரர் காமராஜர் அவர்களை வணங்குகிறேன். தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்குகிறேன். சர்வாதிகார ஒன்றிய அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் இளந்தலைவர் ராகுல் காந்தி அவர்களை வணங்குகிறேன். எங்கள் இளந்தலைவர் ராகுல் காந்திக்கு உற்ற துணையாக இருக்கும் திராவிட மாடல் அரசின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. கே.எஸ் அழகிரி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–30

இந்த மாமன்றத்தில் பொதுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் துணை வட்டாட்சியர் தகுதியிலான ஒருவரை செயலாளராக நியமிக்க வேண்டுமென்றும், ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு உள்ளதுபோன்று, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு மகிழுந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வழங்க வேண்டுமென்றும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஆண்டிற்கு ரூ.6 கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். தொகுதியிலிருக்கின்ற ஒரு கிராமத்தில் வருடத்திற்கு ஒவ்வொரு பணியாக செய்தாலே, ஐந்து வருடங்களில் முழுவதுமாகச் செய்து கொடுக்க முடியவில்லை. ஆகையால், அவசியமாக தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்திக் கொடுத்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதிப் பணிகளைச் செய்வதற்கு உதவியாக இருக்கும். தொகுதி மக்களுக்கும் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது என்று கூறுவதற்கு வாய்ப்பாக அமையும். இல்லையென்றால் பாதி அளவில்கூட தொகுதிப் பணிகளை முடிக்க இயலாத சூழ்நிலை ஏற்படும். எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பான காணொலிகள் மற்றும் புகைப்படங்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அன்றே வழங்க ஆவன செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள railway முன்பதிவு மையத்தில் tatkal முன்பதிவு சேவையைக் கொண்டுவர வேண்டும்.

விடுதலைப் போராட்டத் தியாகிகள் வழித்தோன்றல் வாரிசுகளுக்குக் குடும்ப நல வாரியம் அமைத்திட வேண்டுமென்று 33-க்கும் மேற்பட்ட வாரியங்களை வழங்கிய அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்தந்த உள்ளாட்சி அமைப்பு அலுவலகத்தில் அவ்வூர் தியாகிகளின் புகைப்படங்கள், வரலாற்று கல்வெட்டுகள் அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அனைத்துத் திட்டங்களிலும் தியாகிகளின் வழித்தோன்றல் வாரிசுகளுக்குக் குறிப்பிட்ட சதவிகித இட ஒதுக்கீடு செய்யும்படியும், பணியிலுள்ள வாரிசுகளுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதி, மங்கலம்பேட்டை அருகில் உள்ள ரூபநாராயணநல்லூர் தீயணைப்பு நிலையத்தின் தீயணைப்பு வாகனம் பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் பயன்படுத்தப்படாமல் உள்ளது. மங்கலம்பேட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏழை எளிய விவசாய மக்கள் அதிக

அளவில் வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதியில் குடிசை வீடுகள் அதிகம் உள்ளன. அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, ஒரு புதிய தீயணைப்பு வாகனம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், இவத்துக்குடி கிராமத்திற்கு அருகில், மணிமுத்தாற்றின் குறுக்கே புதிதாகத் தடுப்பணைக் கட்டுவதற்கு அந்தப் பகுதியிலுள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தத் தடுப்பணைக் கட்டுவதன்மூலம் அப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும், சுமார், 26,050 ஹெக்டர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும். இக்கோரிக்கையானது உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்திலும் (UTM) உள்ளது. நீண்ட நாள் கோரிக்கையான பணிகளை மேற்கொள்ள பொதுமக்களிடமிருந்து மனுக்கள் வந்தவண்ணம் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, 2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டன. இதுவரை இதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை, இப்பணிகளை மேற்கொள்ள கடலூர் மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதியினை எடுத்துக்கொள்ள கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு அரசு பரிந்துரை செய்தது. இந்நாள் வரையில், இதற்கான நிதி கனிமவள அறக்கட்டளை நிதிமூலம் ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இத்திட்டத்திற்கான நிதியினை உடனடியாக ஒதுக்கீடு செய்து, பணியைத் தொடங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுக்தா நதியானது கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் மலையில் தொடங்கி, கடலூர் மாவட்டம் வழியாகச் சென்று, வங்கக் கடலில் கலக்கிறது. மயூரா நதி, கோமுகி நதி ஆகிய இரு நதிகளும் கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், எனது தொகுதிக்குட்பட்ட நல்லூர் கிராமத்தில் மணிமுக்தா நதியில் கூடுகிறது. மழை மற்றும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் இரு கரைகளிலும் உடைப்பு ஏற்பட்டு வெள்ள நீர் விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை வீணாக்குகிறது. ஊருக்குள் புகுந்து பொதுமக்களுக்கும் பெரும் சேதத்தை விளைவிக்கிறது. எனவே, வெள்ளத் தடுப்புப்

பணிகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்களிடமிருந்து நீண்டநாட்களாக கோரிக்கை மனுக்கள் வந்தவண்ணம் உள்ளன. எனவே, இதைத் தடுக்கும்பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, 2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அப்பணிகளை மேற்கொள்ள அறிவிக்கப்பட்டது. இப்பணிகளுக்கான திட்ட மதிப்பீடு மற்றும் அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. இதுநாள்வரையில் இதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. இப்பணியானது உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்திலும் உள்ளது. 2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எடுத்துக்கொள்ளுமாறு அரசிடமிருந்து கடிதம் வந்தது. இந்த ஆண்டிற்கான அறிவிப்பு பட்டியலில் கோரிக்கை விடுபட்டுள்ளது. எனவே, நிதிநிலை அறிக்கையில் இப்பணிகளுக்கான நிதியை ஒதுக்கி, அறிவிப்பில் இடம் பெறச் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–35

விருத்தாசலம் தொகுதியில் ஒருங்கிணைந்த நூலகக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வேப்பூர் தாலுகாவாக கடந்த 2013 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, 10 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் இந்நாள் வரையில், ஊராட்சியாக உள்ளது. மக்கள்தொகைக்கேற்ப, அருகில் உள்ள கிராமங்களை இணைத்து, பேரூராட்சியாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வேப்பூர் தாலுகாவில் அரசு கருவூலம் அமைத்திட துறையின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரையில் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருவூலம் அமைத்துத்தர பரிந்துரை செய்து உதவிடுமாறு தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பூர் பகுதியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க 2017 ஆம் ஆண்டு பொதுமக்கள் பங்களிப்புத் தொகையான ரூ.1 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு உயரதிகாரிகளுக்கும் மக்கள் நலன் சார்ந்த யோசிக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

போக்குவரத்துத் துறையில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஓய்வூதியம் கிடைக்காமல் மிகவும் ஏழ்மையில் உள்ளார்கள். அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். அரசு பள்ளிகளில் பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமித்து காலமுறை ஊதியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இரு சக்கர மோட்டார் வாகன பழுது பார்க்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் தனி நல வாரியம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் சரியான இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி பணி நியமன ஆணை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆண்டுதோறும் ஓய்வூதியத்தை உயர்த்தி அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டவர். அதுபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர் ஓய்வூதியத்தையும் ரூ.20,000/– ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுகிறேன். முதியோர் ஓய்வூதியம், ஊனமுற்றோர் மற்றும் விதவைகளுக்கான உதவித் தொகை சரியான முறையில் கிடைக்கப் பெறாமல் பலரும் அலைக்கழிக்கப்படுகின்றனர். அது சரியான முறையில் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்விற்கு அரசு சார்பில் போட்டித் தேர்வு பயிற்சி மையம் மாவட்டந்தோறும் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் இப்போது 25,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதனை 50,000/– ரூபாயாக உயர்த்தித் தரலாம் என்று வேண்டுகிறேன். கேரளா, மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் ஆந்திராவில் இப்பொழுது 50,000/– ரூபாயாக வழங்கப்படுகிறது. அதைப்போல, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உள்ளதால் நாமும் அதைச் செய்யலாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். வயதான காலத்தில் இருக்கும் முன்னாள் M.L.A–க்களுக்கு மருத்துவத் தேவைகள் அதிகரிக்கும். ஆதலால் மருத்துவப் படியை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி முடியுங்கள். 10 நிமிடங்கள் முடியப் போகிறது.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: Ex-MLA *விடுதியில் அறைகள் குறைவாக உள்ளன. கூடுதலாக ஒரு கட்டடத்தை, 100 அறைகள் கொண்டதாகக் கட்டி* Ex-MLA-*க்கள் தங்குவதற்கு இட வசதியை ஏற்படுத்தித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, திரு. ராதாகிருஷ்ணன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒ. ஜோதி அவர்கள்.*

***திரு. ஒ. ஜோதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு. சுயமரியாதை சுடர் தந்தை பெரியார், காஞ்சி தந்த அறிவாசான் பேரறிஞர் அண்ணா, தமிழகத்தின் நவீன சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், தன்னுடைய அயராத உழைப்பால் தாழ்ந்து கிடந்த தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்து திராவிட மாடல் ஆட்சி செய்து வரும் தமிழ்நாட்டின் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களையும், இளைஞர்களின் எழுச்சி நாயகர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதியார் அவர்களையும், உழைப்பால் உயர்ந்தவர், உழைப்பின் அருமை தெரிந்தவர், உழைப்பவரை உயர்த்துபவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், என்னை இந்த அவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய செய்யாறு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 6–40

2023–2024 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை உள்ளிட்ட மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக அரசுக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த

வகுத்தலும் வல்ல தரசு'

என்ற குறளின்படி, ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், சரியான திட்டமிடுதல் வேண்டும். இதன் அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிறந்த நிதியமைச்சரை நியமித்து, வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைத்து, வருவாயை உயர்த்தி, செலவினங்களைக் குறைத்து, தமிழ்நாட்டை இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாநிலமாக மாற்றியுள்ளார். மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில், ஒவ்வொரு நாளும், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்து மக்களுக்குமான திட்டங்களை உருவாக்கி, வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை, உங்கள் தொகுதியில் முதலமைச்சர், நான் முதல்வன், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, மகளிர் உரிமைத் தொகை, இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆகிய திட்டங்கள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

தலைவர் கலைஞர்தான் முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக 25 இலட்சம் ரூபாய் கொடுத்து, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்கினார். தற்போது, தமிழக அரசு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக 3 கோடி ரூபாய் வழங்கினாலும், GST ஆக 59 இலட்சம் ரூபாய் சென்று விடுகிறது. மேலும், பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப தொகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. அதனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியினை 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கிட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் நிதிநிலைமை மிகவும் கடுமையான நெருக்கடியில் இருந்தபோது, முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்றார். தமிழ்நாட்டின் நிதியமைச்சராக மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களை நியமித்து,

அரசின் நிதியைப் பெருக்கி, பல நல்ல திட்டங்களுக்கு நிதியை ஒதுக்கீடு செய்து, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, தமிழகத்தை நீடித்த, நிலைத்த வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் சட்டமன்றத்தில் இயற்றப்படுகின்ற சட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதுதான் ஆளுநரின் வேலை. சட்டமன்ற நடவடிக்கைகளை, அலட்சியம் செய்வதோ அல்லது அரசியல் செய்வதோ ஆளுநரின் பணியல்ல; சட்டமன்றத்திற்கு இணக்கமாகச் செயல்படுவதே ஆளுநரின் கடமையாகும். இதை ஆளுநர் மீறியபோது, சட்டமன்ற மாண்பைக் காப்பாற்றியவர், நம்முடைய மக்கள் முதல்வர் தளபதியார் அவர்கள். துதிபாடும் மன்றமாக சட்டமன்றம் இருந்ததை மாற்றி, முதல்வரைப் பற்றி யாரும் புகழக் கூடாது என்று கூறி, இன்று சட்டமன்றத்தை மக்கள் மன்றமாக மாற்றியவர் நம் முதல்வர். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி சார்ந்து, பல்வேறு நிகழ்வுகளுக்குச் செல்லும் நிலை உள்ளது. உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு வழங்குவது போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாகன வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய காலகட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்படும் ஓய்வூதியம் போதுமானதாக இல்லை. ஆதலால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பயனாளர்களைத் தேர்வு செய்ய வாய்ப்பு வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது செய்யாறு தொகுதியில் தலைவர் தளபதியார் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற சமூக நீதிக் கோட்பாட்டின்படி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றித் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வடஇலுப்பைத் தரைப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்தி செய்யாறில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பயணியர் விடுதி மற்றும் காஞ்சிபுரம்-செய்யாறு சாலை 10 ஆண்டுகள்

கிடப்பில் போடப்பட்டதை மீட்டெடுத்து, சாலைப் பணி அமைத்து, மக்களின் பாராட்டைப் பெற்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், செய்யாறு பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய ஆணை பிறப்பித்த மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், செய்யாறில் புதியதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தந்த மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறையிலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பல கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் குடமுழுக்கு செய்தும், செய்யாறு அருள்மிகு பாலகுஜாம்பிகை உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு புதியதாக 3 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டுவதற்கும் ஆணை வழங்கிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகள். கடந்த ஆட்சியில் பல மாவட்டங்கள் அவசரக் கோலத்தில் பிரிக்கப்பட்டன. அதற்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் எதுவும் ஏற்படுத்தித் தரப்படவில்லை. அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சிரமேற்கொண்டு தற்போது பல கட்டமைப்புகளை உருவாக்கி, பல மாவட்டங்களின் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகிறார்.

திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து செய்யாறை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த தேர்தல் பிரச்சாரத்தில் செய்யாறை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

கழகம் முதன்முதலில் தேர்தலில் போட்டியிட முடிவு செய்து, போட்டியிட்ட தேர்தலில், குளித்தலை தொகுதியில் கழகத்

தலைவர் கலைஞரும், செய்யாறு தொகுதியில் புலவர் கோவிந்தன் அவர்களும் வெற்றி பெற்றார்கள். தி.மு.க. போட்டியிட்ட தனது முதல் தேர்தலில் செய்யாறு தொகுதியைத் தனது கழக கோட்டை என்பதை நிரூபித்தது.

1962-ல் வருவாய்க் கோட்டமாக உருவாக்கப்பட்டு, 61 ஆண்டுக் காலமாக இயங்கி வருகிறது. மாவட்டத் தலைநகருக்கு இணையாக அனைத்து மாவட்ட அலுவலகங்களும், மாவட்டத் தலைமை மருத்துவமனை, செய்யாறு சுகாதார மாவட்டம், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம், செய்யாறு கல்வி மாவட்டம், மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை கோட்ட அலுவலகம், சுமார் 8,000 மாணவர்கள் பயிலும் அரசு கலைக் கல்லூரி மற்றும் Polytechnic கல்லூரி, அரசு தொழிற்பயிற்சி நிலையம், சார்பு நீதிமன்றங்கள், ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, செய்யாறு SIPCOT Phase I, Phase II, Phase III--சுமார் 5,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.—என அனைத்தும் அமையப்பெற்றுள்ளன. எனவே, செய்யாறை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கிட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் SIPCOT தொழிற்பேட்டை இயங்கி வருகிறது. இப்பகுதியில் 100-க்கும் மேற்பட்ட கல்குவாரிகள் இயங்கி வருகின்றன. நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள், தொழிற்சாலைகளுக்குச் செல்ல ஆயிரக்கணக்கான பேருந்துகள் இயக்கப்படுவதினால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்ட இணைப்புச் சாலையாக உள்ளதால், மக்களின் நலன் கருதி இருவழிச் சாலையினை நான்குவழிச் சாலையாக மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்திற்கு இணையாக அதே பகுதியில் புதிய பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வெம்பாக்கம் ஒன்றியம், வடமனப்பாக்கம் கிராமத்தில் சுமார் 250 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலம் உள்ளது. கால்நடை மருத்துவக்

கல்லூரி அமைத்தால், அருகில் உள்ள ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாய மக்களுக்கும், விவசாயம் சார்ந்த கல்வி பயில மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதால், புதிய கால்நடை மருத்துவக் கல்லூரியை உருவாக்கிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.*

திரு. ஒ. ஜோதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தியில் பாகுபாடு பார்க்கக் கூடாது. பக்கத்தில் இருக்கிற இலைகளுக்குக் கொடுக்கிறீர்கள். எனக்குக் கொஞ்சம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பக்கத்தில் உள்ளவர் பாயசம் கேட்பதுபோல், நீங்கள் என்னிடம் கேட்க வேண்டாம். அவர்களுக்கு 20 நிமிடங்கள் என்றால், முனைவர் கோவி செழியனுக்கு 20 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. உங்களுக்கு 9 நிமிடங்கள் முடிந்துவிட்டன. இன்னும் ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி, உங்கள் உரையை முடித்து அமருங்கள்.*

திரு. ஒ. ஜோதி: *செய்யாறு தொகுதியில் புளியரம்பாக்கம், அனக்காவூர் வழியாக செய்யாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டி, காஞ்சிபுரம், வந்தவாசி செல்வதற்கு உள் வட்டச் சாலை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு தொகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் கருதி குளிர்பதன வசதியுடன்கூடிய வேளாண்மை சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு தொகுதிக்குட்பட்ட ஏனாதிவாடி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி சார்ந்த கோரிக்கைகள் இருந்தால், என்னிடம் கொடுங்கள். நான் பதிவு செய்து தந்துவிடுகிறேன். (குறுக்கீடு)*

திரு. ஒ. ஜோதி: *இதோ ஒரே ஒரு பேப்பர் மட்டும்தான் உள்ளது. (குறுக்கீடு)*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி சார்ந்த கோரிக்கைகள் இருந்தால், அவற்றை நான் பதிவு செய்து தந்து விடுகிறேன்.*

திரு. ஒ. ஜோதி: *ஏனாதிவாடி, நமண்டி, புரிதை ஆகிய கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனையில், செவிலியர் பயிற்சி மையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு தொகுதியில் அனக்காவூர் ஒன்றியத்திற்குட்பட்ட காஞ்சிபுரம்–வந்தவாசி சாலை, வீரம்பாக்கம் கிராமத்தில் புதிய பயணியர் இல்லம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 2016–ல் புதிதாக வெம்பாக்கத்தில் வட்டம் உருவாக்கப்பட்டது. இந்த வட்டத்திற்கு அடிப்படைத் தேவையான தாலுகா காவல் நிலையம், மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம், கருவூலம், தீயணைப்பு நிலையம் ஆகியவற்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

செய்யாறு தொகுதிக்குட்பட்ட சித்தாத்தூர் கிராமத்திற்குச் செல்லும் தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு தொகுதிக்குட்பட்ட கொர்க்கை கிராமத்தில் பெரணமல்லூர், ஆரணி, சார்-பதிவாளர் அலுவலகத்தில் இயங்கி வந்த பத்திரப் பதிவினை மாற்றி அதே செய்யாறு வட்டத்திற்குட்பட்ட கொர்க்கை கிராமத்திற்கு புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு சிப்காட் தொழிற்சாலையில் சுமார் 75,000 தொழிலாளர்கள் பணிபுரிவதால், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை, ESI *அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும், உங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளை நீங்கள் பேசியதாகப் பதிவு செய்து தருகிறேன். நன்றி சொல்லி உட்காருங்கள்.*

பிற்பகல் 6–50

திரு. ஒ. ஜோதி: அரசு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம், IRT அமைத்துத் தருமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செய்யாறு மின் பகிர்மான வட்டம் அதிகப்படியான வருவாயை ஈட்டித் தரும் பகுதியாக உள்ளதால், செய்யாறு பகுதிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோதி, நான் சொல்வது என்னவென்றால், நீங்கள் பேசுவது அனைத்தும் உங்கள் தொகுதி சார்ந்த விஷயங்கள். அவற்றை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்து தருகிறேன். நீங்கள் பேசியதாக அது record ஆகிவிடும்.

திரு. ஒ. ஜோதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியதுபோல, ஒரு தகுதியற்றவன் ஜொலிக்கிறான் என்றால் அதை இப்படி எண்ணிக்கொள்; "அடிக்கிற காற்றில் பேப்பரும் பறக்கும், பறவையும் பறக்கும்; காற்று நின்றால்தான் பேப்பர் எது, பறவை எது என்பது தெரியும்." நடந்து முடிந்த ஈரோடு இடைத்தேர்தலாகட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) நடக்கப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலாகட்டும், மக்கள் யார் பக்கம் என்பது தெரியும். எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள். 5 நிமிடங்கள் பேச வேண்டுமென்று கேட்டீர்கள். உங்களுக்குப் பேச 5 நிமிடங்கள் அனுமதிக்கிறேன். அப்படியே left-ல் திரும்பிப் பார்த்தால், அகண்ட திரையில் உங்கள் படத்துடன், நீங்கள் எவ்வளவு நேரம் பேசுகிறீர்கள் என்பது தெரியும். 5 நிமிடங்களில் பேசி முடித்துவிட வேண்டும்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் கொடுத்ததுபோன்று 10 நிமிடங்கள் கொடுங்கள். 10 நிமிடங்களுக்குமேல் பேச மாட்டேன். (குறுக்கீடு)

(அகண்ட திரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களின் படம் மற்றும் பெயர் display செய்யப்பட்டிருந்தது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: List-ல் அடுத்து பேசப்போகும் உறுப்பினர் வரிசையில் திரு. வேல்முருகன் அவர்களின் பெயர்தான் இருந்தது. அதனால், அவரது பெயர் காண்பிக்கப்பட்டுள்ளது. திரு. அருள் அவர்களின் பெயர் புதிதாகச் சேர்க்கப்பட்டதால் தற்போது திரு. அருள் அவர்களின் படம், பெயர் வந்துவிடும். வந்துவிட்டது பாருங்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பியிருக்கும் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும் எனது முதல் வணக்கம். இங்கே எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் தியாகச் செம்மல், அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் வணக்கம். தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், இந்த அவையின் மாண்புமிகு முன்னவர், எங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், சேலம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், எங்களை பாசத்தோடும், அன்போடும் அரவணைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், சேலத்தின் பெருமை மாம்பழம் என்பதுபோல, நம்முடைய அரசு தலைமைச் செயலாளர் அண்ணன் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும் என் வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், எல்லோருமே car வைத்திருக்கிறோம். இருந்தாலும்கூட, Chairman, பேரூராட்சி Chairman என அனைவருக்கும் TATA Safari வாங்கிக் கொடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பல வாகனங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் அவர்களுடைய வாகனங்களுக்குப் பின்னால் செல்லும்போது அதில் வருவது MLA என்று யாருக்கும் அடையாளம் தெரிவதில்லை. எங்களுடைய சௌகரியத்திற்காக நாங்கள் car

கேட்கவில்லை. நாங்கள் சாலையில் செல்லும்போது, இதோ நம்முடைய MLA வருகிறார்; அவரிடம் நம்முடைய பிரச்சினையை சொல்லலாம் என்று மக்களிடம் அடையாளப்படுத்துவதற்காகக் கேட்கிறோம். இங்கிருக்கின்ற 234 உறுப்பினர்களுமே car வைத்திருக்கிறோம். எங்களை இந்த மக்கள் வாக்களித்து அடையாளப்படுத்தினார்கள்; அதனால், எங்களை மக்களிடத்தில் அடையாளப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் symbol-உடன் ஓர் அரசு வாகனம் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று, சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களில் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் xerox machine நிறுவியும் மற்றும் தட்டச்சர்களைப் பணியமர்த்தியும் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களில் பலர் என்னைப் போன்று சொந்த வீடு இல்லாமல் வாடகை வீட்டிலோ, அப்பா, அம்மா கட்டிய வீட்டிலோதான் இருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் வட்டியில்லாமல் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள்கூட அன்று பேசும்போது, பல மாநிலங்களில் வட்டியில்லாமல் MLAs-க்கு loan கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதேபோன்று எங்களுக்கும் loan வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். MLAs-க்கு அரசு இ-சேவை மையத்தை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையில் loan கொடுக்க மாட்டார்கள். அதற்கு Bank-க்குச் செல்லுங்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாநிலங்களில் வட்டியில்லாக் கடன் கொடுக்கிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு car கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியில் Toyota Innova Crysta car கொடுத்திருக்கிறார்கள். கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் car கொடுத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உதாரணமாகச் சொல்லித்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி அலுவலகங்களில் இ-சேவை மையங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக

அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதில் என்ன சிக்கல் என்றால், இ-சேவை மையத்தில் கட்டணமாக 80 ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். வருகின்ற மக்களிடம் 80 ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று சொன்னால், MLA-விடம் போய் application கொடுப்பதற்கே 80 ரூபாய் பணம் வாங்குகிறார்கள் என்று சொல்வார்கள். அந்தக் காரணத்திற்காக அதை இலவச சேவையாக செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்து மக்களைச் சந்திப்பதற்காக அலுவலகம் வேண்டுமென்று இந்த மன்றத்தில் எங்களுடைய தலைவர், அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள்தான் கேட்டார்கள். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த ஐயா மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு அந்த அலுவலகத்தைத் தந்தார்கள். இன்றைக்கு நாங்களும் கேட்கிறோம்; அவர்களுடைய அன்பு மகனாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்கிறோம். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் அலுவலகம் அமைத்துக் கொடுத்தார்கள், இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு car கொடுப்பார்கள் என்று நம்புகிறோம். அந்த car-உடன் சேர்த்து 5 கோடி ரூபாயை சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) MLA தொகுதி நிதியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 10 நிமிடங்கள் பேச வேண்டுமென்று என்னுடைய பேச்சை ready செய்து கொண்டுவந்திருந்தேன். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 5 நிமிடங்களில் முடிக்க வேண்டுமென்று சொன்னவுடன் பதற்றமாகிவிட்டது. வேறொன்றுமில்லை, மன்னித்துக்கொள்ளுங்கள். அதேபோன்று MPLADS-க்கும் என்ன norms இருக்கிறதோ அந்த norms-ஐ MLACDS-க்கும், applicable செய்ய வேண்டும். அவர்களுக்குள்ள normsபடி அவர்களுடைய நிதியில் தெரு விளக்குகள் போடுகிறார்கள். நாங்கள் தெரு விளக்குகள் போடுவதற்கு எங்கள் மாவட்ட நிர்வாகத்தில் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இதைச் செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–55

அதேமாதிரி பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு city வளர்ந்துகொண்டே போகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியை இரண்டாகப் பிரியுங்கள். என்ன காரணமென்றால், இன்றைக்கு வேகமாக வளர்கிறது. CMDA அண்ணன், நம்முடைய திரு. சேகர்பாபு அண்ணன் பார்க்கிறார். CMDA limit செங்கல்பட்டு வரைக்கும் போய்விட்டது. இந்த வேகத்தில் போய்க்கொண்டிருந்தால், தமிழ்நாட்டில் பாதி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குள் வந்துவிடும். நிர்வகிப்பது சிரமமாகப் போய்விடும். ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதேமாதிரி, மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற மாநகராட்சிகளும் அதிவேகமாக வளர்ந்து வருகின்றன. அதிவேகமாக வளர்ந்து வருவதால், நகரமயமாக்கலில் அவற்றுக்கான சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

இன்னொன்றைச் சொல்கிறேன். சேலம் மாநகராட்சியைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக இருக்கிற அண்ணன் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்கள் திருச்சியை எப்படி பார்க்கிறாரோ, அந்தமாதிரிதான் எங்கள் மாவட்டத்தையும் பார்க்கிறார். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, எங்களுக்கு நிதி கொடுக்கமாட்டேன் என்கிறார். சேலம் மாநகரம், தமிழ்நாட்டின் மையப் பகுதியில் இருக்கிறது. அதனால், அதன் வளர்ச்சிக்கு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் இன்னும் பெரிய அளவில் அதிக நிதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியான சேலத்தில், இஸ்மாயில்கான் ஏரி என்ற ஓர் ஏரி இருக்கிறது. மழை பெய்தால், அந்தத் தண்ணீரெல்லாம் ஐந்து ரோடிற்கு வந்துவிடுகிறது. பாதி தொகுதி, மழை வெள்ளத்தில் மிதக்கிறது. இதைத் தடுப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை செயலாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரிக்க வேண்டும். 4 தொகுதிகளை ஓர் எல்லையாக வைத்து, மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்பது எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கையாக மருத்துவர் அய்யா

அவர்களும் நீண்ட நெடுங்காலமாகச் சொல்லி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் 4 தொகுதிகளை ஓர் எல்லையாக வைத்து மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும். அதேமாதிரி, எங்கள் சேலம் மாவட்டத்தில் 11 தொகுதிகள் இருக்கின்றன. 3 மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவர், 3 நாட்களுக்கு முன்பு அழுக்கு வேட்டி, சட்டையோடு என்னிடம் மனு கொடுக்க வந்தார். அண்ணே, நீங்கள் எந்த ஊர் என்று கேட்டேன். நானும், முன்னாள் எம்.எல்.ஏ.-தான் என்றார்; எனக்கு அப்படியே கண்ணீரே வந்துவிட்டது. அழுக்கு சட்டை, அழுக்கு வேட்டி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் 20,000 ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை 25,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்த புண்ணியவான் என்று அவரைப் பாராட்டினார்கள். இன்றைக்கு இந்தத் தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25,000 ரூபாயை, 50,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். அதுமட்டுமல்ல, எல்லோரும் வயதானவர்கள், Diabetes, Blood Pressure போன்ற நோய் இருப்பவர்கள். மருந்து, மாத்திரை வாங்குவதற்கு ஒரு மாதத்திற்கு 10,000 ரூபாய், 12,000 ரூபாய் செலவாகிறது. நாங்கள் GH-க்குப்போய் வரிசையில் நின்றாலும், எங்கள் dress-ஐ பார்த்துவிட்டு முன்னாள் எம்.எல்.ஏ. என்று நம்ப மாட்டேன் என்கிறார்கள்; 50,000 ரூபாய் மருத்துவப் படியாக உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உத்தரவு வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும்.

அதேமாதிரி, ஓய்வு வயதை 60 என்று ஆக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு போக்குவரத்துத் துறையில் இருக்கிறவர்களெல்லாம் எங்களால் வண்டி ஓட்ட முடியவில்லை. 58 வயதாக மாற்றிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிப்பதை பொறுத்தவரைக்கும், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பல மாவட்டங்களைப் பிரித்தார். அதேமாதிரி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பிரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழைய ஓய்வூதியத் திட்டம். எங்கள் அப்பா, அம்மா இரண்டு பேரும் வாத்தியார்கள். இன்றைக்கு நான் ஒரு தொழில் செய்கிறேன். என் தம்பி டாக்டர். நாங்கள் எங்களுடைய அப்பா, அம்மாவை பார்த்துக்கொள்கிறோம். அவர்களுக்கு pension வருகிறது, பார்த்துக்கொள்கிறார்கள். இன்றைக்கு retire ஆகிறவர்களுக்கு pension இல்லை. அவர்களுக்கு ஒருமுறை கொடுக்கும் பணத்தினால், ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருடம் என அப்பா, அம்மாவை அவர்களின் மகன் பார்த்துக்கொள்கிறான். அதற்குப் பிறகு விட்டுவிட்டுப் போய்விடுகிறான். முதியோர்களின் ஒரே ஆதரவு, பழைய ஓய்வூதியத் திட்டம். ஆகவே, கருணை உள்ளத்தோடு அதைத் தந்து உதவ வேண்டும்.

சேலத்திற்கு Ring road அமைத்துத் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சேலத்தில் இரும்பாலைக்கு விவசாயிகளிடமிருந்து நிலத்தை எடுத்தார்கள். அந்தக் காலத்தில் 1,500 ரூபாயோ, 2000 ரூபாயோதான் கொடுத்தார்கள். இன்றைக்கு 4,000 ஏக்கர் நிலங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த நிலங்களை அந்த விவசாயிகளிடத்தில் திருப்பித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த விவசாயிகள் எல்லாம் road–ல் நிற்கிறார்கள். இன்னும் அதேமாதிரி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். தொகுதி சார்ந்தவற்றையெல்லாம் தந்துவிடுங்கள். நீங்கள் பேசும்போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவப் படியாக 50,000 ரூபாயாவது தாருங்கள் என்று கேட்டீர்கள். ஏற்கெனவே 50,000 ரூபாய்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதை உயர்த்திக் கேட்க வேண்டும். அதைத் திருத்திக்கொள்கிறேன். போதும், நன்றி சொல்லி உட்காருங்கள்.

திரு. இரா. அருள்: Pension 50,000 ரூபாய் கொடுக்க வேண்டும், மருத்துவப்படி மாதம் 10,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டேன். அதேமாதிரி TNPSC–ல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமே பதிவாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) போதும் (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. இரா. அருள்: *அர்த்தநாரீச வர்மா புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட தியாகி. நானும் இந்த மன்றத்தில் 5 முறை கேட்டிருக்கிறேன். அவருடைய பெயரே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவரை நினைவுபடுத்தும் வகையில் சேலத்தில் அவருக்காக ஏதேனும் செய்து தர வேண்டும்.*

இரவு 7-00

அடுத்ததாக, கயிறு தொழில். என்னுடைய தொகுதியில் முக்கால்வாசி பேர் கயிறு தொழில் செய்பவர்கள். அந்தத் தொழிலில் அவர்களுக்குக் கூலி கொடுப்பதற்குக்கூட வருமானம் கிடைப்பதில்லை. எனவே, 500 யூனிட் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள்.*

திரு. இரா. அருள்: *இந்த நல்ல வாய்ப்பை எனக்குத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அனைவருக்கும் நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காகப் பணி செய்வதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்மை இந்தப் பேரவைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இந்தப் பேரவை தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மக்களுடைய பிரச்சினைகளை உள்வாங்கி, மக்களுக்காகப் பணியாற்றுகிற ஒரு மாபெரும் ஜனநாயக மன்றமாக விளங்கி வருகிறது. ஆனால், ** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வந்து, சட்ட மசோதாக்களில் இத்தனை நாட்களுக்குள் மாண்புமிகு ஆளுநர்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவர்கள் கையொப்பமிட வேண்டுமென்று ஒரு காலவரையறை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்கிற வேண்டுகோளை முன்வைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மாநில சுயாட்சி உரிமைகளுக்காக இந்தியாவிற்கே வழிகாட்டிய ஒரு மாபெரும் வரலாற்று இயக்கம். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி வழியில் இந்த மன்றம், இந்த அவை கூடி நிறைவேற்றுகிற சட்ட மசோதாவிற்கு **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) அடுத்த subject குறித்து பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்துகளைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த subject-க்கு வாருங்கள். (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: நான் சொல்கிறேன். நீங்கள் நீக்கிவிடுங்கள். பதிவு செய்ய வேண்டியது என்னுடைய கடமை. எனவே, நாம் ** என்ற வேண்டுகோளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் தொடர்பான செலவு பற்றி சில உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். என்னிடம் 5 தீர்மானங்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கைகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. அந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மட்டுமே பேசவிருக்கிறார்கள். எனவே, இது இறுதி மானியக் கோரிக்கை என்பதால், ஒரு விளக்கத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. S.S. பாலாஜி,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், டாக்டர் நா. எழிலன், முனைவர் T.R.B. ராஜா மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகிய 5 பேரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, நான் 3 விளக்கங்களை மட்டும் கூறி, எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயல்பாட்டைத் தொடாமல், நிதி மேலாண்மைப் பற்றி மட்டும் நான் பேச விரும்புகிறேன்.

முதலில், மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அந்தத் தலைப்பை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கடந்த 10 ஆம் தேதி முதலில் அவர்தான் தொடங்கி வைத்தார். 'அட்சய பாத்ரா', அதாவது, காலை உணவுத் திட்டத்தின் செலவைப் பற்றி அவர்தான் தொடங்கி வைத்தார். அதற்குப் பின்னர் அதுகுறித்த கோப்புகளையெல்லாம் எடுத்துப் பார்த்தோம். அதில் சில அசாதாரண நிகழ்வுகள், அதாவது, அன்றைக்கு இருந்த ஆளுநரின் செயலாளர் அரசுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் சொல்கிறார், ஆளுநர்களுடைய ஒரு conference நடந்து அந்தக் கூட்டத்தில், சில ஆளுநர்கள் சேர்ந்த ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு ஆளுநர் மாளிகை செயல்பாடுகளைச் சிறப்பிப்பதற்கு ஓர் அறிக்கையைத் தயாரித்து, அது ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஒரு பகுதியை நாங்கள் உங்களுக்கு அனுப்புகிறோம். அதை நீங்கள் உடனடியாகச் செயல்படுத்தி, செயல்படுத்திவிட்டீர்கள் என்று எங்களுக்கு ஆதாரத்தைக் கொடுத்தால், நாங்கள் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ஒரு கடிதம்.

இரவு 7-05

என்னைப் பொறுத்தவரை, அதை முறையில்லாத ஒரு கடிதமாகத்தான் நான் கருதுவேன். மிரட்டும் வகையிலான கடிதமாகத்தான் இருந்திருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், Governor being the head of the State, the discretionary grant placed at his disposal seems to be very meagre. Moreover, the amount being provided under this head is different from State to State. It was decided to recommend that the amount there should be uniform in the grant and should be minimum of Rs.5 crore. இதெல்லாம் எந்த அளவுக்கு

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 19

ஜனநாயக நாட்டில் செல்லும் என்பது எனக்குப் புரியவில்லை. அதாவது, பெரிய பொறுப்பு, அதனால் ரூ.5 கோடி வரைக்கும் எந்தக் காரணமும் கேட்காமல் செலவு செய்வது என்பதெல்லாம் என்னைப் பொறுத்தவரைக்கும் ஜனநாயகத்திற்கு உட்பட்டதில்லை. அந்தக் கடிதம் பெற்ற பிறகு, அன்றைக்கு இருந்த ஆட்சியில் இருந்த நிதித் துறைச் செயலர் ஒரு கோப்பை உருவாக்குகிறார். அதில், இந்த மாதிரி கடிதம் வந்திருக்கிறது. அவர்கள் கேட்கிறார்கள் அடுத்த ஆண்டிலிருந்து ரூ.5 கோடியாகவும், இந்த ஆண்டு ஏற்கெனவே நிலுவையில் இருப்பதனால் இதுவரைக்கும் ஒதுக்கிய ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய், வெறும் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயை, இந்த மாதம்–ஜனவரி மாதம், ரூ.2 கோடியாக உயர்த்த வேண்டும் என்று. ஆண்டு எப்போது முடிகிறது என்றால் மார்ச் 31 ஆம் தேதி முடிகிறது. அப்படியென்றால், திடீரென்று ஒரு நாள் ரூ.2 கோடியாக உயர்த்தினால், செலவு செய்வதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது என்றுகூட தெரியவில்லை.

ஏனென்றால் ஏற்கெனவே கூறப்பட்டிருக்கிறது. Finance Code-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. Discretionary grants are petty grants and charitable donations to institutions of a public or quasi-public character and individuals in need. இதுதான் மொத்த scope. இதுதான், வரையறை. இதில் எப்படி ரூ.2 கோடி இரண்டு மாதங்களில் செலவு செய்ய முடியும்? அன்றைக்கு இருந்த நிதித் துறைச் செயலர் ஓர் அசாதாரண முடிவை எடுக்கிறார். கோப்பு எதையும் உருவாக்காமலும், எந்த அமைச்சரின் கையெழுத்துக்கு அனுப்பாமலும்—சாதாரணமாக ஜனநாயக நாட்டில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மை இருக்கிற அரசாங்கம் அமைச்சர்களை நியமித்து, கோப்பில் அவருடைய policy approval வாங்கித்தான், இதையெல்லாம் செயல்படுத்த வேண்டும். அது எதுவும் நடக்காமல்—நிதித் துறைச் செயலரே ஒரு முடிவு எடுக்கிறார்; இந்த ஆண்டு முடிகிற நேரத்தில் இருப்பதனால், ரூ.2 கோடிக்கு பதிலாக ரூ.50 இலட்சம் மட்டும் கொடுத்துவிடலாம்; அடுத்த ஆண்டிலிருந்து ரூ.5 கோடி கொடுக்கலாம். ஆனால், தெளிவாக இந்த வரையறையை அமல்படுத்த வேண்டும். Discretionary grants are only for petty grants and charitable donations to institutions of a public-இதையெல்லாம் திருப்பித் திருப்பி அவரே கோப்பில் எழுதி போட்டிருக்கிறார். ஆக, எந்த அமைச்சரின் கையெழுத்துக்கும் போகாமல், எந்த ஒரு கொள்கை முடிவும் எடுக்காமல், நிதித் துறைச் செயலாளரே

அந்த நிதியை, ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக ஒரே நாளில் ஒரு கோப்பில் அதிகரித்து, அடுத்தாண்டு budget-ல் ரூ.5 கோடியாக, 60 நாட்களுக்குள், அறிவித்திருக்கிறார்கள். என்ன ஆகிறது என்றால் எதிர்பார்க்கிற மாதிரி அந்த நிதியை இரண்டு மாதங்களில் பயன்படுத்த முடியவில்லை. ஒன்று, வருட கடைசி அன்றைக்கு, மார்ச் 31 ஆம் தேதியன்று ரூபாய் 49 இலட்சத்து 81 ஆயிரம் அளவிற்கு, அரசுக் கணக்கிலிருந்து எடுத்து, ஆளுநர் மாளிகையினுடைய வீட்டுக் கணக்கில், அதாவது நமது கண்ணுக்குத் தெரியாத கணக்கில் மாற்றப்படுகிறது.

அடுத்த ஆண்டு வருகிறது; இதேமாதிரி ரூ.5 கோடி என்று வரும்போது, மொத்தம் ரூ.5 கோடியும், நம்மிடம் நேராக சொன்னது 'அட்சய பாத்ரா' என்று description-ல் இருக்கிறதே தவிர, போகிற கணக்கு வீட்டுக் கணக்கு. எனவே, இந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது நமக்கு சரியான பாதையில் வரவில்லை என்று நான் கூறுவேன். ஏனென்றால், எந்த ஓர் அமைச்சராலும் கையெழுத்துப் போடாத கோப்பு இது. இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை நாங்கள் செயல்படுத்தினோம் என்று அன்றைக்குச் சொன்னார். எந்த அமைச்சருக்கும் பங்கே இல்லாத ஒரு திட்டத்தை, அரசினுடைய கொள்கை அடிப்படையில் செயல்படுத்திய திட்டம் என்று கூறவே முடியாது. இது முழுவதுமாக அன்றைக்கு இருந்த ஆளுநருடைய discretionary grant. ஆனால், எங்களுக்கு அது நிஜமாகவே யாரிடம் சென்று சேர்ந்தது என்பது தெரியவில்லை. எனவே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற பொதுத் துறையில் இருக்கிற கோப்புகளை எல்லாம் எடுத்துப் பார்த்தால், அன்றைக்கு இருந்த ஆளுநரின் செயலர் பொறுப்பைவிட்டு, அடுத்த மாநிலத்திற்குச் செல்கிற நேரத்தில் கையெழுத்து இல்லாத, seal இல்லாத ஒரு account-ஐ இங்கே கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார், அதில் பார்த்தால், அவர் சொல்கிறார், முதலில் ரூபாய் 1 கோடியே 99 இலட்சம், அடுத்து ரூ.2 கோடி, அதற்குப் பிறகு ரூ.50 இலட்சம் என்று மொத்தம் ரூ.4 கோடியே 49 இலட்சம் அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறுகிறாரே தவிர, எங்களுக்கு அதற்கான ஆதாரம் இல்லை. அடுத்ததாக, இன்று வரையிலும் என்னிடம் இருக்கின்ற தகவல் என்னவென்றால், கோவிட் வந்த காரணத்தால் அந்தக் கட்டடத்தை கட்டி முடித்து, இன்று வரையிலும் அந்தக் கட்டடத்தைத் திறந்து, அதில்

ஒருநாள்கூட உணவு தயாரிக்கப்படவில்லை என்பதாகும்; எந்த school–க்கும் கொடுத்ததில்லை.

இரவு 7–10

இதற்கு மாறாக, நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நடந்த சில விஷயங்களைப் பற்றி நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 2021–ல் புதிய ஆளுநர் அவர்கள் வந்த பிறகு, கூடுதல் நிதிக்கோ, கூடுதல் செலவினத்திற்கோ கோரிக்கை அடிப்படையில் சுமார் 17 கோப்புகள் உருவாக்கப்பட்டு, பொதுத் துறை, நிதித் துறை என சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சர்களுடைய கையெழுத்து பெறப்பட்டு, அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. நாம் அவர்களுக்கு எவ்வளவு மரியாதை செய்கிறோம்; எவ்வளவு உதவி செய்கிறோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அவர்களுடைய செயல்பாடுகள் பற்றி அல்ல; நிதி மேலாண்மையைப் பற்றி நான் சொல்கிறேன்.

ஒரு கோப்பில், ஒரு புது Mercedes-Benz உட்பட 5 புது வாகனங்களை வாங்க ரூ.2 கோடியே 10 இலட்சம் வழங்கிவிட்டோம்; இன்னொரு கோப்பில், சுதந்திர தின விழாவைக் கொண்டாடுவதற்கு ரூ.25 இலட்சம் வழங்கிவிட்டோம்; மற்றொரு கோப்பில், சுற்றுப்பயணம் செய்வதற்கு ரூ.15 இலட்சம் வழங்கிவிட்டோம்; பிறிதொரு கோப்பில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதவியேற்பு விழாவிற்கு ரூ.10 இலட்சம் வழங்கிவிட்டோம்; இன்னுமொரு கோப்பில், கிறிஸ்துமஸ் விழாவிற்கு ரூ.25 இலட்சம் வழங்கிவிட்டோம்; மற்றுமொரு கோப்பில், குடியரசு தினம் கொண்டாடுவதற்கு ரூ.20 இலட்சம் வழங்கிவிட்டோம்; பிறிதொரு கோப்பில் புது furniture வாங்குவதற்கு பணம் வழங்கிவிட்டோம்; கூடுதல் OSD–க்கு மாதத்திற்கு ரூ.70,000/– வழங்கிவிட்டோம்; கூடுதல் உணவு தயாரிப்பாளர் மற்றும் உதவியாளருக்கு மாதத்திற்கு ரூ.20,000/– வழங்கிவிட்டோம்; பல நீதிபதிகள் பதவியேற்பு விழாவிற்கு ரூ.4 இலட்சம், ரூ.5 இலட்சம் என அனைத்து நிதிகளையும் வழங்கிவிட்டோம். மாண்புமிகு ஆளுநர் அவர்கள், எந்த வகையிலும் நம்மை குறை சொல்கிற அளவிற்கு நடக்கவில்லை.

இன்னமும் நான் கூற வேண்டியது என்னவெனில், 2017–ல் நடைபெற்ற அத்தகைய கூட்டத்தின் அடிப்படையில், ஏதோ ஒரு கடிதம் நமக்கு 2018–ல் வரப்பெற்றதால், நாம்

உயர்த்தியிருக்கிறோம்; வேறு எந்த மாநிலமும் இங்கே உயர்த்தியதுபோல் உயர்த்தியது இல்லை. 2017–2018-ல் நடைபெற்ற கூட்டம், மகாராஷ்டிராவில் இருந்த 15 இலட்சம் ரூபாய் 15 இலட்சம் ரூபாயாகவே இருந்தது; அதற்குப் பிறகுதான் உயர்த்தினார்கள். உத்தரப்பிரதேசத்தில் இருந்த 30 இலட்சம் ரூபாய் 30 இலட்சம் ரூபாயாகவே இருந்து, பிறகு 50 இலட்சம் ரூபாயாக உயர்ந்து, தற்போது 1 கோடி ரூபாயாகியிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் இருந்த 15 இலட்சம் ரூபாய், தற்போது வரை 25 இலட்சம் ரூபாய்க்குள்ளாக, 15 இலட்சம் ரூபாய், 17 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய், 24 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய், 24 இலட்சம் ரூபாய் என்று 7, 8 வருடங்களாக அப்படியே இருக்கிறது. பா.ஜ.க. ஆளும் கர்நாடகாவில் 35 இலட்சம் ரூபாய், 45 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் என்று இருந்ததை குறைத்து, 30 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய் என ஆகியிருக்கிறது. அப்படியெனில், வேறு எந்த மாநிலமும், கேரளாவிலோ, மகாராஷ்டிராவிலோ, உத்தரப்பிரதேசத்திலோ, மேற்கு வங்காளத்திலோ, கர்நாடகாவிலோ இந்த அளவிற்கு அந்த discretionary fund-ம் கொடுத்ததில்லை; கூடுதல் நிதியும் கொடுத்ததில்லை.

இதையெல்லாம் தாண்டி, இந்தத் தகவல் என்னுடைய கவனத்திற்கு வந்தவுடன், நான் அதிகாரிகளிடம் பேசி, Finance Code-க்கு மீறி எந்த bill-ம் செலவு செய்யக் கூடாது என்றேன். அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; அது அவர்களுடைய உரிமை. ஆனால், நம்முடைய கடமை Finance Code-க்கு ஏற்ப, audit-ல் நமக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும்; அது நமது நிதித் துறையின் கடமையாகும். அந்த அடிப்படையில் ஏற்கெனவே 2 திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தற்போது 3-வது திருத்தத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

ஒன்று, எந்தத் துறையும் இந்த வருடம் செலவு செய்யாத பணத்தை அடுத்த வருடம் பட்ஜெட்டில் கேட்கக் கூடாது. ஏனென்றால், அவர்களுக்கு அந்த செலவுத்திறன் இல்லை என்பது normal budgeting rule ஆகும். அந்த அடிப்படையில், கடந்த ஆண்டு இருந்த 5 கோடி ரூபாயை இந்த ஆண்டு 3 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். ஏனென்றால், கடந்த ஆண்டு,

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 19

நாங்கள் பட்ஜெட் போடுகிற வரையிலும், சுமார் ரூ.2 கோடியே 67 இலட்சம்தான் செலவு செய்திருக்கிறார்கள்; அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தோம். இறுதி நாட்களில் நகர்த்துவது என்பது மிக மிகத் தவறு; அதுமட்டுமல்லாமல், தனி account-க்கு மாற்றுவதும் தவறு. நான் முதலில் discretionary grant பற்றி மட்டும் கூறினேன்; எல்லா தலைப்புகளிலும் மாற்றப்பட்டுள்ளன. அதற்கும் நான் தகவல்களைக் கொடுக்கிறேன்; வீட்டு செலவுக் கணக்கிலும்கூட 12 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட ரூ.6 கோடி டிசம்பர் 20 வரையிலும் அவர்கள் கணக்கில் மாற்றப்பட்டுள்ளது; நமக்கு audit-க்கு கணக்கு இல்லை. Secretariat-ல் 7 கோடி ரூபாயில் 5½ கோடி ரூபாய், அதாவது 80 சதவிகிதத் தொகை மாற்றப்பட்டுள்ளது; நம்மிடம் தகவல் இல்லை. புது IFHRMS system வந்த பிறகு, 9 கோடி ரூபாயில், household கணக்கில், அதாவது சம்பளமில்லாத கணக்கில் 6 கோடியே 65 இலட்சம் ரூபாய், அதாவது 75 சதவிகிதத் தொகை மாற்றப்பட்டது; நம்மிடம் கணக்கு இல்லை.

இரவு 7–15

அதேபோல், இந்த discretionary grant-ஐ சேர்த்து 12 கோடி ரூபாயில் Secretariat-ல் 5 கோடி 78 இலட்சம் ரூபாய்க்கு நமக்கு கணக்கு இல்லை. எனவே, இதையெல்லாம் தடுக்கும் வகையில் இந்த Finance Code-ல் கூடுதலாக ஒரு section இருக்கிறது. Finance code என்ன சொல்கிறதென்றால், 'such grants shall be subject to audit', அதாவது தணிக்கைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பது இந்த code-லிருக்கிற விதிமுறை. அந்த விதிமுறையில் நான், கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறைக்கு ஒரு கடிதம் எழுதி, இந்தப் பல கோடி ரூபாயை audit செய்து, CAG நம்மை வந்து audit செய்வதற்கு முன்பாக, உண்மையாகவே இந்த நிதியெல்லாம் எங்கே சென்று சேர்ந்தது என்பதை அறிய வேண்டும். ஏனென்றால், இது நம்முடைய பொறுப்பு. நாம் நிதி மேலாண்மை செய்கிறோம். ஆகையால் முதல் செயல், budget-ஐ முறையாகச் செய்திருக்கிறோம். இரண்டாவது செயல், ஒரு audit-ஐ நான் கூறியிருக்கிறேன். மூன்றாவது செயல், ஒரு கோப்பு நகர்ந்து கொண்டிருக்கிறது. ஓரிரு நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கையெழுத்து பெற்று, நிதி மேலாண்மையை எப்படி Finance code விதிமுறைகளுக்குட்பட்டு செயல்படுத்த வேண்டும்; இந்த மாதிரி தவறுகள் இனிமேல் நடக்கக் கூடாது என்பதற்காக ஒரு training

programme-க்கும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு புதிய committee வைத்து, இவற்றை எல்லா அலுவலர்களுக்கும் training கொடுத்து, என்ன விதிமுறை, எப்படி செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஏனென்றால், ஜனநாயக நாட்டில் மன்னர் என்று யாரும் கிடையாது. உதாரணத்திற்கு London-ஐ எடுத்துக்கொண்டால், அந்த நாட்டினுடைய பெயரே The United Kingdom of Great Britain and Northern Ireland. அங்கே பாராளுமன்றத்தில் மன்னருக்கு நிதியொதுக்குகிறார்கள். அதற்கு பெயர் Sovereign Grant. அதாவது மன்னருக்காக கொடுக்கிற நிதி. அதை மன்னர் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஏனென்றால் அது அந்த மாதிரி நாடு. ஆனால், நம்முடையது democratic country, ஜனநாயக நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது ஜனநாயக நாட்டில் எந்த விதிமுறையில் நிதி ஒதுக்கப்படுகிறதோ, அந்த விதிமுறையில் மட்டும்தான் செலவு செய்ய வேண்டும். அதை உறுதிப்படுத்த வேண்டியது நிதித் துறையினுடைய கடமை என்பதனால், நாங்கள் எங்கள் கடமையைச் சரியாகச் செய்வதற்கு பல சிறப்பு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள் இந்த விளக்கத்தைக் கேட்ட மாதிரி தெரியவில்லை. இந்த subject-ஐ நாம் ஏற்கெனவே பேசியிருக்கிறோம். நானும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது, அட்சய பாத்ரா திட்டம் என்பது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்லி, அன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்த fund, subject எல்லாம் உங்கள் Finance Department பற்றியது; நீங்கள் கேட்கலாம். அவையெல்லாம் பிரச்சினையில்லை. ஆனால், அன்றைக்கு இந்தத் திட்டத்தை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் துவக்கி வைத்தார்கள்; உணவு வழங்கப்பட்டது. Secretary, Commissioner, நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன். எல்லோரும்

இருந்தோம். என்னென்ன ward என்று அன்றைக்கு mention செய்தேன். இரண்டு இடங்களில் சமையற்கூடம் கேட்டார்கள். அதற்கு இடம் கொடுத்தோம். அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தை இன்னும் எல்லா பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துங்கள் என்றுதான் அன்றைக்குக் கேட்டேன். அதனை கோரிக்கையாகத்தான் அன்றைக்கு நாங்கள் வைத்தோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நீங்கள் Finance சம்பந்தப்பட்ட எதை வேண்டுமானாலும் கவர்னர் மாளிகையில் கேளுங்கள். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. அந்தத் திட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்தது—கவர்னர் இருந்தார்—அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தைப் புதிதாக ஆரம்பித்தார்கள்; வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் உங்களுடைய திட்டத்தைப் பற்றி குறையே சொல்லவில்லை. அந்த நிதி பரிமாற்றத்தைப் பற்றித்தான் சொன்னார்கள். அதுவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சருடைய எந்த கையெழுத்தும் இல்லாமல் ஒரு Finance Secretary போட்டு அனுப்பியதைத்தான் இவ்வளவு நேரமாக அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்களே தவிர, உங்கள் கவனத்திற்கே வராமல் அப்படி ஒரு file போனது தவறு என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உங்களுடைய திட்டத்தைக் குறை சொல்லவில்லை. Finance–ல் ஏற்பட்டிருக்கிற குளறுபடியைத்தான் விளக்கியிருக்கிறார். இது பல்வேறு சந்தேகங்களைக் கிளப்புகிறது. இது மாதிரி இவரே clean ஆக பிடித்திருக்கிறார். இது கவர்னர் அல்ல, யாராக இருந்தாலும், ஆண்டவனாக இருந்தாலும், தவறு செய்தால் அதற்குரிய தண்டனையை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இல்லையென்றால், rectify செய்ய வேண்டும். அதைத்தான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 19]

இரவு 7–20

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்சய பாத்ரா பற்றி நான் கூறுவது ஒரே ஒரு கருத்துதான். அதாவது, அன்றைக்கு இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று திறந்து வைத்தார் என்ற ஆதாரம் ஊர் பூராகவும் இருக்கிறது; அதை நான் மறுக்கவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்தத் திட்டத்தை ஒரு NGO ஆரம்பிக்கின்றது. அரசு கொள்கை அடிப்படையில் கோப்பை நகர்த்தி, அரசு நிதியை வழங்கி, அது நடைபெற்றிருந்தால் அது அரசினுடைய செயல் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்கு எந்த ஓர் ஆதரவு, எந்த ஒரு input இல்லாத, கவர்னருக்கு discretionary ஆக நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்ளலாம் என்று கொடுத்த நிதியை, அந்த ஆளுநர் அந்த நிறுவனத்திற்கு அதுவும் அன்றைக்கு transfer செய்யவில்லை. இப்போது தெரிய வருகிறது. அவர் Bank Account-ல் போட்டுவிட்டார். அப்போது ஆளுநர் ஒரு முடிவு எடுத்ததற்கு, அவருக்கு வழங்கப்பட்ட நிதியில் முடிவு எடுத்ததற்கு, அது அரசினுடைய கொள்கை திட்டமா, இல்லையா என்றுதான் நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். அதாவது, அரசு திட்டமிட்டிருந்தால் அது அரசினுடைய திட்டம். ஆளுநர் அவராக ஒரு முடிவு எடுத்து, திறப்பு விழாவிற்கு முதலமைச்சர் சென்றால் அது அரசினுடைய திட்டமா, இல்லையா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்சய பாத்ரா என்ற ஓர் அமைப்பு, இந்த மாதிரி திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சில உதவிகளைக் கேட்டது. இடம் வேண்டுமென்று கேட்டார்கள், ஒருங்கிணைந்த சமையற்கூடம் கேட்டார்கள். இது மட்டும்தான் நம்மிடம் கேட்டார்கள். அந்தத் திட்டத்தை வந்து சொன்னவுடன், உடனே நல்ல திட்டம் என்று சொல்லி, எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், எங்கள் துறைக்கு உத்தரவு போட்டு இடங்களையெல்லாம் கொடுத்தோம். இதுதான் எங்களிடம் கேட்டார்கள். இந்த மாதிரி ஒரு திட்டத்தை ஆரம்பிக்கிறோம் என்றுதான் சொன்னார்கள். அதை நாங்களும் சொல்லவில்லை. நீங்கள் சொன்னதுபோல்,

நாங்களும் அந்த மாதிரி அரசு நிதியைக் கொடுத்து நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடத்திற்கும் 55 விதியில் கொடுத்திருக்கிறார்கள் டாக்டர் எழிலன் என்று சொல்லி, 22 ground மாநகராட்சி இடத்தை கொடுத்திருக்கிறது. அதை திரும்பித் தாருங்கள் என்று சொல்லி அதுவும் இருக்கிறது. அங்கு இன்னும் பணியே செய்யவில்லை, சமையல் தொழில் அங்கு நடைபெறவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது எல்லாமே உங்களுக்கும் முழு விவரமும் தெரியாமல் நடந்திருக்கிறது என்ற விஷயத்தைத்தான் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஜனநாயக மாண்புகள் குறித்து இங்கு பேசினார். அதே ஜனநாயக மாண்போடு நம்முடைய சட்டமன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட இந்த **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அதற்கு விளக்கமெல்லாம் வந்துவிட்டது. அடுத்த subject பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் ஒன்றுமே சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசியதை repeat பண்ண வேண்டாம். எல்லாமே முடித்துவிட்டேன்.

திரு. தி. வேல்முருகன்: நான் ஒன்றுமே சொல்லவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்பதை கேட்டுவிட்டு நீக்கிக் கொள்ளுங்கள். ஆதலால், அதுபோன்ற நிலை கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன்.

இங்கு, தங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்கின்ற ஒரு கேள்வியை பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடத்தில் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தலைமைச் செயலாளர் அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர்களை, அரசு உயரதிகாரிகள் எவ்வாறு நடத்த வேண்டும்? மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எவ்வாறு நடத்த வேண்டும்? காவல் துறை அதிகாரிகள் எவ்வாறு அவர்களோடு நடந்துகொள்ள வேண்டுமென்கிற ஒரு வழிகாட்டு நெறிமுறையை வெளியிட வேண்டுமென்று நான் இந்த அவையின் மூலமாகக் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய பொதுத் (மரபு) துறை அரசாணை எண் 85-ல் அரசினுடைய protocol-ஐ வெளியிட்டிருக்கின்றது. இந்திய நாட்டின் முதல் குடிமகனில் தொடங்கி பல்வேறு மரபு சார்ந்த பதவிகளை வகிக்கின்றவர்களுக்கு என்ன protocol இருக்கிறது என்று வெளியிட்டிருக்கின்றது. அதில், நம்முடைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 21-வது இடத்தில் protocol-க்கான அனுமதியை நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலோடு பொதுத் துறை செயலாளர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார். ஆனால், இன்றைக்கு அந்தப் பட்டியலைப் பார்க்கின்றபோது பல்வேறு அரசு உயர் செயலாளர்கள், DGP, கூடுதல் DGP, தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மைச் செயலாளர், அரசுச் செயலாளர் இப்படி என்று அதில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மாடத்தில் அமர்ந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் பண்பு மிக்கவர்கள், இவர்கள் senior அதிகாரிகள். புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றால்கூட, அவர்களிடத்திலே நின்று நிதானமாக அவர்களோடு கலந்துரையாடுகிறார்கள். ஆனால், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அது வேண்டாம். அதை நீக்கிவிடுகிறேன். மற்றதைச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: ** சுட்டிக்காட்டினால் திருத்திக் கொள்வார்கள் என்றுதான் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை.

அதேபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள்; சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த அரசுக்கு நற்பெயர் ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறார்கள். அந்த ஆய்வுக் கூட்டங்களில் மக்களால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கக்கூடிய இருப்பை உறுதி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் வேண்டுகோள் வைக்கிறேன். அந்தந்தத் தொகுதிகளில், அந்தந்த மாவட்டங்களில் நடைபெறுகின்ற அரசினுடைய நலத் திட்டங்களைக் கண்காணிக்கக்கூடிய வகையில் ஒரு குழுவாக நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

இரவு 7–25

மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி என்பதே வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வரி வசூல் செய்வதற்காகப் பல்வேறு அதிகாரங்களை அவர்கள் கைக்குத் தந்து, அதில் அதிகாரம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்றுகூட மாவட்டத்தில் இருக்கிற எந்தப் பணிகளை எடுத்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கையொப்பம், மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலுக்காகக் கோப்பு காத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். அதாவது, மண்டல அளவில், zonal அதிகாரி level-ல் துறையின் அரசுச் செயலாளரைக் கொண்டு அதைக் கண்காணிக்க வேண்டுமென்றும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாக அதிலே இடம்பெற வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைத்தேன். அதற்கான பணிகளெல்லாம் நடந்தன; ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு எல்லா அதிகாரிகளையும் நான் குறை சொல்லவில்லை. இந்த ஆட்சிக்கு நற்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று இரவு, பகல் பாராமல் உழைக்கின்ற நேர்மையான மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், ஐ.பி.எஸ். அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், ** என்பதைத்தான் வலியோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன்? ** அதை நிவர்த்தி செய்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்களுக்கெல்லாம் அந்த நிலை இல்லை. மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர், நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. தி. வேல்முருகன்: சரி, பேரவைத் தலைவர் அவர்களே, நான் இருப்பதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: ** ஏதோ ஒன்றிரண்டு பேர்தான் அப்படியிருக்கிறார்கள் என்று நான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதோ குறிப்பிட்டு ஒரு விஷயத்தில் இப்படி நடந்திருக்கிறது என்று நீங்கள் சொன்னால், அதை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்வேன்.

திரு. தி. வேல்முருகன்: சரி, பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்கிற மாதிரி பொத்தாம் பொதுவாக நீங்கள் சொன்னது not good. மாண்புமிகு உறுப்பினர் மற்றும் நான் சொன்னது உட்பட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லா ** சொல்லவில்லை. ஏதோ அங்கொன்று, இங்கொன்று இருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதை மட்டும்தான் நான் ஏற்றுக்கொள்வேன். மற்றவற்றையெல்லாம் பொத்தாம் பொதுவாக இங்கே பதிவு செய்தால் அது நன்றாக இருக்காது. (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: சரி. இது சட்டமன்றம். பேச வேண்டிய இடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி பேசுங்கள். நன்றாகப் பேசுங்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. தி. வேல்முருகன்: பேச வேண்டிய இடம். அதற்காக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளம்; இன்றைக்கு டெல்லியில் கிட்டத்தட்ட 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், தெலுங்கானாவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், மத்திய பிரதேசத்தில் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், உத்தரபிரதேசத்தில் 1 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாயும், பீகாரில் 1 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயும், மகாராஷ்டிராவில் 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும் என பல்வேறு மாநிலங்களில் கொடுக்கிறார்கள். ஏனைய மாநிலங்களில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் என்கிற அந்த அரசினுடைய emblem பொருத்தப்பட்ட வாகனமும், அவர்களுக்கான உதவியாளர்களும், அவர்களுக்கான பணியாளர்களும் அந்த அரசுகளால் வழங்கப்படுகின்றன.

இங்கே ஒரு கொடுமை என்னவென்று சொன்னால், நான் நம்முடைய ஆட்சியில் சொல்லவில்லை. தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியாளர்கள் இங்கு வருகிறார்கள். அவர்கள் அவைக்குள்ளே வருவதற்கு அவ்வளவு சிரமப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது தொகுதி சார்ந்த பிரச்சினைகள் குறித்து, கேள்வி நேரத்தின்போது அல்லது விவாதத்தில் பேசுகின்றபோது, குறிப்புகள் வேண்டுமென்று சொன்னால், அவர்களை நாங்கள் அழைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அவர்கள் அவைக்கு உள்ளே வர அனுமதி மறுக்கப்படுகிறது. அவர்களுடைய Identity Card-ல் photo ஒட்டப்பட்டு, PA to சட்டமன்ற உறுப்பினர் என்று ஒரு card கடந்த கால கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்டது. தற்போது, வெறும் அவர்களுடைய முகவரியை மட்டும் போட்டு ஒரு பேப்பரில் Identity Card கொடுக்கிறார்கள். அவர்கள் உட்காருவதற்கும் இங்கு இடமில்லை. எனவே, அவர்கள் உட்காருவதற்கு ஓர் இடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்.

நாங்கள் இங்கிருந்து போகின்ற வழியில் எங்கு பார்த்தாலும் சபைக் காவலர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள், நிற்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இங்கு அமருவதற்கும், பேரவைக் காவலர்கள் பணியிலிருந்து relieve ஆகின்ற காவலர்கள்

அமருவதற்கும், நாங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று உட்கார்ந்து பேசுவதற்குமான ஓர் இடவசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதேபோன்று, உதயசூரியன் சின்னத்தில் நின்ற நான், பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அண்ணன் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் போன்றவர்கள், இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து, அமர்வதற்கு முன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுப்பதற்கோ, இல்லையென்றால் அன்றைய Agenda குறித்து ஆய்வு செய்வதற்கோ எங்களுக்கு ஓர் அறை வேண்டுமென்ற வேண்டுகோளை கடந்த கூட்டத் தொடரிலே வைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் அறையில் கொடுக்கிறீர்களே!

திரு. தி. வேல்முருகன்: அதுவும் வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் ரூ.25,000/– வழங்கப்படுகிறது. அதை தயவுசெய்து ரூ.50,000/– ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதேமாதிரி மருத்துவச் செலவு. இப்போது எல்லாவிதமான நோய்களும் வருகின்றன. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு heart பிரச்சினை, kidney பிரச்சினை, சர்க்கரை நோய் என்று பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, மாதாமாதம் ரூ.10,000/– அவர்களுக்கு வழங்கி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும். அதேபோன்று அவர்களும் வந்து செல்வதற்கு ஏற்ற வகையில், old MLA hostel–ல் ஓர் அலுவலகம் கேட்கிறார்கள். அதையும் வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TNPSC குறித்து ஒரு சட்டம் கொண்டுவந்தபோது, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சட்டத் திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்தார்கள். அதில், தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர்கள், தமிழர்களுக்கு அந்த வேலைவாய்ப்பு

கிடைக்கப்பெற வேண்டுமென்ற அடிப்படையில், ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னேன். அப்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த Bill–ஐ இப்போது நீங்கள் pass செய்யுங்கள். எதிர்வரும் காலத்தில் கண்டிப்பாக நான் அதைக் கொண்டுவருகிறேன் என்று சொன்னார். அதை நீங்கள் கண்டிப்பாகக் கொண்டுவர வேண்டும். அப்படியில்லையென்று சொன்னால், வேற்று மாநிலத்தவர்களும் இங்கு வந்து தங்கி, address proof–வோடு அந்தத் தேர்வினை எழுதி, 40 மதிப்பெண்களைப் பெற்று, தமிழ்நாட்டினுடைய அரசு உயர் பதவிகளைக் கைப்பற்றிக்கொள்கிற ஓர் அபாயம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். அதற்குரிய வழிவகைகளை காண வேண்டுமென்கிற வேண்டுகோளை முன்வைக்கின்றேன். அதேபோல, ஒன்றிய அரசு பதவிகளிலே சமீபத்தில் Central Industrial Security Force (CISF)–லும், துணை இராணுவத்திற்கும் ஆள் எடுக்கின்றார்கள்.

இரவு 7–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: அப்படி ஆள் எடுக்கின்றபோது தமிழில் apply செய்வதற்குக்கூட வாய்ப்புகள் இல்லை. கடந்த மாதம் போஸ்டல் துறையில் ஆள் எடுத்தார்கள். தமிழர்கள் யாரும் உள்ளே சென்று apply செய்ய முடியவில்லை. ஆக, இதுபோன்ற நிலை இருக்கக் கூடாது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த மண்ணின் மக்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்கின்ற வகையில் ஒன்றிய அரசின் அனைத்துப் பதவிகளிலும் தமிழர்களுக்கு வேலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் என்ற Emblem பொறித்த அரசு வாகனம் ஒன்றை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

குறித்து நான் பேச வருகிறேன். நம்முடைய அரசு பல்வேறு துறை தலைப்புகளின்கீழ், பல நூறு கோடி ரூபாயை ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் செலவிடுகிறது. அப்படி, பல்வேறு இனங்களின்கீழ் செலவிடுகின்ற அந்தத் தொகையை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கென்று குறைந்தபட்சம் ரூபாய் 10 கோடி அல்லது ரூபாய் 25 கோடியை ஒதுக்கி, அதை அந்தத் தொகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றவகையில், அவர்கள் பரிந்துரை செய்கின்றபோது, அந்தப் பணம் வேறு இனங்களில் செலவிடுவதுபோல், சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையோடு செலவிடப்படுகிறது. இதில் ஒரு ரூபாயைக்கூட எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் தனது வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகக்கூடிய வாய்ப்பில்லை. வெறும் பரிந்துரை செய்கின்ற அதிகாரம் மட்டுமேதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அந்தப் பரிந்துரை செய்கின்ற அதிகாரத்தை ஏன் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் வழங்கக் கூடாது என்கிற வேண்டுகோளை நான் முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நல்ல ஆலோசனை. இன்னும் மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டும். மணி 7.30 ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை போதும், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள். (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) இன்னும் இருக்கிறது. நாளைக்கு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா முன்வரிசை தலைவர்களுக்கும் 20-லிருந்து 25 நிமிடங்கள் கொடுக்கிறீர்கள். எனக்கு சரியாக 10 நிமிடங்களிலேயே bell அடித்து முடிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரியாக 32 நிமிடங்கள் ஆகின்றன.

திரு. தி. வேல்முருகன்: இல்லை, இல்லை 11 நிமிடங்கள்தான் ஆகின்றன. நான் தப்பாக எதையுமே பேசவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தப்பாக பேசினீர்கள் என்று நான் இதுவரை சொல்லவில்லை. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய மகத்தான வரலாற்றுச் சாதனை படைக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தத் தவறுகளை, அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கின்ற பிரச்சினைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கின்ற காரணத்தினால் இவற்றைக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேனே தவிர, ஒருபோதும் நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்களின் அரசுக்கும், அவரின் புகழுக்கும் களங்கம் விளைவிக்கக்கூடிய எதையும் பதிவு செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நல்ல ஆலோசனை. தயவு செய்து நன்றி, சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு, அரசு உயர் துறை செயலாளர்களோடு, ஏனைய அரசுத் துறை தலைவர்களோடு இணக்கமாக*—Bureaucracy *என்று சொல்லக்கூடிய* I.A.S., I.P.S. *அதிகாரிகள் போன்றவர்களும்—சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்துதான் மக்களுக்கான திட்டங்களைக் கொண்டுபோய் சேர்க்க முடியும்.* (மணியடிக்கப்பெற்றது) *இருவரையும் ஒரே ஏறில் பூட்டிய—ஆக,* Bureaucracy *ஒரு பக்கமும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு பக்கமும் பணியாற்ற முடியாது. ஆகையால், தயவுசெய்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ஏனைய கூட்டங்களில் அவசியம் கலந்துகொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அழைக்கப்பட வேண்டும்.* (மணியடிக்கப்பெற்றது) *அவர்களை சந்திக்க நேரம் கிடைக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், பதிவு செய்து விட்டீர்கள்.*

2023 ஏப்ரல் 19]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள். இந்த முன்வரிசை தலைவர்களுக்கான car pass, சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குள் தொலைக்காட்சி, பத்திரிகை நிருபர்களுக்கான அனுமதி போன்ற சின்ன, சின்ன விஷயங்களெல்லாம் கோரிக்கைகளாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தந்து இந்தியாவிலேயே சமூகநீதிக்காக சமரசமற்றுப் போராடுகின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புப் புதல்வரே, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களை தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள். (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) நன்றி என்று மட்டும் சொல்லி முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்விழந்த மக்கள் தங்கள் காலத்தில் வாழ்வுரிமை கிடைக்கும் என்ற மிகப்பெரிய எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

***திரு. பொன். ஜெயசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாமானியனும் பெருமைக்குரிய இந்தப் பேரவையில் அமருவதற்கான வாய்ப்பை நான் பெறுவதற்குக் காரணமாக அமைந்த என் இயக்கத்தினுடைய நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்தாலும் எங்கள் இதயங்களில் வாழும் தன்னிகரற்ற அரசியல் ஆளுமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7–35

சிலுவம்பாளையம் என்ற சிற்றூரில் கிளைக் கழகச் செயலாளராக தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, தமிழகத்தில் உள்ள ஏழையெளிய மக்களின் உணர்வுகளோடும்,

உள்ளத்தோடும் இரண்டறக் கலந்து, ஒரு தொண்டனும் உழைப்பால் உயர்ந்து தலைவனாகலாம், முதல்வராகலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஜனநாயகத்தின் உயர்ந்த விழுமியங்களை இந்த உலகுக்கு உணர்த்தும் வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை அலங்கரிக்கும் ஆளுமை, அரசியல் சாணக்கியர், எளியவர்களின் தலைவர், தனது நான்கு ஆண்டு கால ஆட்சியில் எண்ணற்ற பல சாதனைத் திட்டங்களை, எளிய மக்கள் பயன் பெறத்தக்க வகையில் உருவாக்கியிருந்தாலும் ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கு எட்டாக் கனியாக இருந்த, மருத்துவக் கல்வியை அரசு பள்ளிகளில் பயிலும் ஏழை குடிசை வீட்டு மாணவனும் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் கடவுளாக காட்சி தரும் வறியவர்களின் தலைவர், எதிர்காலத்தில் இந்த நாடும், மக்களும் விழிகளை அகல விரித்து, புருவங்களை உயர்த்தி வியக்கத்தக்க வகையில் அவதாரம் எடுக்க இருக்கும் என் தலைவர் கழகப் பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு மண்டலமாம் கோவை, எங்கள் இயக்கத்திற்கு உவந்தளித்த கொடை, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மனசாட்சி, எளியவனான நானும் இந்த அவையிலே அமர்வதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து, இன்றைய மானியக் கோரிக்கைகளில் எனது கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பளித்த, எனது அரசியல் வழிக்காட்டி, கழகத் தலைமை நிலையச் செயலாளர், எதிர்க்கட்சிக் கொறடா மாண்புமிகு அண்ணன் எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், நம்பிக்கையோடு இந்த வாய்ப்பினை வழங்கிய, நான் வணங்கி நேசிக்கும், எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதி வாழ் பொதுமக்கள் அனைவருக்கும், எனது கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எனது இதயம் கனிந்த நன்றிகளைப் பணிவன்போடு சமர்ப்பிக்கின்றேன்.

The Elephant Whisperers என்ற ஆவண குறும்படத்தில் நடித்ததற்காக, திரைப்படத் துறையின் உயரிய விருதான Oscar விருதினைப் பெற்று, பாரத தேசத்திற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்த, எனது தொகுதியான கூடலூர், தெப்பக்காடு பகுதியில் வசித்துவரும், பழங்குடியின தம்பதிகள் Bellie, Bomman மற்றும் அந்தக் குறும்படத்தை உருவாக்கிய Kartiki Gonsalves

அவர்களுக்கும் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் பெருமைமிகு இந்தப் பேரவையின் வாயிலாக எனது வாழ்த்துகளைப் பதிவு செய்கின்றேன். அதைப்போல அரசமைப்புச் சட்டத்தில் எளியவர்கள், எல்லா பதவிகளிலும் பயன்பெற வேண்டும், இடம்பெற வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு, அரசமைப்பிலேயே அதற்கான வழிவகைகளை அமைத்துக் கொடுத்த, இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய பேராசான், சிற்பி, அண்ணல் அம்பேத்கர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கூடலூர் தொகுதியில் பல்லாண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினை. கூடலூர் ஜென்மம் நில ஒழிப்பு சட்டம், அதாவது, The Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, *1969-க்குட்பட்ட தீர்வு காணப்படாமல் இருக்கும் சுமார் 34,986 ஏக்கர் நிலப் பிரச்சினை. அவற்றைப் பெருந்தோட்ட நிறுவனங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழ்நாடு அரசிற்கு சம்பந்தமில்லாத ஜென்மிகள் என்னும் கேரள நிலக்கிழார்களுடன் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை ஒப்பந்தம் முடிவுற்ற பின்பும், சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் வசம், வைத்துக்கொண்டு, அனுபவித்துவரும், சுமார் 23,553.37 ஏக்கர் நிலம் தொடர்பாக, தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து, என்னுடைய கருத்தை இந்த மாமன்றத்தில் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜென்மம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நிலங்களை அரசு எடுத்துக்கொண்டதற்கு எதிராகவும், தங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தியும், 9 நிறுவனங்களுக்கு, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டுவிட்ட நிலையில், கடந்த 23–9–1976 ஆம் ஆண்டு, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், மேற்கண்ட தோட்ட அதிபர்கள் அரசிற்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில் இவ்வாறு கருத்துகளைத் தனது தீர்ப்பில் பதிவு செய்துள்ளது.

அதாவது, "The Janmam Act has been enacted to acquire the rights of Janmis in Janmam Estates in Gudalur Taluk and to introduce Ryotwari settlement, whereas the enactment of the Ceiling Act has been done with the view to fix a ceiling on the

land holdings and to distribute the excess land to the landless and agricultural population" எனத் தெரிவித்துள்ளது. எனவே, இச்சட்டத்தினை இயற்றிய தமிழக அரசின் நோக்கமும் நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயல்படுத்தி, இச்சட்டத்தின்கீழ் தமிழக அரசின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்ட நிலம் முழுவதையும், வன நிலமாக மாற்றுவது மட்டுமல்ல, மாறாக அங்கு விவசாயம் செய்து வாழும் விவசாயிகளுக்கு அந்த நிலத்தின் மீதான உரிமையை உறுதி செய்து, அவர்களின் வாழ்வையும் வளமாக்குவதுதான் என்ற புரிதல் அரசிற்கும், அதிகாரிகளுக்கும் இருந்தால், வனம் எனும் பெரும் செல்வமும், அங்கு வாழும் மக்களின் இன்னலும், ஒரு சேர தீர்க்கப்பட்டுவிடும். எனவே, அரசு மனது வைத்தால் இப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வினை வழங்க முடியும் என்பதனை பணிவோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இரவு 7-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிலப் பிரச்சினைத் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழு, அதாவது The Empowered Committee constituted by the Supreme Court தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளது. "The Government of Tamil Nadu has not completed the survey and demarcation of the Janmam lands vested with the State and does not have a complete set of cadastral map of the vested Janmam lands" எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும், இந்த நிலம் தொடர்பாக, தமிழக அரசு அளவீடு செய்து வன எல்லைகளை நிர்ணயிக்காத வரையில், Settlement process cannot proceed before the forests' boundaries are first demarcated எனவும் பரிந்துரைத்துள்ளது. எனவே, அரசு விரைவாக இந்தப் பிரிவு 17 வகை நிலங்களை அளவீடு செய்து நீதிமன்றத்தில் தெரிவித்தால், நீதிமன்றம் விதித்துள்ள அனைத்துத் தடைகளும் நீங்கிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு அரசுக்கு ஓர் உன்னதமான நோக்கம் இருக்கின்றது. என்னைப் பொறுத்தளவில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், தனியார் வசம் இருந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையெல்லாம் எடுத்து, அதனை அங்கிருக்கக்கூடிய வறிய மக்களுக்கு, அங்கே விவசாயம் செய்து வாழக்கூடிய

மக்களுக்கு அளிப்பது என்பதுதான். ஆனால், நானறிந்த வகையில் உலகத்திலேயே ஒரு சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கத்திற்கு மாறாக, அந்த மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருப்பதாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜென்மம் ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதன் வாயிலாக, இந்நிலங்களின்மீதான அரசின் ஆளுகை எவ்விதக் கேள்விகளுக்கும் அப்பாற்பட்டு அரசமைப்புச் சட்டத்தில் வலுவாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு இந்நிலத்தின்மீது எடுக்கும் கொள்கை முடிவில் யாரும் தலையிட முடியாது. அப்படிப்பட்ட நிலையிருந்தும், இயற்கை நமக்கு வழங்கிய ஒரு பெரும் செல்வம் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றது. ஓர் எடுத்துக்காட்டை மட்டும் இந்த அவையிலே பதிவு செய்வதன் வாயிலாக, அதன் தீவிரத்தையும், அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

எங்கள் பகுதியிலிருக்கும் Manjushree Plantations Limited எனும் தனியார் தோட்ட நிறுவனத்திடம் மட்டும் சுமார் 19,576.52 ஏக்கர் பிரிவு 17 வகை நிலம் கைவசம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜென்ம ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, இந்த ஒட்டுமொத்த நிலத்தின் உரிமையும் தமிழக அரசின் கைவசம் எடுக்கப்பட்டு, அந்தச் சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், ஜென்ம ஒழிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தத் தனியார் நிறுவனம் அந்த ஜென்மிகளிடம் ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறப்படும் ஒரு குத்தகை ஒப்பந்தத்தைக் காட்டி, அதன்மீது உரிமை கோருகின்றது. அவ்வாறு அவர்கள் ஜென்மிகளிடம் போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, அவர்களிடம் இருக்க வேண்டிய நிலத்தின் அளவு சுமார் 3,677 ஏக்கர். ஆனால், அவர்களின் அனுபவத்தில் வைத்துக்கொண்டு பட்டா கோரும் நிலத்தின் அளவு சுமார் 19,516 ஏக்கர். இந்த கோருரிமைக்கு எதிராக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என அவர்கள் தட்டிய கதவுகளெல்லாம் மூடப்பட்டு, இதில் அரசுதான் முடிவெடுக்க வேண்டுமெனத் தீர்ப்புகள் சொல்லப்பட்ட பின்பும், அரசு இதில்

முடிவெடுக்காமல் தயங்குவதற்கு என்ன காரணம் என்பது மர்மமாகவே உள்ளது. அதைவிட ஆச்சர்யம் ஆரம்பத்தில் 19,576.52 ஏக்கர் நிலத்திற்கு உரிமை கோரிய அவர்கள், பின்னர் தங்களுக்கு 6,148 ஏக்கர் நிலத்தை மட்டும் கொடுத்தால் போதுமென தங்களுடைய கோருரிமையைத் தாங்களாகச் சுருக்கிக்கொண்டு, உச்ச நீதிமன்றத்திலேயே இது பதிவு செய்யப்பட்டபோதும், அரசு இதில் முடிவெடுக்காமல் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிர்ச்சியளிக்கத்தக்க தகவல் என்னவென்று சொன்னால், சுதந்திரம் பெறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ஏக்கருக்கு 10 பைசா மற்றும் 33 பைசாதான் என ஒட்டுமொத்த நிலத்திற்கும் அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ஆண்டுக்கு ரூ.2,043.30 மட்டுமே. அதுமட்டுமின்றி, இந்த நிலங்களின் மீதான உரிமை முற்றிலும் தமிழக அரசுக்கு மாறிவிட்டபோதும், கடந்த 1976 ஆம் ஆண்டே காலாவதியாகிவிட்ட ஒரு குத்தகை ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு, இவர்கள் அரசாங்கத்தை ஆட்டிப் படைத்து வருகின்றனர். ஏக்கருக்கு 10 பைசா மற்றும் 33 பைசாவைக்கூட அரசுக்குச் செலுத்தாமல் அரசின் செல்வத்தை இவர்கள் அனுபவித்து வருகின்றனர். கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இவர்களிடமிருந்து சொத்து வரி வசூலிப்பதில்லை; குத்தகைத் தொகையும் வசூலிப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

இரவு 7–45

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையைப் பற்றி ஏற்கெனவே, கலைவாணர் அரங்கத்தில் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெற்றபொழுது கூறியிருக்கிறார்கள். நான் அன்றைக்கே, இது சம்பந்தமாக உங்களிடம் என்னென்ன தகவல்கள் இருக்கின்றனவோ, எங்களிடம் அந்தத் தகவல்களைக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், எனக்குத் தெரிந்து இந்த ஆட்சி வந்த பிறகு இருக்கிற பிரச்சினையில்லை. இது பல ஆண்டுகளாக, அவர்களும் ஆட்சியில் இருந்தபோதும் இருந்த

பிரச்சினை. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். அதனை, அடிப்படையில் சீர்திருத்தம் செய்வதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு இணைந்து Land Lease Policy, அதாவது தமிழ்நாடு நிலத்தை எந்த வகையில் குத்தகை எடுக்க வேண்டும்; எந்தக் காரணத்திற்காக, யாருக்காக சலுகை கொடுக்கப்பட வேண்டும்; யாருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்; எத்தனை ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற complete Policy-ஐ தற்போது கையில் எடுத்திருக்கிறோம். நீங்கள் சொல்வதுபோன்று நீதிமன்றத்தில் நாங்கள் செய்ய மாட்டோம் நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று என்றைக்குமே சொல்லமாட்டார்கள். அரசாங்கத்தின் செயல்பாடுகளில், நீதிமன்றத்தில் அதிக அளவில் திணிப்பு வருகின்றது. யாரெல்லாம் மாண்புமிகு அமைச்சர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இது தெரியும். ஆனாலும், நீங்கள் தகவல் அளித்தீர்களானால், எந்தவகையில் அதனை எவ்வளவு விரைவில் சீர்திருத்தம் செய்ய முடியுமோ-- ஏனென்றால் இந்தப் பிரச்சினை இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டதல்ல, 10 ஆண்டுகள் 20 ஆண்டுகளாக இருக்கின்ற பிரச்சினை. ஆனாலும், இந்த policy-ஐ உருவாக்குகின்ற சூழ்நிலையில், அதனை எந்தவகையில் திருத்திக்கொடுக்கலாம் என்று பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அதனை எழுதிக் கொடுத்துவிடுங்கள்; அரசு பார்த்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Supreme Court-ல் இந்த வழக்கு 2009 ஆம் ஆண்டில் வந்தது. வருவாய்த் துறையிடம் அந்த நிலத்தை ஒப்படைப்பு செய்து, நீங்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டது. அதற்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கும் நேரத்தில், 2011 ஆம் ஆண்டில் ஆட்சி மாறிவிட்டது. இவர்கள் இருந்த 10 ஆண்டுக் காலத்தில் எதுவுமே செய்யாமல் சும்மா இருந்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் தற்போது இது குறித்துக் கேட்கிறார்கள். இப்போதும் அந்தத் தொகுதியில்தான் இருக்கிறார், ஆனால் எந்தப் பணியும் மேற்கொள்ளவில்லை. தற்போது இது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் காலத்தில் கேட்கிறார்கள். சென்ற வருடம் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு வந்து, அங்கிருந்து, இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் நமது அரசைக் குற்றம் கூறவில்லை. இருக்கிற விஷயத்தைதான் கூறினார்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் 10 ஆண்டுக் காலம் என்று. 10 ஆண்டுக் காலம் நீதிமன்றத்தில் இருந்தது. தேர்தல் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அவர் Section 17 subject குறித்து அந்தக் குத்தகை நிலம் குறித்துதான் பேசுகிறார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இது நன்றாகவே தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகக் கோரிக்கைதான் வைக்கிறார்கள். அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. Srilanka-விலிருந்து வந்தவர்களுக்கு அப்போது இயற்றப்பட்ட சட்டம்தான் அது. அதனை கோரிக்கையாகத்தான் வைக்கிறார்கள். 10 ஆண்டு காலம் செய்யாமல் இல்லை. முயற்சிகள் செய்துகொண்டுதான் இருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இதனை குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு பதில்தான் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அது வரலாறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள் அனைத்தையும் அழகாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதில் ஒன்றுமில்லை. (குறுக்கீடு) இதில் என்ன குறை இருக்கிறது. 2009 ஆம் ஆண்டில் Supreme Court Judgement வரப்பெற்று ஆட்சி மாற்றம் வந்தது; நீங்களும் செய்யவில்லை என்று கூறினார்கள். (குறுக்கீடு) திரு. பொன். ஜெயசீலன், நீங்கள் உரையை முடிக்கிறீர்களா அல்லது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதிலுரையாற்ற அழைக்கட்டுமா? மாண்புமிகு உறுப்பினர், திரு. பொன். ஜெயசீலன் (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர், திரு. பொன். ஜெயசீலன் உங்களுக்கு 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன. நன்றி சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போகவில்லை. இன்றைக்கு இருக்கிறார்கள். விரைவில் உரையை முடியுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாய் ஈட்டக்கூடிய ஒரு பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது முடிந்துபோயிற்று. அதற்குப் பதில் சொல்லியாயிற்று. வேறு* subject *இருந்தால் சொல்லுங்கள்,*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 19-3-2018 அன்று இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்வினை எட்ட வேண்டுமென்பதற்காக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அந்த பொருள் குறித்து தற்போது மேலாண்மை செய்து முடிவு செய்யப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வேறு பொருள் இருந்தால் பேசுங்கள். அந்த* matter over. *நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நிலுவை என்பதை மட்டும் சொல்லிவிடுகிறேன். குழு அமைத்தபடி, இவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை மட்டும் ரூ.634,39,87,063 ஆகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த நிறுவனம் கட்ட வேண்டும். பதிவாகிவிட்டது. பதிலுரை, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும் (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியின் ஒட்டுமொத்தப் பிரச்சினை இது. நீங்கள் அதனைத் தீர்த்துவிட்டீர்களானால் எங்கள் தொகுதியின் ஒட்டுமொத்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடும். எனவே, 3 நிமிடங்கள் மட்டும் அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதை விளையாட்டிற்காக இந்த மானியத்தின்மீது பேச வரவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு பேசுங்கள். Chorus–ஆக சத்தம் போடக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் இருக்கிறார்கள், மாண்புமிகு கொறடா அவர்கள் இருக்கிறார்கள். மேலும், இரண்டு நிமிடங்கள் வாய்ப்பு கொடுங்கள் என்றால் கொடுப்பேன். மொத்தமாக சத்தம் போட்டு, உங்கள் சத்தத்திற்குப் பயந்து நான் வாய்ப்புத் தருவது போன்று செய்வது நாகரிகமாகத் தெரியவில்லை. சரியாக 3 நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக நினைக்க வேண்டாம். இது உணர்வுப்பூர்வமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் subject–க்கு வாருங்கள். 7–52 மணிக்கு முடித்துவிட வேண்டும். முடியுங்கள்.

இரவு 7–50

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்னும் நிறுவனம் 1969 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது. இந்தத் தேயிலைத் தோட்டங்களில் கடந்த காலங்களிலும் இடங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 3–10–2022 அன்றும் சுமார் 5,317 ஏக்கர் நிலங்களை வனத் துறைக்கு மீண்டும் ஒப்படைத்திருக்கிறார்கள். இந்தத் தோட்டத்தை உருவாக்குவதற்காகத் தொடர்ந்து பல கோடி ரூபாய் அரசு நிதி

செலவழிக்கப்பட்டிருக்கிறது. பல்லாண்டு காலம் மக்கள் உழைத்திருக்கின்றார்கள். எங்கள் ஊரைப் பொறுத்தளவிலே, தேயிலையைத் தவிர, குறுமிளகு, காபி, avocado போன்ற பல்வேறு மாற்றுப் பயிர்கள் சிறப்பாக வளரக்கூடிய சூழ்நிலையில் தமிழக அரசு தேயிலைத் தோட்டக் கழக நிலங்களில் மாற்றுப் பயிராக அதனை பயிர் செய்து இலாபத்திலே நடத்துவதற்கு முன்வர வேண்டும். இல்லையென்றால், மீண்டும் வனத் துறைக்கு ஒப்படைப்பதற்கு மாறாக, அங்கு நிரந்தரத் தொழிலாளர்களாகப் பணிபுரியக்கூடிய சுமார் 2,500 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 2 ஏக்கர் வீதம் நீண்டகால குத்தகைக்குக் கொடுத்தால், அந்தக் குடும்பங்களும் நன்றாக வாழ முடியும். நிச்சயமாக இந்தத் தோட்டங்களும் பாதுகாக்கப்படும் என்ற கோரிக்கையினை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கையை இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது, civil services எனப்படும் இந்திய குடிமையியல் பணி தேர்வு, அது மட்டுமன்றி மத்திய அரசாங்கத்தினுடைய பல்வேறு தேர்வுகளில் தமிழக மாணவர்களுடைய பங்களிப்பு என்பது மிகவும் குறைந்து கவலையளிக்கத்தக்க வகையில் இருக்கின்றது. வங்கிகள், Railways போன்ற பணிகளில் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை மிக, மிகக் குறைந்துபோய் விட்டது. எனவே, தலைசிறந்த பயிற்சியாளர்களை வைத்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் தலைசிறந்த பயிற்சி மையங்களை அமைத்து, அந்தப் பணிகளிலெல்லாம் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் அமர்வதற்கு நீங்கள் வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு குறளை மட்டும் இந்த நேரத்திலே பதிவு செய்வதற்கு நான் விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற குறளை மட்டும் இந்த நேரத்திலே பதிவு செய்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். தொகுதிக் கோரிக்கைகளை அவையில் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் எந்தப் பகுதிக்கும் மகளிருக்கான இலவச கட்டணமில்லா பேருந்து இயக்கப்படுவதில்லை. அதிகப்படியாக ஏழை, எளிய விவசாய தினக் கூலிகள் வாழக்கூடிய பகுதி என்ற அடிப்படையில் இலவச கட்டணமில்லா பேருந்து சேவையை எங்கள் பகுதிக்கு நீட்டிக்க வேண்டும்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரேசன் அரிசியினை முழுமையாக பயன்படுத்தும் பகுதியாக கூடலூர் சட்டமன்றத் தொகுதி உள்ள நிலையில் அனைத்து ரேசன் அட்டைகளுக்கும் 100 சதவிகிதம் ரேசன் அரிசி ஒதுக்கீடு செய்து தந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆயிரக்கணக்கான இல்லங்களுக்கு மின் இணைப்பு வசதி இல்லாத சூழலில் மின் இணைப்பு வசதி இல்லாத இல்லங்களைக் கணக்கிட்டு அவர்தம் வீடுகளில் விளக்கேற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரேசன் கடை மூலமாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தலா ஐந்து லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும்.

பல்லாண்டுகளுக்கு முன்பாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுடைய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது அவர்களில் பெரும்பாலானோர் பொருளாதார நிலையில் ஓரளவு தன்னிறைவு அடைந்துவிட்டதால் புதிதாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் குறித்து பட்டியல் தயாரித்து அவர்கள் அரசின் திட்டங்களை எளிதாகப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

சுமார் 35 ஆயிரம் மக்கள் தொகையும், 70 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் கொண்ட நெலாக்கோட்டை ஊராட்சியினை 7 ஊராட்சிகளாகப் பிரிக்க வேண்டும் என்ற பரிந்துரை பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்றது. எனவே, அப்பகுதியில் வாழும் மக்கள் பயன்பெறும்வகையில் நெலாக்கோட்டை ஊராட்சியினை 7 ஊராட்சிகளாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுமார் 52 ஆயிரம் மக்கள் தொகையும், 104.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் கொண்ட தமிழகத்திலேயே மிகப்பெரிய

ஊராட்சியாக விளங்கும் சேரன்கோடு ஊராட்சியினை 11 ஊராட்சிகளாகப் பிரிக்க வேண்டும் என்ற பரிந்துரை பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. அதனை நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யானைகள் மற்றும் பிற வன உயிரினங்களால் தாக்கப்பட்டு உயிரிழக்கும் குடும்பங்களைச் சார்ந்த ஒருவருக்கு அரசு பணி வழங்கி அவர்களுடைய குடும்பங்கள் வாழ்ந்திட ஆவன செய்ய வேண்டும்.

வன விலங்குகளால் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழக்கும் நபர்களின் வாரிசுதாரர்களுக்கு தற்பொழுது தமிழக அரசின் வனத் துறையின் சார்பாக ரூ.5 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகின்றது. இந்தத் தொகையினை அண்டை மாநிலமான கேரளாவில் வழங்கப்படுவதுபோல ரூ.10 இலட்சமாக உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாடுகாணியில் அமைந்துள்ள வனத் துறைக்குச் சொந்தமான ஜீன்பூல் (Jene Pool) தாவரவியல் பூங்கா பகுதியில் வனக் கல்லூரி (Forest College) அமைத்துத் தந்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழக நிறுவனத்திற்குச் சொந்தமான (TANTEA) சுமார் 5,317 ஏக்கர் தேயிலை பயிரிடப்பட்ட தோட்டங்களை வனத் துறை வசம் ஒப்படைக்கும் விதமாக தமிழக அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் மூலமாக கடந்த 3.10.2022 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 173–ஐ இரத்து செய்து மீண்டும் தமிழ்நாடு அரசு தேயிலை தோட்டக் கழகம் வசம் ஒப்படைக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகம் நஷ்டத்தில் இயங்கிவரும் நிலையில் அதனை மீட்டுருவாக்கம் செய்து அந்தப் பகுதிகளில் செழிப்போடு வளரும் குறுமிளகு, காப்பி, அவக்கேடோ (Butter Fruit) ஆரஞ்சு போன்ற பயிர் வகைகளைப் பயிரிட்டு அந்த நிறுவனம் இலாபத்தில் இயங்கவும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரும் இழப்பு காரணமாக தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழக நிறுவனம் இயக்கப்பட முடியாத சூழல்

ஏற்பட்டால் அந்தத் தேயிலைத் தோட்டங்களில் நிரந்தர தொழிலாளர்களாகப் பணிபுரியும் சுமார் 2,500 குடும்பங்களுக்கு அந்த தேயிலைத் தோட்டங்களை தலா இரண்டு ஏக்கர் வீதம் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதன் வாயிலாக நிறுவனத்தின் இழப்பினை ஈடுகட்டுவதோடு அரசுக்கு வருவாயும் பெருகும். இது குறித்து தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு தனியார் வனப் பாதுகாப்பு சட்டம் 1949 பிரிவு 1(3)-ல் கூறியுள்ள விதிகளுக்கு மாறாக இரண்டு ஹெக்டேருக்கும் குறைவான நிலங்களை விற்பனை செய்வதற்கும், வாங்குவதற்கும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான கமிட்டியிடம் அனுமதி பெற வேண்டும் என கடந்த 2009 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவினை இரத்து செய்திட வேண்டும்.

ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட பிரிவு 17 நிலங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகள் பழுதடைந்தால் அவற்றைச் சீரமைக்கவும், புதுப்பிக்கவும், வனத் துறை மற்றும் வருவாய்த் துறை ஏற்படுத்தும் தடைகளை நீக்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழக நிறுவனத்தில் (TANTEA) பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்குவது தொடர்பாகக் கடந்த 30-7-2021 அன்று பிறப்பிக்கப்பட்ட வரைவு அரசாணை எண் 330-ஐ செயல்படுத்தி குறைந்தபட்ச கூலியாக ரூ.424.40 வழங்கிட ஆவன செய்ய வேண்டும். தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 7-வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகைகளை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூடலூர் பகுதியில் பிரிவு 17 மற்றும் பிரிவு 53 நிலங்களில் பல்லாண்டுகளாக வீடுகட்டி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்திவரும் மக்களுக்கு மனைபட்டா வழங்கி அவர்களின் இல்லங்களுக்கு மின் இணைப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலைப் பகுதிகளில் தனியார் பேருந்துகள் இயக்கப்படுவது இல்லை. எனவே, தரமான, போதுமான அரசு பேருந்துகள் தொகுதியின் அனைத்து பகுதிகளுக்கும் இயக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தாவரவியல், விலங்கியல், வேதியியல், தமிழ் இலக்கியம் ஆகிய இளங்கலை பட்ட பாடப் பிரிவுகளை உருவாக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் குடிமையியல் பணி (Civil Service) மற்றும் அனைத்து வகை அரசு பணி தேர்வுகளுக்கும் மாணவர்களைத் தயார் செய்யும்வண்ணம் நிரந்தர பயிற்சி மையம் உருவாக்கித் தர வேண்டும்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இளைஞர் நலன் விளையாட்டு மற்றும் மேம்பாட்டுத் துறை வாயிலாக வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் உறுதியளித்தபடி கூடலூரில் மினி விளையாட்டு அரங்கம் (Mini Stadium) அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். பந்தலூர் வட்டத் தலைமையகமான பந்தலூரில் தற்பொழுது உள்ள விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் மாடம் (Gallery) அமைத்துத் தர வேண்டும். அனைத்துக் கிராமங்களிலும் சிறு விளையாட்டு மைதானங்கள் அமைத்துத் தந்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பந்தலூர் வட்டத் தலைமையகம் பந்தலூரில் இயங்கி வரும் தாலுகா மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

ஆதி திராவிடர் துணை திட்டத்தின்கீழ் (SCSP) கூடலூர் தொகுதிக்குட்பட்ட கூடலூர், கொளப்பள்ளி, பந்தலூர், தேவாலா, நாடுகாணி, கோழிப்பாலம், கூடலூர் இரண்டாம் மைல், தேவர்ச்சோலை, பிதர்காடு மற்றும் நடுவட்டம் ஆகிய பகுதிகளில் அனைத்து வசதிகளுடன்கூடிய சமுதாயக் கூடங்கள் (Community Hall) கட்டித் தரப்பட வேண்டும்.

கூடலூர் நகராட்சிப் பகுதியில் வாழும் மக்கள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நடுவட்டம் பகுதியில் உற்பத்தியாகி ஆண்டுதோறும் வற்றாத நீரோட்டமுள்ள சிக்மாயாற்றில் இருந்து 3-வது கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெல்லியாளம் நகராட்சிப் பகுதியில் வாழும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றிட பொன்னானி கூட்டுக் குடிநீர் திட்டம் அல்லது ஏதேனும் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். பந்தலூரில் அரசு

பல தொழில்நுட்பக் கல்லூரி (Government Polytechnic College) அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூடலூரில் குறுமிளகு, இஞ்சி, ஏலம், கிராம்பு போன்ற வாசனை திரவியங்கள் பெருமளவு உற்பத்தியாகும் நிலையில் இப்பகுதியில் குறுமிளகு சேமிப்பு மற்றும் தரம் பிரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைத்து அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும்.

நீலகிரி மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு மலைப் பிரதேசங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க விதிக்கப்பட்டுள்ள தடையினை அகற்றி மலைப் பிரதேசங்களில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுக்குச் சொந்தமான பிரிவு 17 வகை நிலங்களில் அமைந்துள்ள தனியார். தேயிலைத் தோட்டங்களில் பல ஆண்டுகளாக தொழிலாளர்களாக பணிபுரியும் மக்கள் வறுமை நிலை காரணமாக சொந்த வீடு கட்டமுடியாத சூழலில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு பிரிவு 17 வகை நிலங்களைக் கையகப்படுத்தி வருவாய் நிலங்களாக (Revenue Land) மாற்றி ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 5 சென்ட் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

தனியார் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பெரும்பாலான குடியிருப்புகள் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நிலையில் அவை தற்பொழுது வாழ்வதற்கு ஏற்றதாக இல்லை. எனவே, அந்தக் குடியிருப்புகளைப் புதுப்பித்துத் தர நடவடிக்கை எடுப்பதோடு அவர்களின் வீடுகளுக்கு குடிநீர், தெரு விளக்கு, நடைபாதை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூடலூர் பகுதியில் பனியர், இருளர், குரும்பர், காட்டுநாயக்கர் போன்ற பூர்வகுடி பழங்குடியின மக்கள் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு அரசால் அமைத்துத் தரப்படும் வீடுகள் மிகக் குறைவான நிதி ஒதுக்கீடு காரணமாக தரமற்றதாக விரைவில் பழுதடையக்கூடியதாக உள்ளது. எனவே பழங்குடியின மக்கள் வீடு கட்டுவதற்கு அரசு வழங்கும் நிதியை ரூ.5 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும்.

ஆண்டு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத்தலமான உதகைக்கு கூடலூரின் எல்லை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான வாகனங்களின் மூலமாக வருகின்றனர். குறிப்பாக ஏப்ரல், மே மற்றும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகையின் காரணமாக கூடலூர் நகரில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அதனைத் தவிர்க்க கூடலூர் நகராட்சி அலுவலகப் பகுதியிலிருந்து செம்பாலா வரை புறவழிச் சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேவாலா–பொன்னூர் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் மரியா லாடு நீர்சறுக்கு விளையாட்டுப் பூங்கா, ரோப் கார் ஆகிய வசதிகளை உருவாக்கி அதனை சுற்றுலாத்தலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர்–மைசூர் சாலையில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான பிரிவு 17 வகை நிலத்தில் தாவரவியல் பூங்கா ஏற்படுத்திக் கொடுத்து அதனை சுற்றுலாத்தலமாக மாற்ற வேண்டும்.

கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்கூடலூரில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 12 ஏக்கர் நிலம் கூடலூர் பேருந்து நிலையத்திற்குப் பின்புறம் அமைந்துள்ளது. இந்த நிலத்தில் 3 ஏக்கர் நிலத்தை கூடலூர் நகராட்சி வசம் நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கி அதில் அனைத்து வசதிகளுடன்கூடிய விளையாட்டு அரங்கம் (Stadium) அமைத்துத் தர வேண்டும்.

கூடலூர் பகுதி மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளதால் பல காலனி பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு அங்குள்ள வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, ஆதி திராவிடர் சிறப்பு துணைத் திட்டத்தின்கீழ் (SCSP) ஒதுக்கப்படும் நிதியைப் பயன்படுத்தி தடுப்புச் சுவர்கள் (Revetment) கட்டித் தர வேண்டும்.

கூடலூர் அரசு மருத்துவமனையில் குழந்தைப்பேறு மருத்துவர் (Gynaecologist) நிரந்தரமாக நியமனம் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர் அரசு மருத்துவமனையில் நிரந்தரமாக மயக்கவியல் மருத்துவர் நியமனம் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர் அரசு மருத்துவமனையில் டயாலிசிஸ்

சிகிச்சைப் பிரிவு (Dialysis) தொடங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். கூடலூர் அரசு மருத்துவமனையினை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினை விரைந்து செயல்படுத்திட வேண்டும்.

கூடலூர் சட்டமன்றத் தொகுதியின் பந்தலூர் வட்டம், சேரங்கோடு பகுதியில் அமைந்துள்ள சாமியார் மலையினை சுற்றுலாத்தலமாக அறிவித்து சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க வேண்டும்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர். திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. பி. அய்யப்பன் ஆகியோர் இருக்கையில் இருந்தனர்.)

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் குமார் அவர்கள் சொன்ன பல நல்ல கருத்துகளில் மிகவும் தவறான இரண்டு புள்ளிவிவரங்களை இங்கே கூறியிருக்கிறார். அதை ஓரளவிற்குத் திருத்தினேன். இன்னும் கூடுதல் தகவல் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் நாங்கள் 3 இலட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் கடன் எடுத்தோம் என்று சொன்னார். வெள்ளை அறிக்கையில் நான் அன்றைக்கே காண்பித்தேன். கடைசி 5 வருடத்தில் 39,000 கோடி ரூபாய்க்கு மேல் மறைமுகமான கடன் எடுக்கப்பட்டது. அதனால் அவர்கள் 10 ஆண்டுக் காலத்தில் எடுத்த கடன் 4 இலட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய், 3 இலட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் கிடையாது. அதில்லாமல் 80 சதவிகிதம் முதலீட்டிற்கு செலவு செய்தோம் என்று சொன்னார். மொத்தமாக அவர்கள் முதலீட்டிற்கு செய்தது வெறும் 2 இலட்சம் கோடி ரூபாய்தான். அதனால் 50 சதவிகிதம்கூட அவர்கள் செயல்படுத்தவில்லை.

அறிவிப்புக்கு முன் ஒரே ஒரு கருத்தைக் கூறுகிறேன். இ-சேவை மையம் என்பது உங்களுடைய ஒப்புதலுடன் கலைவாணர் அரங்கத்தில் பயன்படுத்திய desktop Computers வைத்து செயல்படுத்துவதற்கு திட்டம் போட்டோம். அது எவ்வளவு சிறப்பாக நடைபெறுகிறது என்றால், ஏற்கெனவே என்

அலுவலகத்தில் computer ஒன்று வைத்து, அதிகாரமில்லாத ஒரு மையத்தை நடத்திக்கொண்டிருந்தேன். இப்போது மார்ச் மாதம் அதிகாரம் பெற்ற மையத்தை உருவாக்கிய பிறகு கிட்டத்தட்ட 108 நபர்களுக்கு வெவ்வேறு சான்றிதழ்கள் மற்றும் அரசு official documents வழங்கப்பட்டு, மொத்த செலவு அதற்கு வெறும் 4 ஆயிரத்து 850 ரூபாய்தான். Ofcourse அதை நாங்களே கொடுத்துவிடுகிறோம். ஏனென்றால், 50 ரூபாய், 50 ரூபாய் எல்லாம் வாக்காளர் அட்டைக்கு வாங்குவது தவறு. எந்த எம்.எல்.ஏ-வும் அந்த அளவிற்குச் செலவு செய்ய முடியாத சூழ்நிலையில் இல்லையென்று கருதுகிறேன். உதாரணத்திற்கு, பெரிய விவசாயி இங்கே இருக்கிறார், வேங்கையின் மைந்தன். அதனால் இந்த இ-சேவை மையத்தை எந்த அளவிற்குச் செயல்படுத்துகிறோமோ அது மக்களுக்கு மிகவும் பயனாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். நான்கு துறைகளிலும் வந்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்து, ஏற்கெனவே, அதற்கு ஓரளவிற்கு பதிலளித்திருக்கிறேன். சில அறிவிப்புகளில் கூடுதலாக தெளிவு வரும் என்று கருதுகிறேன்.

அறிவிப்புகள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

1. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின்கீழ் புதுமைகளைப் புகுத்துவதற்காகவும், காலநிலை பாதிப்பற்ற மற்றும் வளம் குன்றா எதிர்கால வளர்ச்சிக்காகவும், அதிநவீன தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் வகையில் ஆளுகைக்கான புத்தாக்க மையம், மாநிலத் திட்டக் குழுவில் அமைத்தல் (Centre for Innovation in Governance will be formed in the State Planning Commission under the Tamil Nadu Innovative Initiatives (TANII) to work with cutting edge institutions to bring in innovation in Governance, which is futuristic, climate friendly and sustainable)

Centre for innovation in governance State Planning Commission அடிப்படையில் அமைக்கப்படும்.

அரசுத் துறைகள், மாவட்ட நிர்வாகம் அதிநவீன தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து புதுமைகளைச் செயல்படுத்தவும்,

மக்களுக்குப் பொதுச் சேவைகள் அளிக்கத் தடையாக உள்ள சிக்கல்களை மற்றும் சவால்களைக் கண்டறிந்து அவற்றைப் புதுமையான முயற்சிகள்மூலம் தீர்வு காணும் திட்டங்களைக் கண்டறிந்து நல் ஆளுமையில் புதுமைகளைப் புகுத்துவதற்கு ஏதுவாக ஆளுகைக்கான புத்தாக்க மையம் உருவாக்கப்படும்.

2. கூடுதல் தகவல் தொழில்நுட்ப வசதியை வழங்குவதன்மூலம் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக நவீனமயமாக்கல் (Modernization of the Department of Economics and Statistics by providing additional Information Technology facilities to improve the functional efficiency)

பல இடங்களில் கூறியிருக்கிறேன். Department of Economics and Statistics-ன் விதிமுறை is not modern enough.

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப உதவியுடன் புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் அறிக்கைகளை உரிய நேரத்தில் வெளியிட்டு, அரசின் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்த பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் மாநிலத் துறைத் தலைமையிடம், 6 மண்டல அலுவலகங்கள், 32 மாவட்ட துணை இயக்குநர் அலுவலகங்கள், 75 கோட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் அலுவலகங்கள், 385 வட்டார புள்ளியியல் அலுவலகங்களை வலுப்படுத்தும் பொருட்டு, கணினிகள், தொழில்நுட்ப வசதிகள், மென்பொருள் மேம்படுத்துதல், இணையதள மற்றும் வலைதள வசதிகளும் செயல்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும்.

இரவு 7–55

3. ரூ.150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து மாநில அரசு நிதியுதவி திட்டங்களில் அதிக பொதுச் செலவினங்களின் செலவுத்திறன் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இதர ஆதாரங்களை வழங்குவதற்கு அறிக்கைகளை தயாரித்தல் (Preparation of Evaluation Reports for providing valuable evidence on cost effectiveness of large public spending of all state sponsored schemes with a budget outlay of over Rs.150 Crores)

150 கோடிக்கு Planning Commission.

2023 ஏப்ரல் 19] *[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]*

மாண்புமிகு முதலமைச்சரின் ஆய்வுக் கூட்டத்தில் ரூ.150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள அனைத்துத் திட்டங்களையும், அதிக பொதுச் செலவுத்திறன் குறித்த மதிப்புமிக்க ஆதாரங்களை வழங்கும் பொருட்டு, மதிப்பீடு செய்ய முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாகவும் (DEAR), வெளிநிறுவனங்கள் மூலமாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ் அவர்கள் சார்ந்த மாவட்டத்திற்கு, அவர் இங்கே இல்லை.

4. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள தொன்மை வாய்ந்த உதகை ஏரியைப் பாதுகாக்கும் வகையில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில், இணைப்புக் கால்வாய் மற்றும் ஏரியையும் தூர்வாரி, குப்பைகளை அகற்றும் பொருட்டு ஏரியின் நுழைவு வாயிலில் சிறப்பு தானியங்கி இயந்திர அமைப்பை சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் நிறுவுதல் (In order to conserve the Ooty Lake in the Nilgiris District, desilting works are to be undertaken in the feeder channels and the lake with installation of Automated Debris Removal System at the mouth of the lake at an estimated cost of Rs.10.00 crore under Special Area Development Programme)

உதகை ஏரியை தூர் வாரவும், குப்பை, பிளாஸ்டிக், வண்டல் மண் போன்றவற்றை நீக்கி மீண்டும் மாசு ஏற்படாமல் தடுக்க, தொழில்நுட்பத் தடுப்பு முறைகளைப் பயன்படுத்தி, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின்மூலம் ரூ.10.00 கோடி செலவில், கோடப்பமந்து முதல் ஏரி வரை தூர்வாரும் திட்டத்தைச் செயல்படுத்த, ஏரியின் நுழைவு வாயிலில் தானியங்கி சுத்தப்படுத்தும் அமைப்பு ஏற்படுத்தப்படும்.

5. நீலகிரி மாவட்டத்தின் 200—வது ஆண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வளமான இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும்

வகையில் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் அமைத்தல் (A Nilgiris Heritage Museum and an Experience Centre will be set up to mark 200 years of celebration to showcase the rich tribal natural and cultural history of the Nilgiris at an estimated cost of Rs.10.00 crore under Special Area Development Programme)

நீலகிரி மாவட்டத்தின் வளமான மானுடவியல், பழங்குடியின மக்களின், இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும் நோக்கத்துடன், மாவட்டத்தின் தனித்துவமான வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் ஆழமான மற்றும் உள்ளார்ந்த அனுபவத்தை வழங்க அதிநவீன தொழில்நுட்பத்துடன் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் ஏற்படுத்தப்படும். நீலகிரி பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம், நீலகிரி மாவட்டத்திற்கு கூடுதல் மதிப்பு ஏற்படுத்தக்கூடியதாகவும், உலகம் முழுவதிலுமிருந்தும் பார்வையாளர்களை ஈர்த்து உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த ஏதுவாக இருக்கும்.

6. நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் துறையை தன்னிறைவு அடையச் செய்வதற்கான சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு—ரூ.2.50 கோடி செலவில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்தல் (An amount of Rs.2.50 crore will be sanctioned under Special Area Development Programme for the Special and Comprehensive Package to make the Small Tea Growers' sector self–reliant in the District of Nilgiris)

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் துறையை தன்னிறைவு அடையச் செய்ய, "சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு" என்ற சிறப்புத் திட்டம் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

7. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளைச் சேர்த்தல் (Inclusion of Eastern Ghats in the Special Area Development Programme)

அதாவது, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், சேலம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம், நாமக்கல் மாவட்டம், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள பச்சைமலை ஆகிய பகுதிகளை சேர்த்தல்.

கிழக்கு தொடர்ச்சி மலையில் உள்ள ஜவ்வாது மலை (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்), சேர்வராயன் மலை (சேலம் மாவட்டம்), கல்வராயன் மலை (கள்ளக்குறிச்சி மாவட்டம்), கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்), பச்சைமலை (பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டங்கள்) ஆகிய மலைப் பகுதிகளில், இப்பகுதிகளின் பல்லுயிர் பாதுகாப்பின்மூலம் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்ய, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இறுதியாக, மதுரையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்ட மண்டல அலுவலகம் ஒன்று புதியதாக அமைத்தல்.

8. மதுரையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்ட மண்டல அலுவலகம் அமைத்தல் (Establishment of Special Area Development Programme Regional Office at Madurai)

தெற்கு மாவட்டங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்துவதைக் கண்காணிக்க மற்றும் மேற்பார்வையிடும் பொருட்டு, மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் அமைக்கப்படும்.

அடுத்து, மனித வள மேலாண்மைத் துறை. 5 அறிவிப்புகள் மட்டுமே உள்ளன.

மனித வள மேலாண்மைத் துறை

1. ஒருங்கிணைந்த மனித வள மேலாண்மை குறித்த நிலைப்பாட்டு அறிக்கை

முதலில், ஒருங்கிணைந்த மனித வள மேலாண்மை குறித்த நிலைப்பாட்டு அறிக்கை. பல இடங்களில் நாங்கள் என்ன செய்தோம்; நீங்கள் என்ன செய்தீர்கள்; யார் outsourcing கொண்டு வந்தார்கள்; எத்தனை காலி இடங்கள் இருக்கின்றன; எல்லாம் வதந்தியாக வருகிறது. அதிகாரப்பூர்வ ஒரு நிலைப்பாட்டு அறிக்கை வெளியிடப்படும்.

தெரிவுகள்மூலம் தகுதிவாய்ந்த நபர்களை அரசுப் பணிகளில் வெளிப்படைத் தன்மையுடன் துரிதமாகப் பணியமர்த்துதல் அரசின் தலையாயக் கடமையாகும். அத்தெரிவு முறைகளில் தகுந்த புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வழிமுறைகளை வகுத்தலும் இன்றியமையாதவை ஆகும்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களின் திறமையை, பணியில் சிறக்கும் வண்ணம் மேம்படுத்துதலும், உயர் பதவிகளுக்கு ஏற்றவாறு பயிற்சிகள் அளித்தலும், அவர்களை அங்கீகரித்து ஊக்கப்படுத்துதலும், மக்கள் சேவையில் அவர்களது பணி சிறக்கவும், பங்களிப்பின் தரம் உயரவும் வழிவகை செய்யும். பணியில் ஒழுக்கம், ஊக்கம், அங்கீகாரம் போன்றவையும் மனித வளத்தை மெருகேற்றும் உத்திகள் ஆகும். மேற்படி இலக்கினை நோக்கி, ஒருங்கிணைந்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிய, பணியாளர் தெரிவு, பணித்திறன் மேம்பாடு மற்றும் பணியாளர் மேலாண்மை குறித்த நிலைப்பாட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்படும்.

2. தேர்வாணையத்தில் விடைத்தாட்களை மதிப்பீடு செய்வதற்கு புதிய உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்

இரண்டாவது, தேர்வாணையத்தில் விடைத்தாட்களை மதிப்பீடு செய்வதற்குப் புதிய உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல். இப்போதைக்கு paper-ல் வாங்கிட்டு, அது மிகவும் பழைய software-ஐ வைத்து அதிக நாட்கள் எடுக்கிறது. Group IV exam காலதாமதமாகியது. இதை Artificial Intelligence, Automation-ல் வைத்து திருத்துவதற்கு தொழில்நுட்பத்தை வழங்குவதற்கு நிதியுதவி.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் ஆண்டொன்றிற்கு 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வெவ்வேறு அரசுப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதி வருகின்றனர். இத்தேர்வுகள் பல்வேறு தரத்திலான பணி நிலைகளுக்கேற்ப நடத்தப்படுகின்றன. எனவே, இவற்றைக் கையாளும் முறைகளும் செயல் திட்டங்களும் வேறுபடுகின்றன. ஒவ்வொரு தேர்வுக்கான பணியிலும், அதன்பின் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள், தெரிவுகள் போன்ற நடவடிக்கைகளிலும் பெரிய அளவிலான கட்டமைப்புகளையும் பணியாளர்களையும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

தற்போதுள்ள நடைமுறைகளில், காலதாமதம் மற்றும் பெரும் கட்டமைப்புகளையும் சார்ந்துள்ள நிலையைத் தவிர்த்து, தெரிவுப் பணிகளைத் தெளிவாகவும், முறையாகவும்

மேற்கொள்ளவும், தேர்வுகளுக்குப் பிந்தைய நடவடிக்கைகளைத் துரிதமாகவும் வெளிப்படையாகவும் கையாள்வதற்கும், புதிய உயர் தொழில்நுட்பம் தேர்வாணையத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

3. தேர்வாணையத்தில் கணினிவழி தேர்வு நடைமுறையை அறிமுகப்படுத்த சாத்தியக்கூறுகளை ஆராய்தல்

மூன்றாவது, தேர்வாணையத்தில் கணினிவழி தேர்வு நடைமுறையை அறிமுகப்படுத்த சாத்தியக்கூறுகளை ஆராய்தல். சில உறுப்பினர்கள் கூறியதுபோல், கணினிவழி தேர்வு நடைமுறையை அறிமுகப்படுத்த சாத்தியக்கூறுகளை ஆராய்தல். அதாவது, இப்போதைக்கு, paper based test ஆக இருப்பதை, computer based test ஆக உருவாக்குவது. குறிப்பாக, 20 இலட்சம், 30 இலட்சம் பேர் ஒரே நேரத்தில் எழுதக்கூடிய தேர்வுகளையெல்லாம் computer based test ஆக்குவதற்கு ஒரு சாத்தியக்கூறு அறிக்கை.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில், ஒரே தேர்விற்கு 25 ஆயிரம் முதல் 25 இலட்சம் வரையிலான எண்ணிக்கையில் பணி நாடுநர்கள் தேர்வுகளை எழுதி வருகின்றனர். இவ்வாறு எழுதப்படும் தேர்வுகளில் திருத்தப்படும் பாடவாரியான விடைத்தாள்களின் எண்ணிக்கைகளும் பல மடங்காகும். இது பெருமளவு பணியாளர்கள் மற்றும் கால நேரம் தேவைப்படும் நடவடிக்கையாகும்.

அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்ற பல்வேறு போட்டித் தேர்வுகளில் பின்பற்றப்படும் கொள்குறி வகை (Objective Type-Multiple Choice Questions) தேர்வுகள் பற்றிய வழிமுறைகளை ஆராய்ந்து, அனுபவங்களின் அடிப்படையில், கால தாமதத்தைத் தவிர்த்து, வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் வகையில், தேர்வாணையத்தால் கணினிவழி தேர்வு (Computer Based Tests) முறையினைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் (Feasibility Study) ஆராயப்படும்.

4. ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டத்தை உருவாக்கிட ஆய்வு மேற்கொள்ளுதல்

இப்போதைக்கு பவானிசாகரில் ஒரு training, துறைரீதியாக வேறு ஒரு training, எந்தக் காலத்தில் செய்தால் probation முடியும்? எதை Anna Administrative Staff College-ல் மேற்கொள்ள வேண்டும்

என்பது போன்ற தனித் தனி விதிமுறையுள்ளதை ஒருங்கிணைந்த full career training programme என்பதுபோல் உருவாக்குதல்.

மக்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல், பொதுப் பயன்பாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விதமான பணிகள் தொடர்புடைய அரசுத் துறை பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு துறையிலும், அத்துறையின் தன்மை மற்றும் பணிகள் தொடர்பாக வெவ்வேறு விதமான பயிற்சிகள் பணியாளர்களுக்குத் தேவைப்படுகின்றன. அதற்கேற்ப துறைகள் யாவும் தத்தமது பணியாளர்களுக்கு, உரிய பயிற்சித் திட்டங்களை வகுத்தவண்ணம் உள்ளன. பல்வேறு பயிற்சிக் கட்டமைப்புகளும் துறைகளினால் தனித் தனியே உருவாக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு துறைகளின் பயிற்சி மையங்களின் ஆற்றல் மற்றும் பங்களிப்பினை அதிகரித்திட, இம்மையங்கள் பொது நோக்கத்துடன் விரிவாக செயல்பட, ஒரே வகையான துறைகள் மற்றும் பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த பயிற்சி உள்ளிட்ட சாத்தியக்கூறுகளைக் கூர்ந்து ஆய்ந்திட தக்க செயல்திட்டத்தினை வகுத்து, பணியாளர்களின் திறனை மேம்படுத்திட ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

5. நலத்திட்ட விவரங்கள் அறிந்துகொள்ள ஒருங்கிணைந்த தரவு தளம்

நலத் திட்ட விவரங்களை அறிந்துகொள்ள ஒருங்கிணைந்த தரவு தளம்–Integrated Website to view beneficiaries of all welfare schemes.

வெவ்வேறு துறைகளால் வழங்கப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்களின் பயனர்கள் குறித்த விவரங்கள் யாவும் பொதுமக்கள் அறிந்துகொள்ளும்வண்ணம், தரவு தளம் ஒன்று படிப்படியாக தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் உதவியுடன் உருவாக்கப்பட்டு, அத்துறையால் நிர்வகிக்கப்படும்.

நலத் திட்டங்களின் பயனாளிகள் குறித்த தகவல்களைப் பகிரும் இந்த முயற்சி, பொது ஊழியர்களின் பொறுப்புணர்வை

மேம்படுத்துவதுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் சமூக கண்காணிப்புக்கும் வழிவகை செய்யும்.

இறுதியாக, நிதித் துறை மற்றும் ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய அறிவிப்புகள்.

ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

1. இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி—புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி–புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். Employees Health Insurance*–க்கு* mobile app*–யிலும்* handheld phone*–யிலும், அதாவது* tablet, website*–யிலும் உருவாக்குதல்.*

இத்திட்டத்தைப் பயனாளிகள் எளிதாக அணுகும் வகையில் பணியாளர்கள், ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட அனைவரின் பயன்பாட்டிற்காகத் திட்டத்தைப் பற்றிய முழுமையான தகவல்கள், நிலுவையிலுள்ள மருத்துவச் சிகிச்சைக்கான கட்டண விவரங்களின் நிலை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியல்கள், தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மற்றும் குறைகளை முறையிடுவதற்கான அலுவலர்கள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி துவக்கப்படவுள்ளது.

2. பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான கைப்பேசி செயலி

இரண்டாவது, பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான கைப்பேசி செயலி. அவர்களுடைய IFHRMS *தகவல்களைப் பெற்று, அவர்கள்* application *போடுவதற்கு* leave, pay slip, form *16,* LTC, TA, TTA *இவற்றையெல்லாம்* online*–லேயே செயல்படுத்தப்படுவதற்கான செயலி.*

பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு எளிதில் சேவைகளை வழங்குவதற்காக அனைத்து பணி விவரங்களை உள்ளடக்கிய கைப்பேசி செயலியினை அரசு உருவாக்கும். இந்தச் செயலிமூலம், பணியாளர்கள் அனைத்து வகையான விடுப்புகள்,

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 19

கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும், ஊதியச் சீட்டு, வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டதற்கான படிவம் 16 ஆகியவற்றையும் பதிவிறக்கம் செய்யலாம். விடுப்புக் கால பயணச் சலுகை, பயணப்படி, மாறுதல் பயணப்படி போன்ற தனிப்பட்ட கோரிக்கைகளின் நிலையைக் கண்டறியலாம். இந்தச் செயலியில் மின் பணிப் பதிவேட்டினைப் பார்க்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும் இயலும். ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியச் சீட்டு, ஓய்வூதியம் பெறப்பட்ட விவரங்கள், படிவம் 16 ஆகியவற்றைப் பதிவிறக்கம் செய்யலாம். மேலும், வாரிசுதாரர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்யவும் இந்தச் செயலியைப் பயன்படுத்தலாம்.

இரவு 8-00

3. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள பணியாளர்களுக்கு இணைய வழியில் இறுதி ஒப்பளிப்பு ஆணை வழங்கல்

புது Pension Scheme-ல் Contributory Pension Scheme-ல் இருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய தகவல்களை ஏற்கெனவே enter செய்து, அவர்களுக்கு எவ்வளவு balance உள்ளது என்பதையும் அவர்களுடைய situation-ஐ உடனே அவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம், சத்துணவு மற்றும் அங்கன்வாடி திட்டங்களின்கீழ் பணிபுரிந்து ஓய்வு பெற்ற/ இறந்த பணியாளர்களுக்கு இறுதித்தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு இறுதித்தொகை வழங்கும் பணிகளை இணையவழி (Online) வாயிலாக மேற்கொள்ள அரசு தகவல் தொகுப்பு மையத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளின் கணக்குத்தாட்கள் மற்றும் சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களின் சிறப்புப் பொது வருங்கால வைப்பு நிதி கணக்குத்தாட்களைத் தொகுத்து இணையவழியில் பயனாளிகள் நேரடியாக அணுகும் வகையில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் மேற்கண்ட பணியாளர்கள் தங்களது கணக்குகளை அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ள முடியும்.

4. ஆண்டு முழுவதும் ஓய்வூதியர்களுக்கான நேர்காணல்

Muster இப்போது ஆண்டுக்கு ஒரு முறைதான் நடக்கிறது. அது July to September. இதை எல்லா மாதத்திலேயும் நடத்தி யாருக்கும் crowding இல்லாதவாறு பார்த்துக்கொள்கிறோம்.

ஓய்வூதியர் நேர்காணல் என்பது கருவூலக் கணக்குத் துறையில் ஓய்வூதியர் உயிர்வாழ்வினை ஒவ்வோர் ஆண்டும் உறுதி செய்யும் அடிப்படைப் பணியாகும். தற்போது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் செப்டம்பர் வரை நேர்காணல் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஓய்வூதியதாரர்கள் எளிதில் இச்சேவைகளைப் பெறும் வகையில், ஆண்டு முழுவதும் ஓய்வூதியர் நேர்காணல் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

நிதித் துறை

5. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்ட கண்காணிப்புப் பிரிவு

SC, ST sub plan ஏற்கெனவே ஒரு புதுச் சட்டத்தை உருவாக்கி, அதனுடைய செயல்பாட்டை முழுமையாகக் கண்காணிக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தவாறு, அதற்காக ஒரு சிறப்புப் பிரிவு நிதித் துறையில் உருவாக்கப்பட்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டக் கண்காணிப்பிற்கு ஒரு பிரிவு உருவாக்கப்பட்டு, அந்தச் சட்டத்தோடு compliance check செய்கிறோம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் இதர நிருவாகத் துறைகளுடன் ஒருங்கிணைத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைத் திறம்பட பயன்படுத்துவதைக் கண்காணிக்க நிதித் துறையில் ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்படும்.

6. வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவின் பயன்பாட்டிற்கு வழக்கு மேலாண்மை அமைப்பினைச் செயல்படுத்துதல்

அரசு சுமார் 6 இலட்சம் வழக்குகளில் either plaintiff or defendant ஆக இருக்கிறது. இதனால் நமக்கு பல ஆயிரம் கோடி, பல பத்தாயிரம் கோடி பாதிப்பும், பல வகையில் நம்முடைய செயல்பாட்டிற்கு, சாத்தியக்கூறுகளுக்கு, நீதிமன்றம் இடையூறு

செய்வதுபோல் இருக்கின்ற சூழ்நிலையில் எந்த வழக்கு எங்கு இருக்கிறது, என்றைக்கு, எத்தனை நாளாக இருக்கிறது என்பதைப் பார்க்கக்கூட நமக்கு ஒரு பெரிய limitation இருக்கிறது. ஏற்கெனவே பழைய அறிவிப்புகளில் இந்தக் குழுவை உருவாக்கினோம். இந்தக் குழுவினால் பல ஆயிரம் கோடி ரூபாய் ஏற்கெனவே சேமிப்பு கிடைத்திருக்கிறது. இந்தக் குழுவினுடைய செயல்பாட்டைச் சிறப்பிக்க இந்த IT system.

அதிக அளவில் நிதிச் சுமையை ஏற்படுத்தக்கூடிய வழக்குகளைக் கையாளும் வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவிற்கும் இதர அலுவலர்களுக்கும் உதவும் விதமாக வழக்குகளைக் கண்டறிந்து அவற்றைத் தொடர்ந்து கண்காணிக்கும் வசதிகளுடன் 'வழக்கு மேலாண்மை அமைப்பு' ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

7. விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு

Comprehensive Audit Information Management System, accountability-ஐ தட்டிக் கேட்டு சிறப்பிக்கச் செய்வதாகும்.

அனைத்துத் தணிக்கை செயல்பாடுகளையும் சீரிய முறையில் மேலாண்மை செய்யும் நோக்கத்துடன், தொடக்கம் முதல் இறுதி வரை அனைத்து செயல்பாடுகளையும் தானியங்கி முறையில் மாற்றியமைக்க, ஒரு விரிவான தணிக்கைத் தகவல் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்படும். அனைத்துத் தணிக்கை நடவடிக்கைகளையும் நிகழ்நேர அடிப்படையில் முழுமையாகக் கண்காணிக்க இந்த அமைப்பு உதவும்.

8. பயிற்சி மற்றும் செயல் திறனை மேம்படுத்துதல்

Training and capacity building எல்லாத் தணிக்கைத் துறைகளுக்கும் அவர்களுடைய professionalism அவர்களுடைய capacity increase செய்வதாகும்.

பொதுத் தணிக்கை தர நிலைகளுக்கு ஏற்ப, ஐந்து தணிக்கைத் துறைகளின் தணிக்கையாளர்களுக்குத் தணிக்கை தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

9. இணைய பாதுகாப்பு அலகு

Cyber Security Unit ஏற்கெனவே பல இடங்களில் online threat அதிகமாக வந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், நம்முடைய Computer System, State Data Centre இதையெல்லாம்

பாதுகாக்கும் வகையில் ஒரு சிறப்பு Cyber Security Unit *மூலம் முயற்சி எடுக்கப்படுகிறது. அதைப்போல், எப்போதெல்லாம் நாம் பல ஆயிரம்* Point of Sale *அல்லது* identity *செய்து* Aadhar *என்றால் கைரேகை வைப்பது அல்லது கண்களைப் பார்ப்பது இவற்றிற்கெல்லாம்* machine *இருக்கும்போது, இதனை எந்த மாதிரி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் வைக்க வேண்டும் என்று* tender guidelines *இருக்கிறது.* Risk *சூழ்நிலையும் இருக்கிறது.*

அனைத்து இணைய கட்டமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், மென்பொருளை அவ்வப்போது இணைய தணிக்கை மேற்கொள்வதற்காக கருவூலத் துறையில் 'இணைய பாதுகாப்பு அலகு' ஒன்று உருவாக்கப்படும். இணைய வழி இடர்பாடுகளை மதிப்பீடு செய்தல், இணைய வழி தாக்குதல்களுக்கு எதிராகத் தரவு அமைப்புகளை வலுப்படுத்துதல், அமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகப் பணியாளர்களுக்கு வழிகாட்டுதல்களை உருவாக்குதல் மற்றும் பல்வேறு தரப்பினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் இந்தச் சிறப்பு அலகின்மூலம் மேற்கொள்ளப்படும்.

மாநிலம் முழுவதும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பெரும் ஒருங்கிணைந்த மென்பொருள் மேம்பாட்டு திட்டங்களுக்கு, தரத்திலும், தொழில்நுட்பத்திலும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் வாயிலாகவே சேவைகள் கொள்முதல் செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும்.

10. அரசுடன் இணைந்து செயல்பட வங்கிகளின் பட்டியல்

Empanelment of Banks for engaging with the Government

அரசு மற்றும் வங்கிகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்தவும், அரசுத் திட்டங்களில் வங்கிகளின் பங்கேற்பை மேம்படுத்தவும் மாநில அரசுத் துறைகள் மற்றும் முகமைகளுடன் வணிகம் செய்ய வங்கிகளின் பட்டியலைத் தயாரிக்க உரிய வழிகாட்டுதல்களை அரசு உருவாக்கும்.

உரிய நேரத்தில் நிதி உதவி பெறுவதை உறுதி செய்யவும், நிதி மேலாண்மையை மேம்படுத்தவும், அனைத்துத் துறைகள், வாரியங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் அரசு வைப்பீடுகள் மற்றும் பெறத்தக்க வரவுகளையும் உரிய வகையில் கையாளவும் பராமரிக்கவும் விதிமுறைகள் வகுக்கப்படும்.

11. கணக்கீட்டு வழிமுறைகளையும், செலவினங்களின் வகைப்படுத்துதலையும் ஆய்வு செய்தல்

Review of accounting guidelines and categorization of expenses.

அதாவது இன்றைக்கு பல ஓய்வூதிய contributions, *அரசு செலவுகள், மானியங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. ஏன் இந்தத் தவறான வகையில் ஆரம்பிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. அதேபோல், தற்காலிகப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்கள் எல்லாம் தவறான தலைப்பில் வருகிறது. அவற்றையெல்லாம் திருத்தி, உண்மையான கணக்கை மக்களிடம் சமர்ப்பிக்க இந்தச் சீர்திருத்தம்.*

அரசு கணக்குகளை வெளிப்படையாக, துல்லியமாக, எளிதில் புரியும் விதமாக உரிய நேரத்தில் சட்டமன்றத்திற்கும், அனைத்து குடிமக்களுக்கும் கிடைக்கப்பெறும் நோக்கில், முக்கிய கணக்குத் தலைப்பில் செலவினங்களின் வகைபாடுகளும், கணக்கீட்டு வழிமுறைகளும் ஆய்விற்கு மேற்கொள்ளப்படும்.

12. செயல்திறனை மேம்படுத்த கருவூலத் துறையைச் சீரமைத்தல்

Revamping.

ஒரு காலத்தில் கருவூலத் துறையில் பேப்பர்களில் எல்லா approvals *நடந்து கொண்டிருந்தபோது பல ஆயிரம் பேர்* bill-*ஐ* check *செய்து அதற்கு பிறகு* validate *செய்து, அதற்குப் பிறகு நிதி ஒதுக்கி, முதல் ஆள் கையெழுத்து போட்டு, இரண்டாவது ஆள் போட வேண்டும். இந்த வேலைகளை எல்லாம் செய்ய வேண்டும். எனவே, இவையெல்லாம்* computerize *ஆன பிறகு தேவையில்லை. ஆனால், புதுப் பொறுப்புகள் அதாவது* asset management *பொருட்களை மேலாண்மை செய்வது,* audit *செய்வது இவற்றையெல்லாம் அதிகரித்திருக்கிறோம். எனவே, புது பணி தேவைக்கேற்ப இந்தத் துறையைச் சீரமைத்தல்.*

அரசு சொத்துகளின் மேலாண்மை, இறுதி வரை நிதிப்போக்கினைக் கண்காணித்தல் போன்ற புதிய பணிகளைக் கருத்திற்கொண்டு, கருவூலத் துறையின் பொறுப்புகளை மாற்றியமைத்து, அத்துறை முழுமையாகச் சீரமைக்கப்படும். செயல்முறைகளை நெறிப்படுத்தி, இத்துறையின் செயல்பாட்டுத் திறன் மேம்படுத்தப்படும்.

2023 ஏப்ரல் 19] [*முனைவர் பழனிவேல் தியாக ராஜன்*]

13. அரசு—தனியார் பங்களிப்பு கொள்கை

Industrial Policy *எப்படி இருக்கிறதோ,* Public Private Partnership Policy, *எந்தெந்த அடிப்படையில் என்னென்ன* mode–*ல் ஒன்றிய அரசாங்கம் செய்திருக்கிற மாதிரி, ஒரு* Standard Policy for Public Private Partnership *செய்கிறோம்.*

அதிக மூலதனச் செலவினங்கள் உள்ள திட்டங்களில், அரசு–தனியார் பங்களிப்பு முறையை பொது நிறுவனங்கள் மேற்கொள்ளவும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையினரின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், விரிவான 'அரசு–தனியார் பங்களிப்புக் கொள்கை' ஒன்றை அரசு வகுக்கும்.

இரவு 8–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் விளக்கங்களை ஏற்றுக்கொண்டு அனைத்து உறுப்பினர்களும் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி 4 துறைகளுக்கும் கோரிய நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

8. சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் மருத்துவப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கையின் அடிப்படையிலே, இப்போது அரசுக்கு இருக்கக்கூடிய நிதிநிலை சூழ்நிலைக்கேற்ப, ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.*

இங்கே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓய்வூதியத்தையும், மருத்துவப் படியையும் உயர்த்தித் தர வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், பின்வரும் அறிவிப்புகளை அறிவிப்பதில், உங்களோடு சேர்ந்து நானும் ஓரளவிற்கு மகிழ்ச்சி அடைந்து, அவற்றை அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய மாத ஓய்வூதியம் ரூபாய் 25 ஆயிரம் என்பது, ரூபாய் 30 ஆயிரமாக, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஜூன் மாதம் முதல் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 12,500/– என்பது, மாதம் ஒன்றிற்கு ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு, தற்போது ஆண்டு ஒன்றிற்கு வழங்கப்பட்டுவரும் மருத்துவப் படி 50 ஆயிரம் ரூபாய் என்பது, 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 36 — திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(ஈ) கோரிக்கை எண் 38 — பொதுத் துறை

(உ) கோரிக்கை எண் 1 — மாநில சட்டமன்றம்

(ஊ) கோரிக்கை எண் 2 — ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(எ) கோரிக்கை எண் 16 — நிதித் துறை

(ஏ) கோரிக்கை எண் 35 — மனிதவள மேலாண்மைத் துறை

(ஐ) கோரிக்கை எண் 50 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய துறைகளின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. செந்தில் குமார், முனைவர் கோவி. செழியன், திரு. ந. தியாகராஜன், திரு. R. ராதாகிருஷ்ணன், திரு. ஒ. ஜோதி, திரு. தி. வேல்முருகன், திரு. பொன். ஜெயசீலன் மற்றும் திரு. இரா. அருள் ஆகியோர் உரையாற்றியிருக்கிறார்கள். பல்வேறு கருத்துகளையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அதில், எல்லோரும் தங்களுக்கு அதிகமான சம்பளம் என்று கேட்டதைவிட, முன்னாள் MLA-க்களின்மீதுதான் ** ஓய்வூதியத்தை அதிகரித்துத் தர வேண்டும் என்று ஒட்டுமொத்தமாகக் கேட்டார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்களுடைய மனம் திருப்திப்படுகின்ற வகையில் இங்கே அறிவிப்பு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கும் செய்திருக்கிறார்கள்.

இங்கே பேசியவர்கள் மட்டுமல்லாமல், எல்லோருடைய Cut Motions-ஐப் படித்துப் பார்த்தேன். அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.3 கோடிதான் கொடுக்கிறீர்கள்; அதை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதில் எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. என்னுடைய தொகுதிக்கும் 3 கோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கிடைக்கும். ஆனால், அதில் என்ன ஒரு பிரச்சினை என்றால், அதற்கு GST பிடித்துக்கொள்கிறார்கள். அதைப் பிடித்துக்கொள்வதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் பின்னர் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, 100 நாட்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். விதி 183-ன்படி சட்டமன்றம் நடத்த வேண்டும். ஆனால், எவ்வளவு நாட்கள் நடத்த வேண்டும் என்பதை Business Advisory Committee-ல்தான் முடிவு செய்கிறோம். அந்தக் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து பேச வேண்டும். அதில் என்ன ஒத்துக்கொள்கிறோமோ அதன்படிதான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நாங்கள் சட்டமன்றக் கூட்டத் தொடரை நடத்துகிறோமே தவிர, நாங்களாகவே இத்தனை நாட்கள்தான் நடத்த வேண்டும் என்றெல்லாம் சொல்லவில்லை. நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்துதான் முடிவெடுத்திருக்கிறோம். அது முடிந்துவிட்டது.

அடுத்து, Committee Members இருக்கிறார்கள் அல்லவா! பொதுவாக, Public Accounts Committee, Estimates Committee போன்று நிறைய Committees இருக்கின்றன. இங்கேயே ஒருகாலத்தில் tour போவார்கள். ஆனால், வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்பதை முதலில் கொண்டு வந்தவர், திரு. விநாயகம் அவர்கள். திரு. அண்ணா அவர்கள் Chief Minister ஆக இருந்தபோது, திரு. விநாயகம் அவர்கள் Public Accounts Committee-ன் தலைவராக இருந்தார். அவர்தான் வெளி மாநிலங்களுக்கு tour செல்ல வேண்டுமென்று கேட்டார்கள். திரு. விநாயகம், இங்கேயே சுற்றிப் பார்த்தால் போதுமே என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவரும், இவரும் classmates. வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்று திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். இங்கேயே சுற்றிப் பார்த்தால் போதும், விநாயகம் என்று அப்போதைய முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார். அவரும், இவரும் classmates. இல்லை, இல்லை, போக வேண்டும் என்று திரு. விநாயகம் சொன்னார். 'மனம்போல் மாங்கல்யம்' என்று எழுதி, அவர் permission கொடுத்தார். அதற்குப் பிறகுதான் வெளிமாநிலங்களுக்குக் குழுக்கள் செல்ல ஆரம்பித்தன.

இரவு 8–10

சென்ற ஆண்டு எந்தக் குழுவும் போக முடியவில்லை. ஏனென்றால், கொரோனா வந்துவிட்டது. அதற்குப் பிறகு யாரும் போக முடியவில்லை. இந்த ஆண்டு, வெளிமாநிலங்களுக்குப் போக வேண்டிய Committees-ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தடுக்கமாட்டார், போகிறோம். ஆனால், Petition Committeeகூட போக வேண்டும் என்று சொல்கிறார்கள். அதுதான் ஆச்சரியம். Estimates Committee, Public Accounts Committee போன்ற Committees எல்லாம் இருக்கின்றன, அவர்கள் வெளிமாநிலங்களுக்குப் போகலாம். Petition Committee-ம் நாங்கள் Odisha-வுக்குப் போக வேண்டும் என்றால், அங்கே, எப்படி petition வாங்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவா போக வேண்டும். அந்த Committee,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

petition-ஐ இங்கேயே வாங்கிவிடலாம். ஆகையினால் அதைச் செய்யலாம்.

இரண்டாவது, Commonwealth Parliamentary Association Issue. எம்.ஜி.ஆர்., இருந்தபோது அனுப்பினார், நான் இல்லை என்று சொல்லவில்லை. Parliamentary Committee-ல் நானும் போயிருக்கிறேன். ஆகையால் அதுகுறித்து, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே எல்லோரும் சேர்ந்து, பழைய எம்.எல்.ஏ.-க்களுக்காகக் கட்டியிருக்கிற புதிய கட்டடத்தில் ஒரு meeting போட்டோம். அப்போது எதிர்க்கட்சி எம்.எல்.ஏ-க்கள் எல்லோரையும் கூப்பிட்டு, Parliamentary Committee-க்கு போவதைப் பற்றி பேசினோம். அவை எல்லாவற்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லலாம் என்று பார்த்தோம். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்வதற்கு முன்பே, கொரோனா வந்துவிட்டதால் முகமூடியைப் போட்டுக்கொண்டோம். அதோடு அது முடிந்துவிட்டது. ஆகவே, அந்த நிலை வருகின்றபோது இந்த ஆண்டு எங்கே போகலாம் என்பது குறித்து யோசித்து நிதிநிலைமைக்கு ஏற்ப, அப்போது வைத்துக்கொள்ளலாம். அப்போதெல்லாம், என்ன செய்வார்கள் என்று கேட்டீர்களென்றால், 5 இலட்சம் ரூபாய் செலவாகிறது என்றால், 2½ இலட்சம் ரூபாய் இவர்கள் கொடுக்க வேண்டும். 2½ இலட்சம் ரூபாய் சர்க்கார் கொடுக்க வேண்டும். அந்த மாதிரிதான் அவர்கள் செலவு செய்துகொண்டு வெளிநாடுகளுக்குப் போவார்கள். ஆகவே, அதுபோல் இந்த வருடம் செலவு செய்துகொண்டு போகிறவர்களுக்கு, அனுமதி உண்டா என்பதை அப்போது தீர்மானித்துக்கொள்ளலாம்; அது அவ்வளவுதான். அடுத்து, முன்னாள் எம்.எல்.ஏ.-க்கள் பிரச்சினை, முடிந்தது.

அடுத்து, இவர்கள் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கான discussion அன்றே முடிந்துவிட்டது. அதைப் பற்றிய பிரச்சினை ஒன்றுமில்லை. 100 நாட்கள், 120 நாட்கள் நடத்தலாம் என்பதற்கு பதில் சொல்லியாகிவிட்டது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திற்கெல்லாம் Wi-Fi வேண்டுமென்று கேட்டார்கள். Wi-Fi-க்கு கிட்டத்தட்ட 1 கோடியே 37 இலட்சம் ரூபாய்க்குமேல் நிதி கேட்டு, நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். கோப்பில் கையெழுத்தானவுடன் எல்லோருக்கும் Wi-Fi வந்துவிடும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நேர்முக உதவியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களின் தொகுதிக்கு செயலாளர் நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் சாதாரண விஷயம். விடுதி பராமரிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாகப் பராமரித்துவிடலாம்.

அடுத்து, பட்ஜெட் கூட்டத்தொடரை உதகமண்டலத்தில் நடத்த வேண்டும். திரு. அருள், உங்களுக்குத் தெரியுமா! அதுபோலத்தான், ஒரு காலத்தில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே நடத்த வேண்டுமென்றார்கள். அது ஒரு காலம். ஏனென்றால், அப்போது பயங்கரமான வெயில் காலம். ஆனால், அப்போது இதுபோன்ற AC எல்லாம் இல்லை. புழுக்கத்தைத் தவிர்க்க—அந்தக் காலத்தில் நூற்றுக்கணக்கான Fan-கள் சுற்றும். தலைவர் வந்ததற்குப் பிறகுதான் AC வசதி செய்து கொடுத்தோம். அதற்கு முன்பு Fan வசதிதான் இருந்தது. அப்போது அங்கு போகக் கூடாது என்பதற்காக கலைஞர் அவர்கள், 'கும்பி கருகுது, குடல் வேகுது, கோன்வேந்திகளே, உங்களுக்கு ஊட்டி குளுகுளு வாசம் ஒரு கேடா?' என்று ஒரு வசனம் எழுதினார். அப்படி வசனம் எழுதின நாங்கள், உங்களை ஊட்டிக்குக் கூப்பிட்டுக்கொண்டு போக வேண்டுமா? வேண்டாம், அதை எடுத்துவிடுங்கள்; அது தேவையில்லை. இங்கேயே கொஞ்ச நேரம் சென்றதும் வெளியே சென்று, AC-ஐ குறையுங்கள், ரொம்ப குளிராக இருக்கிறது என்று சொல்லிவிட்டு வருகிறோம். ஆகையால், ஏதாவது கேட்க வேண்டும் என்று இவர் கேட்டு வைத்திருக்கிறார்.

உறுப்பினர்களுக்கு விளையாட்டுப் போட்டி நடத்துவது. முன்பெல்லாம் இந்த பட்ஜெட் முடியும்போது எல்லோருக்கும் ஒரு விளையாட்டுப் போட்டி நடத்துவோம். ஒரு காலத்தில் மா.பா. சாரதி, பெரிதாக குண்டாக இருப்பார். அவரும், திரு. விநாயகமும் குத்துச் சண்டை போட்டு கீழே விழுந்தார்கள். அதுபோல் நடத்துவார்கள். கயிறு இழுக்கும் போட்டி எல்லாம் தமாஷாக நடக்கும். சிலர் பாட்டு பாடுவார்கள். திரு. கே.கே. ஷா அப்போது இருந்தார். அவர், என்னை பாட்டு பாடச் சொன்னார். எனக்கு பாடவே தெரியாது. இல்லை, இல்லை, நீங்கள்தான் பாட வேண்டும் என்றார்கள். எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். நான் பாடினால், எல்லோரும் மரியாதை கொடுப்பீர்கள் என்று சொன்னேன். என்ன மரியாதை கொடுக்க வேண்டும் என்றார்கள்.

'ஜன கண மன' என்று தேசிய கீதத்தை நான் பாடினேன் பாருங்கள், எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். இன்னும் நிகழ்ச்சி இருக்கிறது, உட்காருங்கள், இன்னும் நிகழ்ச்சி இருக்கிறது, உட்காருங்கள் என்று சொன்னார்கள். முடியாது, இவர் பாட்டு பாடுவதை நிறுத்தமாட்டார் என்று சொன்னார்கள். அந்தமாதிரி எல்லாம்கூட நடக்கும். அந்தமாதிரி நடத்தினோம். இந்த ஆண்டு வேண்டாம். அடுத்த ஆண்டு நடத்தப்படும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (குறுக்கீடு) அதுதான் 25,000 ரூபாய் கொடுக்கிறோமே. அது போதும். நடத்துங்கள். புதிய சட்டமன்றம் கட்ட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நானும் சேர்ந்து வேண்டுகிறேன். விரைவில் தளபதி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒரு புதிய சட்டமன்றத்தைக் கட்டுவார். ஏனென்றால், எல்லோரும், கேரளா சென்று பாருங்கள்; ஆந்திரா சென்று பாருங்கள். (குறுக்கீடுகள்) எங்கே, ராஜ் பவனிலா?

இரவு 8–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Raj Bhavan என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Raj Bhavan பற்றி ஒன்றை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். அது நம்முடைய இடம். அதனுடைய வரலாற்றை நான் படித்துப் பார்த்தேன். முதலில் ஆளுநர் மாளிகை அங்கு இல்லை. வேறு ஒரு பிரச்சினை காரணமாக மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அங்கே இடம் தரப்பட்டது. ஆகையினால், அதை எடுத்துக்கொள்ளலாம். Guindy Race Course அமைந்துள்ள இடம் 700 ஏக்கர். அவர்களால் பணம் கட்ட முடியவில்லை. அது நம்முடைய அரசாங்கத்தினுடைய இடம்தான். அதையும் நாம் எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கேயோ ஓரிடத்தில் 'அவர்களுடைய காலத்தில்தான் தமிழ்நாட்டில் புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டது' என்ற வரலாற்றை உருவாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் இந்த period–லேயே செய்துவிட வேண்டும். அப்போதுதான் நாம் அங்கு சென்று அமர முடியும்.

அடுத்தது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் car pass குறித்தது. அனைத்து சுங்கச் சாவடிகளிலும் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்படாத வகையில் car pass

வேண்டுமென்று சொல்கிறீர்கள். நீங்கள் எங்கே வண்டியை நிறுத்துகிறீர்கள். நீங்கள் போகும் வேகத்திற்கு அவர்கள்தான் தெறித்து கொண்டு ஓடிப் போகிறார்கள். அதனால்தான் car pass எல்லாம் வழங்கிவிடலாம். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அது தற்போது முடியவே முடியாது. அடுத்ததாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓய்வூதியம் குறித்தது. அதுவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயே இன்றைக்கு அறிவித்துவிட்டார்கள்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர்களுடைய ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். எங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று நீங்கள் கோரிக்கை வைத்துள்ளீர்கள். அவர், மிக நல்ல மனிதர். திரு. ஜி.கே. மணி அவர்கள், மணி, மணியான மனிதர். நன்றாகக் கேட்டிருக்கிறார். அவருக்காக இதைச் சொல்கிறேன்.

இவ்வாறு உறுப்பினர்கள் கேட்டதில், நம்மால் முடிந்ததையெல்லாம் கொடுத்து முடித்துவிட்டோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றம் உயர்வானதொரு மன்றம். ஒவ்வொருவருடைய தொகுதியிலும் குறைந்தபட்சம் 2.5 இலட்சம் மக்கள் இருப்பார்கள். அந்த 2.5 இலட்சம் மக்களில், நாமெல்லாம் இந்த இடத்தில் வந்து அமர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், நமக்குதான் அந்த பாக்கியம் கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது கிடைக்க முடியாத பாக்கியம். வைதீக மொழியில் சொல்ல வேண்டுமென்றால், அவரவர்களுக்கு பிராப்தம் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். இந்த மன்றத்தில் நாம் இருந்தோம் என்பதே நம்முடைய வருங்கால சந்ததியினருக்கு, என்னுடைய தாத்தா இங்கே இருந்தார்; என்னுடைய பாட்டனார் இங்கே இருந்தார் என்று சொல்வது பெருமையான ஒன்று. இந்த மன்றத்தில் மிகப் பெரிய ஆட்கள் எல்லாம் நீண்டகாலம் இருந்திருக்கிறார்கள். நானும் கிட்டத்தட்ட 50, 60 வருடங்களாக இங்கே அமர்ந்து இந்தச் சபை நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் எனக்கு ஒரே ஒரு குறை என்னவென்றால், எனக்கு மட்டும் அந்தக் குறை இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் குறை உண்டு. எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய கட்சிக் கூட்டங்களிலும் சரி; இங்கேயும் பல முறை சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது வர்ணனையைத் தவிர்த்துவிட்டு, நேரடியாக சப்ஜெக்ட்டில் பேசுங்கள். ஏனென்றால், உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பில் அந்த நேரத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், ஒரு elderly person என்ற வகையில் சொல்கிறேன் என்பதற்காக, யாரும் வருத்தப்பட மாட்டீர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அவையின் பாதி நேரங்கள் வர்ணனையிலேயே செலவாகி விடுகின்றன. அவரை வணங்குகிறேன், இவரை வணங்குகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, நீங்கள் இப்படியே வணங்குகிறேன் என்று தெரிவித்துக்கொண்டே இருப்பதால் யாராவது திருப்தி அடைவார்கள் என்று நினைக்கிறீர்களா? மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன் என்று என்னைச் சொன்னவுடன், நம்மை அவர் வணங்குகிறேன் என்று சொல்லிவிட்டார் என்று நான் பெருமிதம்கொள்வேன் என்று நினைக்கிறீர்களா? அதற்குப் பதிலாக அந்த நேரத்தை அவர் வீணடித்து விட்டாரே என்று வருத்தம்தான்படுகிறேன்.

சிதம்பரத்தில் மாணவரணி மாநாடு ஒன்று நடைபெற்றது. அண்ணா அவர்கள் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்புறம் நான் அமர்ந்திருந்தேன். ஆலடி அருணா அவர்கள் பேசும்போது, அண்ணா அவர்களைப் புகழ்ந்து பேசுகிறார். காஞ்சி கரிபால்டி, ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்து பேசுகிறார். அமர்ந்திருந்த அண்ணா அவர்கள், ‘அருணா இங்கே வா’ என்று அவரை அருகில் அழைத்தார். என்னை காஞ்சி கரிபால்டி, single tea, double tea என்று சொல்வதற்கு ராஜகோபால் இருக்கிறார். காஞ்சிபுரத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். உனக்கு அளிக்கப்பட்டுள்ள சப்ஜெக்ட் என்ன என்றார். ‘Democratic Socialism’ என்று பதில் சொன்னார். அதுபற்றி தெரிந்தால் பேசு. இல்லையென்றால் அமைதியாகச் சென்று உட்கார் என்று சொன்னார். அதற்குப் பிறகு, ஆலடி அருணா அவர்கள் பேசினார். மிக அற்புதமாகப் பேசினார். பேசி முடித்து வந்த பின்னர், அண்ணா அவர்கள் எழுந்து நின்று அவரை அழைத்து, அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்து, இவ்வளவு சப்ஜெக்ட்டை வைத்துக்கொண்டு, எதற்காக

நீ என்னைபோய் வர்ணித்துக் கொண்டிருக்கிறாய், இதனால் நான் மகிழ்ச்சி அடைந்துவிடுவேன் என்று நீ கருதுகிறாயா? என்று கேட்டார். அண்ணா அவர்கள் கொஞ்சம்கூட முகஸ்துதி பிடிக்காத மனிதர். முகஸ்துதி என்றாலே கீழே விழுவதாக அர்த்தமாம். முகஸ்துதிக்கு மயங்குகிற எவரும் ** ஆகையினால், என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதன்முறை சட்டமன்றத்தில் பேசும்போது வேண்டுமென்றால், எனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி, நான் போட்டியிட வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி என்று சொல்வார்கள்.

இரவு 8–20

இன்னும் கொஞ்ச நாளில் வீட்டிற்குப் போகப் போகிறோம். இப்போதே, மறுபடியும், நன்றி, எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டேயிருந்தீர்களென்றால், அதிலேயும் போட்டா போட்டி போட்டுக்கொண்டு எவன் எழுதிக் கொடுக்கிறான் என்று தெரியவில்லை. பத்திரம் எழுதுவதைப் போன்று எவனோ ஒருவன் வந்திருக்கிறான். வரை, வரை, வரை என்று எழுதிக்கொடுத்துவிட்டு, நான் பாரு, நீ பாரு என்று கவிதை நடையில் போட்டிருக்கிறான். தயவுசெய்து, கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறேன், இந்த மன்றத்தில் அவையெல்லாம் உகந்தது அல்ல. இந்த மன்றத்தினுடைய கண்ணியத்திற்கு ஏற்புடையதல்ல. என் தலைவர்மீது எனக்கு நம்பிக்கை உண்டு; மரியாதை உண்டு. உங்கள் தலைவர்மீது உங்களுக்கு நம்பிக்கை உண்டு; மரியாதை உண்டு. அதை யாரும் மாறுபடுத்த முடியாது. அதனால்தான், அங்கு, அங்கு கட்டுப்பட்டு உட்கார்ந்திருக்கிறோம். நான் தளபதியைப் பார்த்து, தளபதி, தளபதி, தளபதி என்று நான் சொல்வதனாலேயே, அவரும் மகிழ்வது இல்லை; நானும் உயர்வது இல்லை. இன்னொருத்தன் சொல்லிக்கொண்டிருக்கிறான், படிக்கிறான் பார் என்று. அது தேவையே இல்லை. எனவே, இந்த மன்றத்தினுடைய கண்ணியத்திற்காகச் சொல்கின்றேன்; வர்ணனையை விடுங்கள்; subject–ஐப் பேசுங்கள். அதில் எந்தவிதமான குறையும் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் எடுத்துக்கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

M.L.A.-*க்கள் சம்பளம் கொடுக்கிறோம்—நிதிநிலைமைக்கேற்ப பின்னால் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார். நிச்சயமாக செய்வார். அதனால் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை. நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது,* ** *என்று சொன்னதை, நீங்களே அவைக் குறிப்பிலிருந்து நீக்க சொல்லிவிடுங்கள். அந்த வார்த்தையை நீக்கிவிடுகிறேன். அது, உங்களுக்கு* flow-*ல் வந்துவிட்டது. அதைப்போல, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்மீது* ** *நம்முடைய மாண்புமிகு முதல்வர் இந்த அறிவிப்பை வழங்கியிருக்கிறார் என்று சொல்லியிருப்பதில், அந்த* ** *என்ற வார்த்தையை நீக்கலாம்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான் சொல்லியிருந்தால், அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள். அது ஒன்றுமில்லை. திரு. இரா. அருள் அவர்கள் பேசும்போது, அவர்* picturise *செய்ததைப் பார்த்தீர்களென்றால், வேறுமாதிரி இருந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் இந்த அவையின் நேரத்தில், ஒரு நிமிடத்தை எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள், இதுபோல், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த* subject-*ல் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள், "இன்று காலையில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் 4 பேர் வந்தார்கள். அவர்களில், ஒருவரின் சட்டை கிழிந்திருந்தது; ஊசி நூலைக் கொண்டு அதைத் தைத்து, அதோடுதான் என்னைப் பார்க்க வந்தார். நான் பார்த்தவுடன், ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டேன். கண்ணீர் விட்டுவிட்டார். ஆகவே, நான் அவருடைய ஓய்வூதியத்தை உயர்த்துகிறேன்" என்று சொன்னார். அவரின் நூற்றாண்டு விழாவிற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதே தேதியில் கருணையோடு, தாயுள்ளத்தோடு அவர்களுக்கு ஊதியத்தையும்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

உயர்த்தி, மருத்துவத்திற்கும் ஆண்டிற்கு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.75 ஆயிரமாக உயர்த்தி, அவருடைய குடும்ப ஓய்வூதியத்தையும் ரூ.15 ஆயிரமாக ஆக்கிய தாயுள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றப் பேரவைமூலம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிலுரை, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இட்ட கட்டளையை ஏற்று, இங்கே புகழாரம் என்பதை என்னுடைய வாழ்த்துரையில் நிறுத்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளடங்கிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் 38-பொது (மறுவாழ்வு)த் துறை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை சார்பாக பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த—அன்று, முத்தமிழறிஞர் கலைஞருக்கு தளபதி; இன்று, தளபதிக்கு உதயநிதி. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி; தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மண்ணுக்கும் ஒரு மணமும், ஒரு நிறமும் இருப்பதைப்போல ஒரு தத்துவமும் இருக்கிறது. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது தமிழருக்கான தத்துவம்.

உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரும் நம் உறவினரே என்பதை ஏற்றுக்கொண்ட தமிழர் கடல் கடந்து சென்று குடியேறிய நாட்டையும் தங்களுடைய தாய் நாடாகவே கருதினர். அந்த நாட்டின் காடு, மலைகளைத் திருத்தி, இரயில் தண்டவாளங்களை அமைத்து, அந்த நாட்டின் பூர்வீகக் குடிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், பண்பாட்டு மேன்மைக்கும் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள்.

இரவு 8—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த மொரீஷியஸ், ரீயூனியன், சீஷெல்ஸ் ஆகிய தீவுகளுக்குத் தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டு 294 ஆண்டுகளாகின்றன. இலங்கைக்கு தமிழர்கள் அழைத்து செல்லப்பட்ட 200 ஆம் ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டில்

நடைபெறவுள்ளது. இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஜாவா, சுமத்ரா தீவுகளை சோழ மன்னன் இராஜராஜ சோழன் வெற்றி கொண்டு 1,000 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. வெற்றி பெற்ற நாடுகளையெல்லாம் அடிமை காலனி நாடுகளாக மாற்றும் எண்ணம் இருந்திருந்தால், இன்று தென் கிழக்கு ஆசிய நாடுகளெல்லாம் தமிழ் பேசும் நாடுகளாக இருந்திருக்கும். ஆனால், யாரையும் அடிமைப்படுத்த விரும்பாத தமிழரின் மனநிலையால் 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் வெற்றி கொண்ட நாடுகளில் இன்று வரலாற்று எச்சங்களை மட்டுமே நாம் காண்கிறோம். தமிழர்கள் உரிமைகளை மறுத்து கடல் கடந்து கொண்டு செல்லப்பட்டிருந்தாலும், அவர்களின் வாரிசுகள் இன்று அந்த நாடுகளை ஆளுகின்ற அளவிற்கு உயர்ந்துள்ளனர். சென்றடைந்த நாடுகளைத் திருத்தி செம்மையாக்கி, அந்தந்த நாடுகளின் பூர்வக்குடிகள்போல அந்த மண்ணுடன் ஐக்கியமாகி உள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறை கொண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், "தமிழர்களே, தமிழர்களே என்னை கடலில் தூக்கிப் போட்டாலும் நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன்; அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்" என்று சொன்னதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள், தமிழ்நாட்டிற்கு வெளியே இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வாழுகின்ற தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு இயற்றிய வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்த அயலகத் தமிழர் நல வாரியத்தை 2022 ஆம் ஆண்டில் 16 உறுப்பினர்களைக் கொண்ட வாரியமாகக் கட்டுருவாக்கி, கடலால் பிரிந்த சொந்தங்களை அன்பினால் ஒன்றிணைத்தார்.

வேலைவாய்ப்புகளுக்காகவும், தொழில் புரியவும், உயர் கல்வி கற்கவும் தமிழர்கள் கடல் கடந்து செல்வது தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது. இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், இவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் தமிழ்நாட்டில் பாதுகாப்பு அரணாகத் திகழ்கின்ற வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம், வெளிநாடு செல்வோர் குறித்த தரவுகளை ஏற்படுத்தி, பதிவுகள் செய்து, அடையாள அட்டை வழங்கி, காப்பீட்டு வசதியை

உறுதி செய்து, அயல்நாட்டிற்குச் செல்வோருக்கான முதற்படியை எளிமையாக்கிக் கொடுக்கிறது. அயல்நாட்டிற்குப் பணியின் நிமித்தம் செல்லும் குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த தமிழர்களுக்கு இன்னல் நேர்ந்தால், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவும் வகையில், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்குதல் முதலிய பணிகளையும் இவ்வாரியம் மேற்கொள்ளும். அயலகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு ஆலோசனைகள் வழங்க கட்டணமில்லாத் தொலைபேசி வசதி ஏற்படுத்துதல், வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகளை ஏற்படுத்துதல், குடியேறிய நாடுகளில் தேவைப்படும் நேரங்களில் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற சேவைகளும் இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்பாடு மற்றும் அறிவுசார் நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பினை அங்கீகரிக்கவும், ஒவ்வோராண்டும் ஜனவரி மாதம் 12 ஆம் தேதியை அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையடுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் அயலகத் தமிழர் தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்கள் நேரடியாகவும், இணையவழி மூலமாகவும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரவு 8–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் “உலகெங்கும் தமிழ்” என்ற கருப்பொருளில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில் 40–க்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல் பதவிகளில் பங்குபெற்றோர், தற்போது பதவியில் உள்ளவர்கள், தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் விரிவான ஆய்வுகள் மேற்கொண்ட தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும்; புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய் தமிழ்நாட்டில் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பைப் புதுப்பிக்கும் வண்ணம் ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு

அழைத்து வர ஏற்பாடு செய்யப்படும்; அயல்நாடுகளில், வெளி மாநிலங்களில் பணிக்குச் சென்று எதிர்பாராதவிதமாக இறந்து விடும் தமிழர்களின் குடும்பங்களுக்கு மாத ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்; அயல்நாடுகளுக்குச் செல்வோர் குறித்த தரவு தளம் ஒன்று ஏற்படுத்தப்படும் என முத்தாய்ப்பான நான்கு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேமதுர தமிழோசை திசையெல்லாம் பரவ வகை செய்ய வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்க ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இணையவழியில் எளிய தமிழில் பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-4-2023 அன்று துபாயில் டேரா என்ற பகுதியில் பணிபுரிந்து வந்த கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ராமராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த 43 வயதான திரு. இமாம் காசிம் மற்றும் 49 வயதான திரு. குடு என்ற முகம்மது ரபீக் ஆகியோர் தீ விபத்தில் இயற்கை எய்திய செய்தி அறிந்து இறந்தவர்களின் உடல்களைத் தமிழ்நாட்டிற்கு விரைவில் கொண்டு வந்து, பூத உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் நேற்று இறந்தவர்களின் பூத உடல்களை சொந்த ஊரில் உறவினர்களிடம் ஒப்படைத்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கியதைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஹ்ரைனுக்கு வேலைக்குச் சென்று அங்கு 4 மாதங்களுக்கு முன்னர் நடந்த ஒரு விபத்தில் கால் இழந்த புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பெரியார் நகரைச் சேர்ந்த சுப்பையா-அழகி தம்பதியரின் மகன் வீரபாண்டி என்பவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தாயகம் மீட்டு வந்து ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவரை நேற்று முன்தினம் மருத்துவமனைக்குச் சென்று நலம் விசாரித்து,

தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்க மருத்துவக் குழுவைக் கேட்டுக்கொண்டேன். இதுபோல தகவல்கள் கிடைக்கப்பெறுகின்ற இனங்களிளெல்லாம் விரைந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு நடத்தியபோது, உக்ரைன் நாட்டில் மருத்துவம் படிப்பதற்காகத் தங்கியிருந்த மாணவர்களைப் பாதுகாப்பான முறையில் அழைத்து வருவதற்காக போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக 1,524 மாணவர்கள் அரசு செலவில் அழைத்து வரப்பட்டு, மாணவர்களின் சொந்த ஊர்களில் அவர்களின் பெற்றோர்கள் வசம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டனர் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட இந்தியர்கள் தகவல் தொழில்நுட்ப வேலை என்ற போர்வையில் கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் எல்லைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சட்ட விரோத இணையதள வேலைக்குக் கட்டாயப்படுத்தி, மறுப்போரை துன்புறுத்தியதாகத் தகவல் கிடைக்கப் பெற்றதை அடுத்து ராஜாங்க ரீதியாக மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக 73 தமிழர்கள் தமிழ்நாடு அரசு செலவில் பத்திரமாக அழைத்து வரப்பட்டு, அவர்களின் குடும்பத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்கு வெளிநாட்டிற்குச் சென்று அங்கு சிக்கிக் கொள்வோர், உடல் நலம் பாதிக்கப்படுவோர் மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கும், வெளிநாடுகளில் எதிர்பாரா வகையில் இயற்கை எய்துவோரின் பூத உடல்களைக் கொண்டு வருவதற்கும், சுழல் நிதியாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 கோடி மாண்புமிகு தளபதியார் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதியைக் கொண்டு இதுவரையிலும் 1,685 நபர்கள் மீட்டு தாயகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். 323 பூத உடல்கள் கொண்டு வரப்பட்டு சொந்த ஊரில் குடும்பத்தினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள செய்தியைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இரவு 8–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் நலனில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் தத்துவத்தின் அடிப்படையில் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் மறுவாழ்வு தேடி அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்களின் நலனில் மாறாத பாசம் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசான தளபதியார் அவர்கள் 27–8–2021 அன்று சட்டமன்றப் பேரவையில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள். ரூபாய் 30 கோடி செலவில் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை வசதிகள் ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாயில் அவர்களுக்குத் துணிமணிகள், பாத்திரங்கள் வழங்குகின்ற நிலை, அதேபோல, 10 கோடி ரூபாயில் முகாம், 5 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற மேம்பாடு, 321 சுய உதவிக் குழுக்களுக்கு 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 300 மகளிர் உதவும் சங்கங்களைப் புதிதாகத் துவக்கி சுழல் நிதி வழங்குதல். . . (குறுக்கீடு) தலைப்புகள்தான் சொல்கிறேன்.

பாரதப் பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு பெற இயலாதவர்களுக்கு ரூபாய் 7 கோடி செலவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், மேலும் இந்த ஆண்டு 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அந்த மானியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டயப் படிப்பிற்கு ரூ.2,500/–லிருந்து ரூ.10,000/– ஆகவும், இளநிலை கல்வி மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு ரூ3,000/–லிருந்து ரூ.12,000/–ஆகவும், இளநிலை தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு ரூ.5,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவினை வழங்கி ரூபாய் 2 கோடியே 71 இலட்சம் விடுவிக்கப்பட்டு, இன்றைக்கு செயல்படுத்தப்படுகிறது.

முகாமிற்கு உள்ளேயும், வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால சவால்களுக்குத் தீர்வு காண ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் கூட்டங்கள் இதுவரை 5 முறை நடைபெற்றுள்ளன. சட்ட

ஆலோசனைக் குழுக் கூட்டங்களும் தொடர்ந்து நடந்து வருகின்றன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுவாழ்வு முகாம்களில் சிதிலமடைந்துள்ள 7,469 வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்ட முதற்கட்டமாக ரூபாய் 177 கோடி செலவில், 3,510 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு, இப்பணிகள் அனைத்தும் முடிவடையும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டு மீண்டும் 3,500 வீடுகளுக்கு நிதியுதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் அனைத்து மக்களுக்கும் உதவும் வகையில் ரூபாய் 196 கோடியே 83 இலட்சம் மதிப்பில், 40 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியும், 500 டன் ஆவின் பால் பவுடரும், 101 டன் உயிர் காக்கும் மருத்துவப் பொருட்கள் இலங்கைக்கு சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, அந்தப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்புகள் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுவாழ்வு முகாம்களில் வசிக்கின்ற இலங்கை மக்களுக்கும், தாயகம் திரும்பிய தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்களைச் செய்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துறை சார்பாக நன்றியினைத் தெரிவித்து நேரத்தின் அருமை கருதி, அயலகத் தமிழர்களின் நலன் தொடர்பாகப் பின்வரும் அறிவிப்புகளை இந்த அவையில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

பொதுத் (மறுவாழ்வு) துறை

1. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கூடங்கள் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

*இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு, அவர்கள் அதன்மூலம் தையற்கலை, பாரம்பரிய முறையில் உணவுப் பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை அவர்கள் வசிக்கும் வீடுகளிலேயே செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் செய்யும் தொழில்கள்மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதில் சுணக்கம் உள்ளது. அவர்களுக்கென தொழிற்கூடங்கள் (*work shed*) அமைத்துத் தரும் நேர்வில், அவர்கள் மேற்கொள்ளும் தொழிலினை சீரிய முறையில் செய்வதோடு, அதன்மூலம் பொருள் ஈட்டி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள இயலும். இதன்மூலம் அவர்கள் தொழில் முறையை ஒன்றிணைத்து, வணிகத்துடன் ஒருங்கிணைக்க ஏதுவான சூழல் ஏற்படும்.*

முதற்கட்டமாக, 10 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, முகாம் ஒன்றுக்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்கூடம் என்ற வகையில் (அதன் நிலையான செலவுகள் உட்பட) 10 முகாம்களில் 3 கோடி ரூபாய் செலவில் 10 தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.

இரவு 8–40

2. இருநூறு புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும் நிலையில், அவர்களின் சுயசார்புத்தன்மை நிலைநிறுத்தப்படுவதுடன் அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது.

[திரு. செஞ்சி K.S. மஸ்தான்] [2023 ஏப்ரல் 19

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்படும் 321 சுய உதவிக் குழுக்களுக்கு "சமூக முதலீட்டு நிதியாக"தலா ரூபாய் 50,000/–த்துடன் கூடுதலாக ரூபாய் 75,000/– வீதம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் 2021–2022 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டது. மேலும், புதிதாக 300 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் ரூ.1.25 இலட்சம் சமூக முதலீட்டு நிதியாக 2022–2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், மேலும் 200 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றிற்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதம் 200 குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. சுய தொழில்புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு சுய தொழில் தொடங்க 2 கோடி ரூபாய் மூலதன நிதியாக ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரும் அதே வேளையில், சுய தொழில்புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும். இலங்கைத் தமிழர் ஏராளமானோர் படித்தும், தகுதி இருந்தும் அவர்களின் சட்டரீதியான தகுதியின்மையால் வங்கிகளில் கடன் வாங்க இயலாத நிலையில், தினக்கூலி மற்றும் தங்கள் படிப்பிற்கு இணையில்லாத தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இலங்கைத் தமிழர்கள் சிறு மற்றும் குறு தொழில்கள் தொடங்க மூலதன நிதி இரண்டு கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக வழங்கப்படும். இதன் மூலமாக ஆண்டுதோறும் சுழற்சி முறையில் தொழில்முனைவோர் தேர்வு செய்யப்பட்டு மூலதன நிதி வழங்கப்படும்.

4. 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்

இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டு, கடந்த 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூபாய் 9.50

கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,000 இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நடப்பு ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டு, 2023–2024 ஆம் நிதியாண்டில் மேலும் 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் கல்வி பயின்ற இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதுடன், அவர்களது பொருளாதார நிலையும் மேம்பாடு அடையும்.

5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலை வேண்டி வருபவர்களின் விண்ணப்பங்களை நேரடியாகப் பெற்று பதிவு செய்து வந்தது. அனைத்துத் தரப்பு மக்களும், தொலைதூர இடத்தில் இருப்பவர்களும் பயனடையும் வகையில் வெளிநாட்டு வேலைக்குச் செல்ல அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ள ஏதுவாக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை, தமிழ்நாடு அரசு தரவுதள மையத்துடன் (Government Data Centre) இணைந்து 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

வெளிநாட்டில் வசிப்பவர்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வழங்கும் சேவைகளை மேம்படுத்தவும் இந்தக் கைபேசி செயலி மற்றும் இருமொழி இணையதளம் உதவிபுரியும்.

6. ரெப்கோ வங்கியில் 10 புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்படும்

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக

நிறுவப்பட்டதாகும். தற்பொழுது, இந்த வங்கி 108 கிளைகளைக் கொண்டு தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இயங்கி வருகிறது. இதில். 83 கிளைகள் தமிழ்நாட்டிலும், 10 கிளைகள் ஆந்திராவிலும், 1 கிளை தெலுங்கானாவிலும், 8 கிளைகள் கர்நாடகாவிலும், 4 கிளைகள் கேரளாவிலும், 2 கிளைகள் புதுச்சேரியிலும் உள்ளன. தாயகம் திரும்பியோர் அதிகம் வசிக்கும் இடங்களில் வங்கியின் வர்த்தகத்திற்கான வாய்ப்புகளைக் கருத்தில்கொண்டு இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 10 புதிய கிளைகள் தொடங்கப்படும். இதற்கான செலவினம் ரெப்கோ வங்கியால் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு இப்போது நான் தெரிவித்துள்ள விளக்கங்கள் திருப்தியளிக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபையிலுள்ள அனைவருக்கும் நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ரூ.408,07,67,000/–, மூலதனக் கணக்கில் ரூ.74,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(*வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.*)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.698,53,19,000/–, மூலதனக் கணக்கில் ரூ.150,00,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.8,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.87,66,87,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஊ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.53,33,16,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

(எ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,33,96,15,000/–, மூலதனக் கணக்கில் ரூ.390,02,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.112,62,53,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

இரவு 8–45

(ஏ) கோரிக்கை எண் 35-மனிதவள மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 35–மனிதவள மேலாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மனிதவள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.157,65,82,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,98,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஐ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,208,44,72,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

2023 ஏப்ரல் 19] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (20–4–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

107. 2020–2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தொகுப்பு தணிக்கை அறிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2014) 20 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

108. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

109. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

110. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் எழுபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

111. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 52(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

112. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தணிக்கை